
விலை
ரூபா
20.00

www.onlineuthayan.com


ஈரான் மீது தாக்குதல் 9


பிரமாண்ட சூரிய உதயம் 10

அணு ஆயுத நீர் மூழ்கி 11


போட்டுத் தாக்குகிறது ஆஸி. 24


பக்கங்கள்: 34

★

# உதயன்

சுடர் 27
கதிர் 60

வள்ளுவர் ஆண்டு 2043 தை 11 புதன்கிழமை (25/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### கலாம் மௌனம்

இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது, 13 + குறித்து எதுவித கருத்தும் கூறாது மௌனம் காத்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், 13 + தொடர் பாகவும் அவருடன் கலந்துரையாடிய தாகக் குறிப்பிட்டபோதும் அது பற்றிய விளக்கம் எதுவும் கூறாது மௌனம் சாதித்துள்ளார்.

### வடக்கு, கிழக்குக்கு தாதியர் நியமனம்

5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் சேவையை பூர்த்தி செய்த, இதுவரையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றாத தாதியர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கான நியமனங்களை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு நேற்று செவ்வாய்க்கிழமை தீர்மானித்துள்ளது.

### காணாமல் போனோரின் உறவுகளின் ஊடக மாநாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்ட தமது உறவினர்களை விடுதலை செய்யுங்கள் அல்லது அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்ற விவரங்களையாவது வெளியிடுமாறு கடத்தப்பட்டோரின் மனைவிமார் மற்றும் தாய்மார்கள், சகோதரிகள் ஆகியோர் நேற்று நடத்திய ஊடக மாநாட்டில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### சென்றவர்கள் வந்தனர்

போர் காரணமாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழர்களில் 56பேர் நேற்று செவ்வாய்க்கிழமை நாடு திரும்பினர். இவர்களில் 21 பெண்களும், 18 வயதுக்கு குறைந்த 15 சிறுவர்களும் அடங்குகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பு இவர்கள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

### இந்திய மீனவர் மீது பெற்றோல் குண்டுவீச்சு


இந்திய மீனவர்கள் மீது நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினர் பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்திய மீனவர்கள் சுமார் 600 பேர் தலைமன்னார் அருகே சென்ற போதே, இலங்கைக் கடற்படையினர் பெற்றோல் குண்டு வீசி தாக்கினர் என்று மீனவர்கள் கூறினர்.

### பொன்சேகாவுக்கு ஆபத்தில்லை

வெலிக்கடை, மகஸின் சிறைச்சாலையில் நேற்று ஏற்பட்ட மோதலால் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஆபத்து எதுவும் ஏற்படவில்லை என்று சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

# போர்க்களமானது மகஸின்!

## 30 பேர் படுகாயம்; இருவர் கவலைக்கிடம் தமிழ்க் கைதிகளுக்கு மரண அச்சுறுத்தல்



கொழும்பு, ஜன. 25

இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ள கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் சிங்கள கைதிகளுக்கும், சிறைச்சாலை அதிகாரிகளுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல்நிலை உக்கிரமடைந்து மோதலாக மாறியதால் நேற்று போர்க்களமாகக் காட்சியளித்தது மகஸின் சிறைச்சாலை வளாகம்.

மூடிய அறைகளுக்குள் சினிமா பாணியில் அரங்கேறிய இந்தப் பயங்கரமான மோதல் சம்பவத்தால் மூன்று சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 30 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த கைதிகளுள் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக

27

# தமிழருக்கு நீதிவழங்க தவறியுள்ளது இலங்கை

## சர்வதேச மன்னிப்புச்சபை காட்டமான குற்றச்சாட்டு

கொழும்பு, ஜனவரி 25

வன்னியில் நடந்த இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்க இலங்கை அரசு தவறிவிட்டது என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் விமர்சனம் செய்துள்ளது. "போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கவோ பொறுப்புக்கூறவோ இலங்கை அரசு தவறியுள்ளது. மாறாகப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற இரத்தம் தோய்ந்த நடத்தைகள் பற்றிய குற்றச்சாட்டுகளில் இருந்து இராணுவத்தை இலங்கை அரசு விடுவித்துள்ளது."

-இவ்வாறு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான உலக மனித உரிமைகள் நிலைமைகள் குறித்த அறிக்கையை மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

90 நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் குறித்து 676 பக்கங்களில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் இலங்கை குறித்துக் கூறப்பட்டுள்ளதாவது:-

**ஊடக அச்சுறுத்தல் தொடர்கிறது**

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கு நடவடிக்கையெடுக் காமல்அவர்களைப்

27

## சம்பந்தன் – கோத்தபாய கைதிகள் பற்றிப் பேச்சு

கொழும்பு, ஜன. 25

மகஸின் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உட்பட்ட இதர தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் உறுதியளித்துள்ளார்.

நேற்று மகஸின் சிறையில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதையடுத்து, தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் சிலர் கைதிகளின் பாதுகாப்பு குறித்து மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. அரியநேத்திரனிடம் கவலை வெளியிட்டிருந்தனர். இதனையடுத்து, அரியநேத்திரன், கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு மட்டக்களப்பிலிருந்து தொலைபேசியூடாக இந்த விடயம் குறித்துத் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் உடனடியாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை தொலைபேசியூடாகத் தொடர்புகொண்ட கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், சிறையிலுள்ளதமிழ்க் கைதிகளின்

27

## மீள்குடியேற்றம் பற்றி ஆராய ஜனாதிபதி செயலணி வருகிறது

வவுனியா, ஜன. 25

உள்ளூரில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களுக்கு அவர்கள் தங்கியிருக்கும் இடத்திலேயே காணிகளை வழங்குவது தொடர்பிலும், அல்லது அவர்களுக்கு மாற்றுக் காணிகளை ஏற்பாடு செய்வது தொடர்பிலும் ஆராய்வதற்கென மீள்குடியேற்றத்துக்கான ஜனாதிபதி செயலணி வடக்குக்கு வருகை தரவுள்ளதாக செயலணியின் செயலாளர் திவாரட்ண தெரிவித்தார்.

மீள்குடியேற்றத்துக்கான ஜனாதிபதி செயலணியின் வடமாகாணத்துக்கான மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

27

## தனி ஈழத்தைத் தாரைவார்க்கத் தயாராக வேண்டும் அரசு

### தேசப்பற்றுள்ள இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 25

பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதற்கு அரசு இணங்குமானால் தமிழர்களுக்குத் தனி ஈழத்தை வழங்குவதற்கும் அது தயாராகவேண்டும் என அதிரடியான அறிவிப்பை விடுத்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

இனவாதக் கோரிக்கைகளைப் பரிசீலிப்பது மாபெரும் தவறு என்பதை உணர்ந்து அரசு செயற்படவேண்டும் என்றும் அந்த அமைப்பு ஆலோசனை வழங்கியுள்ளது.

13 + தொடர்பாக 'உதயனு'க்குக் கருத்து வெளியிடும்போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்

27

## ஓயவில்லை பிரிவினைவாதிகள்

### - ஒப்பாரி வைக்கிறார் விமல்

கொழும்பு, ஜன. 25

நாடு இரண்டுபட்டிருந்தால் தென் சூடானுக்கு ஏற்பட்டிருக்கும் நிலையே இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கும். 'மஹிந்த சிந்தனை'யின் எதிர்கால நோக்கின் மூலம் வளமான நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையிலும், நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிக்கும் பிரிவினைவாதிகளின் நடவடிக்கைகள் இன்னும் ஓயவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

மத்தேகொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன ரீதியாகப் பிளவுபட்ட மக்கள் கொலைவெறியுடன் [illegible]

27

## இலங்கை - இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க தலா 3 நாள்கள்

### இரு நாடுகளின் பிரச்சினைக்கு கலாமின் புதுயோசனை

கொழும்பு, ஜன. 25

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை இரு நாடுகளுக்கும்இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், இலங்கை வந்துள்ள இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மீன்பிடி விவகாரம் தொடர்பில் புதிய யோசனையொன்றை நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது முன்வைத்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது தான் இந்த யோசனையை முன்வைத்தார் எனவும் இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு வந்த இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நேற்று ஊடகவியலாளர்

28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ந்து உதவ விருப்பம்

## ஐ.சி.ஆர்.சி. தலைவர்

கொழும்பு, ஜன. 25
இலங்கை இனப்பிரச்சினையினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் துன்பங்களை கூடியவரையில் ஆக்கபூர்வமாகவும் அர்த்தமுள்ள வகையிலும் செயல்பட்டு களைந்தெறிவதற்கு இலங்கையில் உள்ள செஞ்சிலுவை சர்வதேசக் குழு தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு விரும்பம் கொண்டுள்ளது. பிணக்கின் எதிர் விளைவுகளினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் - அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளவர்கள் தம் குடும்பங்களில் இருந்து பிரித்து வைக்கப்பட்டுள்ள, தடுப்புக் காவலில் உள்ளவர்கள், கணக்கெடுக்கப்படாமலும் பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையிலும் உள்ள குடும்பங்கள் ஆகியவர்களுக்கு தொடர்ந்தும் உதவுவதற்கு சர்வதேசக் குழு அக்கறை கொண்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கையில் உள்ள சர்வதேசக் குழுவின் தலைவர் யிவெஸ் கியோவொன்னொனி.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் மாதாந்த சஞ்சிகையான செய்திக் கடிதத்தில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இதனை அவர் குறிப்பிட்டுள்ளார். 'ஐ.சி.ஆர்.சி. ஒபரேசன் அப்டேட்' என்ற இந்த நிறுவனத்தின் முந்தைய காலாண்டு சஞ்சிகைக்கு மாற்றீடாக இப்பொழுது இந்த ''நியூஸ் லெட்டர்'' என்ற பருவ கால ஏடு வெளியிடப்பட்டுள்ளது. கொழும்பில் தனது தலைமையகத்தைக் கொண்டுள்ள செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் தலைவராக யிவெஸ் கியோவொன்னொனி பொறுப்பேற்றுள்ளார். அந்தக் கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ள சில கருத்துக்கள் வருமாறு:



இலங்கையிலுள்ள அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் குறிப்பாக ஐ.நா. முகவர் அமைப்புகள் ஆகியவையும் ஆயுதப் பிணக்கினால் ஏற்பட்ட விளைவுகளுக்கு தீர்வு காண்பதற்கு முயன்றுவருவதை நாம் அறிவோம். எமது நிபுணத்துவ அனுபவங்களின் காரணமாக சில குறிக்கப்பட்ட துறைகளில் ஏற்கனவே இடம்பெறும் முன் முயற்சிகளில் எம்மால் மேலதிகமாக உதவ முடியும். இந்த மாதிரியான முன் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுடன் கைகோர்த்துக்கொண்டு செயல்படுத்துவதற்கு நாம் விரும்புகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**யாழ். வவுனியா கிளைகள் மூடப்பட்டன**

2011ஆம் ஆண்டு பெப்ரவரி மார்ச் மாதங்களில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் யாழ்ப்பாணம் வவுனியா கிளைகள் மூடப்பட்டன. அவை மூடப்படுவதற்கு முன்னர் குறித்த மாவட்டங்களில் சுமார் 21 வருடங்களும் 14 வருடங்களும் முறையே பாராட்டும்படியான மனித நேய பணிகளைச் செய்திருந்தன. இவைகளில் பணி புரிந்தவர்களில் மூவர் 20 வருடங்களுக்கு மேலும் 9 பேர் 15 வருடங்களுக்கு மேலும் 20 பேர் 10வருடங்களுக்கு மேலும் பணி புரிந்திருக்கிறார்கள்.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு தனியாகவும் இலங்கைக் குழுவுடன் இணைந்தும் மேற்கொண்ட பணிகள் பற்றியும்திட்டங்கள் பற்றியும் இந்த ஏட்டில் வர்ணப் படங்களுடன் விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ப)

# சிசுவைத் தோண்டி எடுத்து விசாரணை பெற்றெடுத்த தாய் பொலிஸாரால் கைது

## கிளி. கண்ணகைபுரத்தில் சம்பவம்

கிளிநொச்சி, ஜன.25
பெற்ற குழந்தையை வீட்டின் பின்புறமாக புதைத்தார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி கண்ணகை புரத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை குறித்த பெண் தான் பெற்றெடுத்த பெண் குழந்தையை கொலை செய்து வீட்டின் பின்புறமாக குழி தோண்டிப் புதைத்துள்ளார். சம்பவம் தொடர்பாக கிராம மக்கள் கிராம சேவகருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் குழி தோண்டிப் புதைக்கப்பட்ட இடத்தையும் அடையாளம் கண்டனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அதை அடுத்து சிசுவின் சடலத்தைத் தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை நடத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன் குறித்த பெண்ணையும் கைது செய்ய உத்தரவிட்டார்.

சம்பவ இடத்து விசாரணைகளின் போது தனக்கு 41 வயது எனவும் நான்கு பிள்ளைகளுடன் இருப்பதாகவும் கணவருக்கு 61 வயது எனவும் குறிப்பிட்டார். தனக்கு போருக்கு முன்னரும் இறந்த நிலையில் குழந்தை பிறந்தபோது வீட்டின் பின்புறத்திலே அடக்கம் செய்ததாகவும் தெரிவித்தார். (10-6)

# மீனவர் பிரச்சினைகள் குறித்து இந்திய அரசுடன் பேசுவேன்

## கலாம் யாழ்ப்பாணத்தில் கூறினார்

யாழ்ப்பாணம், ஜன.25
இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வகையில் இந்திய அரசுடன் பேசுவேன் என இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தமை மகிழ்ச்சியளித்தன.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பின் தலைவர் சி.தவரட்ணம்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை சந்தித்து இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி மகஜர் ஒன்றை சி.தவரட்ணம் கையளித்தார்.

அந்த மகஜரைப் பெற்றுக் கொண்ட அப்துல் கலாம் இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் இடையிலான பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுவேன் எனக் கூறினார். இது எமக்கு மிகுந்த மன ஆறுதலைத் தருகிறது என்று கூறினார் தவரட்ணம்.

இந்த விடயம் தொடர்பாக தவரட்ணம் மேலும் கூறியதாவது:-

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நாம் காத்திருந்த போது மிக ஆர்வமாக எம்மை உள்ளே அழைத்து எமது மகஜரைப் பெற்றுக் கொண்டார் கலாம். நாம் வழங்கிய மகஜரை மிக ஆர்வமாக உடனேயே வாசித்து பார்த்தார்.

அத்துடன், பாரம்பரியமாக மிகவும் ஒற்றுமையாக மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்த இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் இப்போது ஏன் பிரச்சினை எழுகிறது என்றும் அவர் எம்மிடம் கேட்டார்.

இந்திய மீனவர்களின் தொழில் முறைமைகள் தான் பிரச் சினை. அவர்களது தொழில் முறைமை கடல் வளத்தைப் பாதிக்கிறது. அதன் காரணமாகத் தான் பிரச்சினை என நாங்கள் அவருக்குப் பதிலளித்தோம் என்றார் - தவரட்ணம். (த-14)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜன.25
வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சி இன்று காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சரவணை கிழக்கு பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-167)

## பல்கலை மாணவனுக்கு நீதிமன்று எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.25
கண்காட்சியில் அநாகரிகமாக நடந்து கொண்ட குற்றத்துக்காக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனை எச்சரிக்கை செய்து எதிர்காலத்தில் அப்படி நடந்து கொள்ளக் கூடாது என்று மாணவனென்பதால் அபராதமின்றி அரச செலவாக ஆயிரம் ரூபா செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வருட இறுதியில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த கண்காட்சி ஒன்றின் போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குறித்த மருத்துவ பீட மாணவன் மது போதையில் பிறருடன் அநாகரிமான முறையில் நடந்து கொண்டார். இதனால் அவரைப் பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். நிலுவையில் இருந்த இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் அவரை எச்சரிக்கை செய்து விடுவித்தார். (ங-4)

### யாழ். வாசியிடம் மோசடி; தென்பகுதியைச் சேர்ந்த இருவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜன.25
யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒருவரிடம் எட்டு லட்சம் ரூபா பணத்தைக் கடனாகப் பெற்று மோசடி செய்தார்கள் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த இருவர் தலா 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் இருவரது சார்பிலும் சட்டத்தரணி ஜோனி மதுரநாயகம் முன்னிலையானர்.

நிட்டம்புவ மற்றும் ராஜகிரிய ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரும் யாழ்ப்பாணத்துக்கு வந்து இங்குள்ள ஒருவரிடமிருந்து 6 மாதங்களுக்கு முன்னர் 8 லட்சம் ரூபா பணத்தை வாங்கி மோசடி செய்தனர். இவர்களைக் கைது செய்த பொலிஸார் நேற்று மன்றில் முன்னிலைப்படுத்தினர். அவர்களை பிணை அடிப்படையில் விடுவித்த நீதிவான் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் யாழ். நீதிமன்றில் கையெழுத்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-4)

# பல்கலை கல்விசாரா ஊழியர் நாளை வேலை நிறுத்தத்தில்

யாழ்ப்பாணம், ஜன.25
தமது சம்பளமுரண்பாட்டை நீக்கக்கோரி அனைத்துப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நாளை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். யாழ்.பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களும் இந்தப் போராட்டத்தில் நாளை ஈடுபடவுள்ளனர் என யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தமது சுற்று நிருபத்திற்கமைய சம்பள முரண்பாட்டை தீர்க்க தவறிவிட்டது. இது தொடர்பாக கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் இடம்பெற்ற பேச்சுக்கள் பலனளிக்கவில்லை.

இதையடுத்தே அவர்கள் நாளை ஒருநாள் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர். இதற்குப் பின்னரும் உரிய பதில் கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிவரும் என யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் நிர்வாக உத்தியோகத்தர்களில் இரு தரப்பினருக்கு மட்டும் நன்மையளிக்கும் வகையில் சம்பள அளவு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதனால் சம்பள நிர்ணய ஆணைக்குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, திறைசேரி, உயர் கல்வி அமைச்சு ஆகியவற்றின் மீது தொழிற்சங்கள் வைத்திருந்த நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள சம்பள முரண்பாட்டை உடனடியாகத் தீர்க்கவேண்டும். சம்பள முரண்பாட்டைச் சீர்செய்யும் வரை சகல வகையான கல்விசாரா ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தின் 25 வீதத்தினை ஒரு கொடுப்பனவாக வழங்குமாறும் தொழிற் சங்கக் கூட்டுக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

நாளை இந்த பகிஷ்கரிப்பு நடைபெறும் அதே வேளை, பாதுகாப்பு ஊழியர்கள் மட்டும் தமது கடமையில் ஈடுபடுவர் எனவும் மாணவர் விடுதிகளுக்கான நீர்வழங்கல் சேவை தடைப்படாது எனவும் சங்கம் தெரிவித்துள்ளது. (த-4-15)

# தூக்கில் தொங்கிய பெண்ணின் சடலம்

யாழ்ப்பாணம், ஜன.25
வடமராட்சி, கரவெட்டி கிழக்குப் பகுதியில் வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பப் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பகல் வேளை வீட்டில் எவரும் இருக்கவில்லை. மாலை 6.30 மணியளவில் வீட்டுக்குத் திரும்பிய வீட்டார் கதவுகள் இழுத்துப் பூட்டப்பட்டிருந்ததையும் மின் குமிழ்கள் ஒளிராமல் இருளில் சூழ்ந்திருந்ததையும் கண்டு திகைத்தனர். பின்னர் ஒரு வழியாக வீட்டினுள் சென்று தேடினர். அப்போது அந்தப்பெண் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

அதிர்ச்சியில் உறைந்த அவர்கள் நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் நடத்திய விசாரணையை அடுத்து சடலம் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சடலமாக மீட்கப்பட்டவர் கரவெட்டி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயாரான கிருஷ்ணராஜா செல்லபாக்கியம் (வயது-55) என்பவர்ஆவார். (ஒ-319)

# வன்னித் தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் விரைவில்

யாழ்ப்பாணம், ஜன.25
வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக் கான நிரந்தர நியமனத்துக்கு தற்போது காலம் கனிந்துள்ளது. ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையை தாமதமின்றி விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நேற்றுக்காலை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

கடந்த 6ஆம் திகதி உயர் கல்வி அமைச்சர் வருகை தந்தபோது தொண் டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

எந்தவிதமான தொண்டர் ஆசிரியர்களும் இனி மேல் இருக்கக்கூடாது. முகாம்களிலே ஆசிரியர்கள் பட்ட துன்பத்தை அறிந்துள்ளோம். கற்பிப்பதிலும், கல்வியிலும் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது இடைநிறுத்தப்பட்டாலும் வன்னி மக்கள் பட்ட துன்பத்திற்காகவும் பாடசாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாலுமே தொண்டர் ஆசிரியகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

ஆசிரியர்கள் தமது அறிவு ஆற்றலை மேம்படுத்த வேண்டும், முற்றுப்பெறாது தொடர வேண்டும்- என்றார். (கு-311-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சோதனையைத் தவிர்க்கும் வழியை அரசு நாடாதிருப்பது ஏன்?

இலங்கை அரசாங்கம் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, நாட்டில் நடைபெற்றதாகக் கருதப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்குத் தவறிவிட்டது. அதனால் அடுத்த மாதத்தில் இலங்கைக்கு வந்து நிலைமைகளை நேரில் அறிந்து கொள்வதற்கு உத்தேசித்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளை (நவிப்பிள்ளை) இங்கு வரமாட்டார்; தமது பயணத்தை ரத்துச்செய்துவிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, திருப்திகரமாக அமையவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டியே அவர் தமது உத்தேச இலங்கை விஜயத்தைச் ரத்துச் செய்தார் என்று அறியப்படுகிறது. ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட நம்பத் தகுந்த குற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசு நியமித்த ஆணைக் குழு பதில் அளிக்கத் தவறிவிட்டது என்று நவநீதம்பிள்ளை தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அரசு மீது ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட போர்க்குற்றச் சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுயாதீனமான நிலையில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவந்த கையோடு உலக நாடுகள், மிகக் குறிப்பாக மேற்கு நாடுகள் வலியுறுத்தி வந்தன.

எனினும், தான் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில், ஐ.நா. நிபுணர் குழு தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் அளிக்கப்படும் என்று உலக நாடுகளை நம்பவைத்து சர்வதேச விசாரணையை சாதுரியமாக நிறுத்தி வைத்தது இலங்கை அரசு. அந்தக் கெட்டித்தனத்தில் அமைச்சர்கள் மஹிந்த சமரசிங்கவுக்கும், ஜி.எல்.பீரிஸுக்கும் குறிப்பிடத்தக்க பங்குண்டு.

எனினும், சுயாதீனமான சர்வதேச மட்ட விசாரணை தேவை என்பதற்கான அழுத்தம் தொடர்ந்து அதிகரித்தே வந்தது.

கடந்த வாரத்தில் கூட, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், ஆஸ்திரேலியா, கனடா, நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் வட்டமேசைக் கலந்துரையாடலை நடத்தினர். அந்தக் கலந்துரையாடலில், ஐ.நாவின் செயலாளர் நாயகம் நியமித்த இலங்கை விவகாரம் தொடர்பான நிபுணர் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவரான பேராசிரியர் ஸ்ரீபன் ராட்னரும் கலந்துகொண்டார்.

இத்தகைய பின்னணியிலேயே, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் தமது உத்தேச இலங்கை விஜயத்தை ரத்துச் செய்வதாக அறிவித்துள்ளார். இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டும் என்று வலியுறுத்தத் தவறியதே, நவநீதம்பிள்ளை தமது இலங்கை விஜயத்தை ரத்துச் செய்வதற்கான பிரதான காரணம் என்பது இப்போது இரகசியமல்ல. அவரது அந்த முடிவு சர்ச்சைக்குரிய ஒன்றுமல்ல.

ஆனால், இத்தகைய ஒரு முடிவு வெளிப்படும் என்று இலங்கை அரச தரப்பு எதிர்பார்த்திருக்குமா என்பது சந்தேகமே. எனினும் மார்ச் மாத முற்பகுதியில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாநாட்டில், தன் மீதான போர்க்குற்றம் குறித்த விடயம் பரிசீலனைக்கு, விசாரணைக்கு எடுக்கப்படாமல் தடுத்து நிறுத்த அரசாங்கம் அதீத முயற்சியை மேற்கொள்ளும் என்று நிரம்பவும் எதிர்பார்க்கலாம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மார்ச் மாத அமர்வில், அனைத்துலக ரீதியில் கிளப்பப்படும் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கு அரசு தயாராக உள்ளதாக மனித உரிமைகளுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் மஹிந்த சமரசிங்க முழங்கியிருப்பது அதற்கான முன்னோட்டமாகும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வுகளில் விவாதிக்கப்பட்டால், நாம் கவலைப்பட மாட்டோம். அங்கு மேற்கொள்ளப்படும் அல்லது உருவாக்கப்படும் எந்த நிலைமைக்கும் எமது தரப்பில் பதில் அளிக்கத் தயாராகவே உள்ளோம். அனைத்துலக சமூகம் எந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முனைந்தாலும் எம்மால் முறியடிக்க முடியும் என்று அமைச்சர் சமரசிங்க உறுதிபடக் கூறியுள்ளார்.

பெரும்பான்மை இன மக்களைத் திருப்திப்படுத்தி, அவர்களைத் தொடர்ந்தும் தனக்குப் பக்கத்தில் வைத்திருப்பதாக, அரசு ஒரு புறத்தால் பார்க்கலாம், நோக்கலாம். மறுபுறத்தில், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் ஆதரவைத் திரட்டி, அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் பிரேரணைகளை, தடுக்க முடியும் என்ற தன்னம்பிக்கை அரசுக்கு இருக்குமாயின் தவறன்று.

மிகப்பெரிய போர் ஒன்றை எதிர்கொண்டு அரசு முறியடித்துவிட்டது என்பதால், அது இப்போதைய அரசுக்கு மமதையையும், எதனையும் - எந்த வகையான சவால்களையும்- எதிர்கொண்டு வெல்வோம் என்ற அசகாயத் துணிவையும் கொடுத்திருக்கலாம். ஆனால் போர் மூள்வதற்குக் காரணமாக இருந்த, சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் கொழும்பு அரசுகளின் பேரினவாதப் போக்கும் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டால் சர்வதேச அரங்குகளில் இத்தகைய கடும் சோதனைகளை எதிர்கொள்ள நேரிடாது என்ற மென்மையான உண்மையை அரசு உணர்ந்து கொள்ளத் தவறுகிறது. அதன் எதிர்மறை விளைவே இப்போதைய, சர்வதேச அரங்கின் பொறியில் விழாதிருப்பதைத் தடுப்பதற்கு எடுக்கப்படும் அதீத போராட்டங்கள்.

எத்தனை விதமான ராஜதந்திரங்களைக் கையாண்டாலும், வினை விதைத்தால் வினை அறுக்க வேண்டும் என்ற நியதி உண்டு. இந்த நியதி எல்லா நாட்டுக்கும் எல்லா இனங்களுக்கும் சமூகங்களுக்கும் பொருந்தும் தர்ம மந்திரம் எனலாம்.

சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை நியாயபூர்வமாக வழங்குவதற்கான வழிமுறைகளை வகுப்பதில் அதிக அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் போதி சத்துவரான புத்த பெருமான் வழிகாட்டிய 'தம்மம் சரணம் கச்சாமி' (தர்மம் தலைகாக்கும்) என்ற நெறியைக் கடைப்பிடிப்பதற்கு சிறிய அளவேனும் சிந்திக்கக் கூடாதா?

திணை விதைத்தவர்களால் மட்டுமே அதனை அறுத்து உணவாக்க இயலும். வினை விதைத்தவன் அதன் பெறுபேற்றை அனுபவித்தே ஆக வேண்டும். இது அரசியலுக்கு சிறிதேனும் பொருந்தாது, ஆகையால் தப்பிவிடலாம் என்று நினைப்பது நிகரிலா மடமை.

# 2 லட்சம் குழந்தைகளுக்கு போசாக்குக் குறைபாடு

கொழும்பு, ஜன. 25

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை இலங்கையில் 2 வயதுக்கும் 5 வயதுக்கும் உட்பட்ட ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 970 குழந்தைகள் போஷாக்குக் குறைபாட்டினால் அவதிப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 24 மாதங்களுக்கும் 60 மாதங்களுக்கும் இடைப்பட்ட குழந்தைகளே இவ்வாறு பெருமளவில் போஷாக்குக் குறைபாட்டினால் நலிவுற்று அவதிப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டது.

குழந்தைகள் செயலகத்தினால் செயற்படுத்தப்படும் 'ஒரு கோப்பை பால்' என்ற செயற்திட்டத்தின் தகவல்கள் மூலமாகவே இது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மேற்படி செயற்றிட்டத்துக்கெனக் கடந்த ஆண்டில் 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

**இலங்கையில் 2 வயதுக்கும் 5 வயதுக்கும் உட்பட்ட ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 970 குழந்தைகள் போஷாக்குக் குறை பாட்டினால் அவதிப் படுகிறார்கள்.**

மேற்படி தொகையில் 2011 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை 113.542 மில்லியன் ரூபா வரை குழந்தைகளுக்குப் பால் வழங்குவதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. அதே ஆண்டின் ஒக்ரோபர் 18 ஆம் திகதி 249.93 மில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுக் குழந்தைகளுக்குப் பால் வழங்குவதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் 2011 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்ப வயதுக் குழந்தைகளுக்கான அபிவிருத்தி மையங்கள் மற்றும் முன்பள்ளிச் சிறார்களுக்கெனச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. (த-22)

## நான்கு மாவட்டங்களில் அரிசி ஏற்றுமதி வலயங்கள்

### விவசாய அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜன.25

இலங்கையின் நான்கு மாவட்டங்களில் அரிசி ஏற்றுமதி வலயங்களை நிறுவுவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய அம்பாறை, பொலனறுவை, அம்பாந்தோட்டை மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அரிசி ஏற்றுமதி வலயங்கள் நிறுவப் படவுள்ளன.

கடந்த ஐந்தாண்டு காலத்துக்குள் இலங்கையின் நெல் விளைச்சல் குறிப்பிடத்தக்க மட்டத்தில் அதிகரித்துள்ளதன் காரணமாக ஏற்றுமதிக்குத் தகுதியான தரமான நெல்லைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு

**2015ஆம் ஆண்டளவில் இரண்டு லட்சம் மெற்றிக்தொன் அரிசியை ஏற்றுமதி செய்வதே இலக்கு.**

இந்தச் செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் முதற் கட்டமாக 62 ஆயிரம் ஹெக்ரேயர் நிலங்கள் உள்வாங்கப்படவுள்ளதுடன் 2015ஆம் ஆண்டளவில் இரண்டு லட்சம் மெற்றிக் தொன் அரிசியை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (த-22)

## 2 ஆண்டுகளுக்குள் 1483 பேர் கொலை

கொழும்பு, ஜன.25

கடந்த இரண்டு ஆண்டுக்குள் நாட்டில் ஆயிரத்து 483 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் 760 கொலைகள் 2010 ஆம் ஆண்டிலும், 723 கொலைகள் 2011 ஆம் ஆண்டிலும் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பிள்ளைகளால் பெற்றோர் கொலை செய்யபபட்டுள்ள 35 சம்பவங்களும், பெற்றோரால் பிள்ளைகள் கொலை செய்யப்பட்டுள்ள 41 சம்பவங்களும், கணவனால் மனைவி கொலை செய்யப்பட்டுள்ள 98 சம்பவங்களும், மனைவியால் கணவன் கொலை செய்யப்பட்டுள்ள 9 சம்பவங்களும் இவற்றுள் உள்ளடங்குவதாக ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த இரண்டு ஆண்டுக்குள் 3 ஆயிரத்து 579 பெண்கள் வல்லுறவுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-22)

## முன்வைக்கப்படும் தீர்வுப் பொதியையே தெரிவுக் குழு பரிசீலிக்க வேண்டும்

### கடந்த காலப் படிப்பினையை உணர்ந்து செயற்படக் கோருகிறார் ஹசன் அலி

கொழும்பு, ஜன.25

இனப்பிரச்சினைக்கு அரசு முன்வைக்கும் தீர்வை அல்லது வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரிய கட்சிகளுடன் இடம்பெறும் பேச்சில் எட்டப்படும் இணக்கப்பாட்டை பரிசீலிப்பதாகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைய வேண்டும் - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் வகையில் இதற்கு முன்னர் அமைக்கப்பட்ட குழுக்களுக்கு நேர்ந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு, கடந்தகால படிப்பினைகளை உணர்ந்து செயற்பட்டால் பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துவிடலாம் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாகவே இறுதியான தீர்வு வழங்கப்படும் என அரசு உறுதியாகக் கூறியுள்ளது.

தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுமாறே அரசு நிபந்தனை விதித்துள்ளது. ஆனால், அரசின் இந்தக் கூற்றை எதிர்க்கட்சிகள் நிராகரித்துள்ளன.

இந்நிலையில், எதிர்க்கட்சிகளின் இழுத்தடிப்புப் போக்குக் காரணமாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் சர்வகட்சி குழுவொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தேசித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவதற்கு அரசு தயார் என ஜனாதிபதி இந்தியாவிடம் உறுதியளித்துள்ள நிலையில், செனட் சபை அமைக்கும் யோசனையையும் அரசு முன்வைத்துள்ளது. மறுபுறம் சர்வகட்சிக்குழு அமைக்கும் யோசனையும் உள்ளது. இதனால், தமிழ்பேசும் மக்கள் குழம்பிப் போயுள்ளனர். தீர்வுததிட்டம் திசை மாறிப் பயணிக்கின்றதா என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக அரசின் பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்பொருட்டு இதற்கு முன்னர் அமைக்கப்பட்ட சர்வகட்சிக்குழு உள்ளிட்ட குழுக்களால் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியாமல் போனது. அதன் பரிந்துரைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

பொதுவானதொரு குழு அமைத்தால் அதில் ஏதாவதொரு கட்சி எதிர்ப்பை வெளியிடுவது வழமை. கடந்தகாலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கட்சிகளின் தேவை, விருப்பம் என்னவென்பது குறித்து அரசுக்கு நன்கு தெரியும். எனவே, கடந்த கால படிப்பினைகளைக் கருத்திற் கொண்டு அரசு முன்வைக்கும் ஒரு தீர்வுத்திட்டத்தையோ அல்லது வடக்கு, கிழக்கை பிரதிநிதித் துவப்படுத்தும் பெரிய சிறுபான்மை யின கட்சிகளுடன் இடம்பெறும் பேச்சில் எட்டப்படும் இணக்கப்பாட்டை பரிசீலிப்பதாகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமையவேண்டும். எனக் கூறினார் ஹஸன் அலி.

## நிகழ்வுகள் இன்று

**ஆண்டு விழா**

யாழ். கலாலயா பயிற்சியகத்தின் 27 ஆவது ஆண்டு விழா இன்று புதன்கிழமை (முற்பகல்) 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. கலாலயா மாணவி திருமதி என். வினோத் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற திருமதி நகுலா கணேசலிங்கமும், கௌரவ விருந்தினராக நாவலர் கல்வி நிலைய இயக்குநர் எஸ்.குணநாதனும் கலந்து கொள்வார். (ச)

**கலந்துரையாடல்**

நெடுந்தீவுப் பகுதியின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நெடுந்தீவில் இன்று நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், பொதுமக்களின் பிரநிதிகள் பொது நிறுவனங்களின் பிரநிதிகள் கலந்து கொள்வர்.

**பொதுக்கூட்டம்**

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் இன்று பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியசக்தி தொகுதிகள் விவசாயிகள் ஏமாற்றம்

கிளிநொச்சி, ஜன.25

சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத் தொகுதிகளைப் பெறுவதற்குப் பணம் செலுத்திய கிளிநொச்சி விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரியசக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத் தொகுதிகளை வழங்குவதாகக் கூறி அதற்கான முற்பணம் அறவிடப்பட்டு இரண்டு ஆண்டுகளை எட்டுகின்ற போதும் இவை இதுவரை வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நீர்ப்பாசனத் தொகுதிகளை வழங்குவதாகக் கமநலச் சேவை நிலையத்தால் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டு அதன் பிரகாரம் ஒவ்வொருவரிடமிருந்தும் தலா 10 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டதுடன் மேலும் ஆயிரம் ரூபா சிட்டை எதுவும் இன்றிப் பெறப்பட்டது.

**விவசாயிகளிடமிருந்து 11 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுத் தற்போது இரண்டு ஆண்டுகளை எட்டுகின்றது. ஆனால் இன்றுவரை சூரியசக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்படவில்லை.**

விவசாயிகளிடமிருந்து 11 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுத் தற்போது இரண்டு ஆண்டுகளை எட்டுகின்றது. ஆனால் இன்றுவரை மேற்படி சூரியசக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்படவில்லை. அனைத்தையும் இழந்து, எதுவித வசதிகளும் இன்றி மீளக்குடியமர்ந்த மக்கள் மானிய விலையில் வழங்கப்படும் இந்த நீர்ப்பாசனத் தொகுதிகளை வைத்துத் தமது வாழ்வாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் இந்தப் 11 ஆயிரம் ரூபாவை வழங்கினர்.

இவர்கள் தமது கையிலிருந்த நகைகளை 10 ஆயிரம் ரூபாவுக்கு அடைவு வைத்தும், கடன் வாங்கியும் இந்தப் பணத்தை கமநலச் சேவை நிலையங்களில் கட்டியிருந்தனர். ஆனால் அந்தச் சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத் தொகுதிகள் இதுவரை வழங்கப்படவில்லை. இந்த விவசாயிகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்த நீர் இறைக்கும் இயந்திரங்களையும் பெற்றுக் கொள்ள முடியாமல் போய் விட்டதாகவும் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் சூரியசக்தி நீர்ப்பாசனத் தொகுதிகளுக்குக் கட்டுப்பணத்தைச் செலுத்தி அதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக கடந்த ஆண்டு நடுப்பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மாவட்ட அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்ள முடியாது என்று மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விடயம் தொடர்பாக, கமநல சேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது மேற்படி சூரிய சக்தி நீர்ப்பாசனத் தொகுதிகளைத் தனியார் நிறுவனம் ஒன்றே வழங்குகின்றது என்றும் தாம் இடைத்தரகராக மட்டுமே உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கமநல சேவை நிலையமே இவற்றைத் தமக்குப் பெற்றுத்தர வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

(க-6)

# சிசுக் கொலை தாய்க்கு மறியல்

கிளிநொச்சி, ஜன.25

தனது குழந்தையைக் கொலை செய்ததாகக் கூறப்படும் பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கிளிநொச்சி பிரமந்தனாறுப் பகுதியில் தான் பெற்ற குழந்தையைக் கல்லுடன் கட்டிக் கிணற்றுக்குள் போட்டுக் கொலை செய்ததாகக் கூறப்படும் தாயை எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பிரமந்தனாறுப் பகுதியில் கடந்த 03 ஆம் திகதி ஐந்து பிள்ளைகளின் தாய் ஒருவர் தவறான வழியில் குழந்தை ஒன்றைப் பிரசவித்து அந்தக் குழந்தையைக் கல்லுடன் கட்டிக் கிணற்றுக்குள் போட்டு கொலை செய்ததாகத் தெரிவித்து குறித்த பெண்ணைக் கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் முன்பாக முன்னிலைப்படுத்தினர்.

இந்தப் பெண்ணை எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பெண் தலைமறைவாகி இருந்ததாகவும், பின்னர் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் தங்கியிருந்தபோது கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. விசாரணையின் போது கொலையுண்ட குழந்தையின் பிரசவத்தை அவ்வூரில் உள்ள பெண் ஒருவர் மேற்கொண்டதாகவும், பின்னர் அந்தக் குழந்தை இறந்து விட்டதாகவும் இந்தப் பெண் கூறினார். பிரசவத்தை மேற்கொண்ட பெண்ணின் சகோதரனுடன் தான் தொடர்பு வைத்திருந்ததனால் அவரே தனக்குத் தெரியாமல் அக் குழந்தையை கொலை செய்துள்ளதாகவும் அவர் கூறியிருந்தார்.

இவ்வாறான சிசுக் கொலைகள் வன்னியில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

(க-6)

# ஐந்து முன்பள்ளிகள் ஒரே நாளில் திறப்பு

கிளிநொச்சி, ஜன.25

கிளிநொச்சி மேற்குப் பகுதியில் ஒரே நாளில் 5 முன்பள்ளிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி ஆனந்தபுரம் கலைவாணி முன்பள்ளி, வன்னேரிக்குளம் தூயபேதுறு முன்பள்ளி, ஆனைவிழுந்தான் தூய பிலிப்பு முன்பள்ளி, முக்கொம்பன் தமிழ் ஒளிர் முன்பள்ளி, மணியங்குளம் ஐயனார் முன்பள்ளி ஆகியன திறந்து வைக்கப்பட்டுள்ளன.



*50 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ள அழிவடைந்த நிலையில் காணப்படும் அக்கராயன் மகாவித்தியாலய ஆசிரியர் விடுதிகள் (410)*

# அடுத்த வாரம் கூடுகிறது மாகாண இடமாற்றச் சபை

கிளிநொச்சி, ஜன.25

வன்னி ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான மாகாண மட்ட இடமாற்றச் சபை அடுத்த வாரம் கூடவுள்ளது.

வலயமட்டத்தில் இடம்பெற்ற இடமாற்றச் சபைக்கு மேலதிகமாக மாகாணமட்ட இடமாற்றச் சபை மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜெ.குரூஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கணவன் அல்லது மனைவி நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தால் அவர்களின் விவரம் கவனத்தில் கொள்ளப்படும்.

கூடிய வகையில் இளம் ஆண் ஆசிரியர்கள் வன்னி இடமாற்றத்தில் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் 42 வயதுக்குட்பட்ட பெண் ஆசிரியைகள் மட்டுமே இனிவரும் காலங்களில் இடமாற்றத்தில் உள்வாங்கப்படவுமுள்ளனர்.

**இளம் ஆண் ஆசிரியர்கள் வன்னி இடமாற்றத்தில் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் 42 வயதுக்குட்பட்ட பெண் ஆசிரியைகள் மட்டுமே இனிவரும் காலங்களில் இடமாற்றத்தில் உள்வாங்கப் படவுமுள்ளனர்.**

இதேவேளை- வன்னியில் பெண் ஆசிரியர்களுக்கான இடமாற்றம் வழங்கப்படும் போது மிகையான பணிகளைத் தாங்கள் ஏற்க வேண்டி உள்ளதாகவும் எனவே கூடிய வரையில் 42 வயதுக்குமேற்பட்ட பெண்ஆசிரியைகளைத் தாங்கள் விரும்பவில்லையெனவும் வன்னி வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (க-83)

# மங்கை நகரில் தீயில் கருகியது வீடு

துணுக்காய், ஜன.25

மல்லாவி வடக்கு மங்கை நகரில் வீடொன்று தீப்பற்றி எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மல்லாவி வடக்கு மங்கை நகரில் மீள்குடியமர்ந்து வசித்து வரும் சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் என்பவரது தற்காலிக வீடே தீப்பற்றி எரிந்துள்ளது. வீட்டின் மேற்கூரை தகரத்தாலும் ஏனைய பகுதிகள் தறப்பாள் மற்றும் கிடுகுகளால் அமைக்கப்பட்டிருந்தன.

வீட்டினுள் இருந்த சுவாமி படத்துக்கு ஏற்றி வைத்த விளக்கு மற்றும் சாம்பிராணிக் குச்சிகள் கீழே வீழ்ந்து தறப்பாளில் தீப்பற்றியதால் இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**மங்கை நகரில் மீள்குடியமர்ந்து வசித்து வரும் சின்னத்தம்பி பால கிருஷ்ணன் என்பவரது தற்காலிக வீடே தீப்பற்றி எரிந் துள்ளது.**

வீட்டுச் சொந்தக்காரான பாலகிருஷ்ணன் சம்பவம் நிகழ்ந்தபோது மல்லாவியிலுள்ள உணவகமொன்றில் கடமைபுரிந்து கொண்டிருந்தார். ஏனையவர்கள் அயலிலுள்ள வீடொன்றில் இருந்தார்கள். இதனால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. ஆனால் வீட்டினுள் இருந்த பொருள்கள் யாவும் எரிந்ததோடு ஒரு தொகைப் பணமும் அவற்றுள் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மங்கை நகர் கிராம அலுவலர் சம்பவம் நிகழ்ந்த வீட்டை நேரில் பார்வையிட்டதுடன் பிரதேச செயலருக்கும் தெரிவித்துள்ளார். மல்லாவிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க-415)

# போக்குவரத்துச் சிரமங்களில் முழங்காவில் மக்கள்

கிளிநொச்சி, ஜன.25

கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பகுதி மக்கள் பெரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், ஜெயபுரம், முழங்காவில் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் பெரிய குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன், எந்த வாகனத்திலும் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி நகரில் இருந்து 35 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வன்னேரிக்குளம் கிராமத்துக்குச் செல்வதற்குக் குறைந்தது மூன்று மணித்தியாலம் எடுக்கின்றது. அதில் இருந்து பல்லவராயன் கட்டுசந்தி, முழங்காவில் செல்ல ஒன்றரை மணி நேரம் எடுக்கின்றது.

அதாவது முழங்காவில் பகுதியில் உள்ள ஒருவர் கிளிநொச்சியை வந்து சேர குறைந்தது மூன்றரை மணி நேரம் எடுக்கின்றது.

இவ்வாறு தாமதம் ஏற்படுவதால் முழங்காவில் பகுதியில் காலை 6 மணிக்குப் பயணத்தை ஆரம்பிக்கும் அரச அதிகாரிகள் கிளிநொச்சியை வந்தடைய முற்பகல் 9.30 மணிக்கும் மேலாகின்றது. இதனால் அலுவலகங்களுக்கு உரிய நேரத்துக்குச் சமுகமளிக்க இயலாது தவிக்கின்றனர்.

இதேபோன்று இந்த வீதியூடாகப் பயணிக்கும் மாணவர்களும் பாடசாலைகளுக்குத் தாமதமாகவே செல்கின்றனர். அத்துடன் அன்றாடத் தேவைகளுக்குச் செல்லும் மக்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முழங்காவில், வேரவில் ஆகிய மருத்துவமனைகளில் இருந்து நோயாளிகளைக் கிளிநொச்சிக்குக் கொண்டு வருவதாயின் சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் எடுக்கின்றது.

(க-6)

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு தண்டம், சிறை

கிளிநொச்சி, ஜன.25

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவருக்குத் தண்டமும், சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரப் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கால சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் கஞ்சா வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இது தொடர்பான விசாரணை நடைபெற்று நேற்று முன்தினம். தீர்ப்பு வழங்கப்பட்டது.


**கஞ்சா வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.**

இந்த நபருக்குப் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கடுழிய சிறைத் தண்டனையையும், மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் வழங்கித் தீர்ப்பளித்தார்.

(க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பிக்கு எதிராக நேற்று சுதந்திரக் கட்சி ஆர்ப்பாட்டம்




யாழ்ப்பாணம், ஜன.25

ஜே.வி.பியினர் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைக் குழப்ப முயற்சிப்பதைக் கண்டித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் இ.அங்கஜனின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் இருந்து பொலிஸ் பாதுகாப்புடன் ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது. பேரணியில் யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்கள், ஒட்டோச் சாரதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேரணி யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் இருந்து ஆரம்பித்து, ஆஸ்பத்திரி வீதி ஊடாக கஸ்தூரியார் வீதியை அடைந்து பின்னர் ஸ்ரான்லி வீதியூடாகச் சென்று இறுதியில் யாழ். மத்திய பஸ் நிலையத்தை அடைந்தது. பேரணியின் ஆரம்பத்தில் நூற்றுக்காணக்கானோர் பங்கேற்றபோதும் இறுதியில் மிகக் குறைந்த அளவானோரே இருந்தனர்.

பேரணியில் கலந்த கொண்டவர்கள் 'லலித் - குகன் காணாமற் போனது உங்கள் உள்வீட்டுப் பிரச்சினை', 'எங்களை வழிநடத்த இளைய தளபதி அங்கஜன்' என்று எழுதப்பட்ட சுலோகங்களைத் தாங்கியிருந்தனர்.

பேரணியின் முடிவில் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இ.அங்கஜனின் இணைப்பாளர் ஏ.கே.சுந்தரம்,

''ஜே.வி.பியினர்தான் முன்னைய காலத்தில் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள். 13 ஆவது திருத்தத்தைத் தாண்டித் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு கிடைப்பதைக் குழப்பியவர்கள் ஜே.வி.பியினர் தான். இவர்கள் இப்போது இங்கு வந்து இங்குள்ள அமைதியைக் குழப்பப் பார்க்கிறார்கள் - என்றார். (த-15-14)

## நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.மாநகரப் பகுதியில் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெறும் என்று யாழ். செயலக நிறுத்தல் அளத்தல் பொறுப்பதிகாரி ப.கிருஷ்ணதாசன் தெரிவித்தார்.

யாழ்.செயலக நிறுத்தல் அளவைப் பிரிவில் இந்த முத்திரையிடும் பணிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி ஒரு மணி வரை இடம்பெறும்.

இன்று புதன்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரையும் பின்னர் 30 ஆம், 31 ஆம் திகதிகளிலும் இந்த முத்திரையிடும் பணிகள் இடம் பெறவுள்ளன.

யாழ்.மாநகர சபைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், சந்தை வியாபாரிகள் தமது நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர்.

நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடத் தவறுவோர் சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-17)

## நெற்பயிர்களில் நோய்த்தாக்கம்

யாழ்ப்பாணம், ஜன.25

தென்மராட்சிப் பகுதியில் சில நெல் வயல்களில் கபில நிறத் தண்டு தத்திகளின் தாக்கம் காணப்படுவதாக விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாவற்குழி, கைதடி, மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளில் உள்ள நெல் வயல்களில் இந்த நோய் நெற் பயிர்களைத் தாக்கியுள்ளது.

நெற்பயிர்களில் ஏற்பட்ட இந்த நோயைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க முடியாத நிலை உள்ளது. காரணம் தற்போது அறுவடை நெருங்கும் காலம் வந்துவிட்டதால் நெற்பயிர்களும் வாடிப் படுத்துவிட்டன. விவசாயிகள் ஏற்கனவே இந்த நோயை முழுமையாகக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும் என்றார் அந்த அதிகாரி.

(த-17)

## நயினா தீவுக்கு ஞாயிறு இலவச படகு சேவை

யாழ்ப்பாணம், ஜன.25

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மாள் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை யாத்திரிகர்களின் வசதி கருதி இடம்பெறவுள்ள படகுச் சேவைகளை இலவச சேவையாக நடத்த நயினாதீவுப் படகு உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. அன்னையின் அருள் பெற வரும் பக்தர்களுக்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் படகு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 28 ஆம் திகதி இரவு விசேட பரத நாட்டிய நிகழ்வும் இடம்பெறுகின்றது. (த-7)

## சிறுவர் நீதிமன்றச் செயற்பாடுகளை விரைவாக ஆரம்பிக்க நடவடிக்கை

### இரண்டு வாரங்களில் சிறுவர் நீதிமன் றம் தொடர்பான வர்த்தக மானி அறிவித்தலைப் பிரசுரிக் குமாறும், நீதிமன்றத்துக்கு இரவுக் காவல் உத்தியோகத் தரை நியமிக்குமாறும் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டுள்ள சிறுவர் நீதிமன்றச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாக நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர் ஆகியோருக்கும் யாழ். மாவட்ட நீதிவான் மா.கணேசராஜாவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் இடம்பெற்றது. சிறுவர் நீதிமன்றத்தை இயங்கச் செய்வது தொடர்பில் யுனிசெப் அதிகாரிகளும் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நீதிவானைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்துக்கான சிறுவர் நீதிமன்றம் கடந்த நவம்பர் மாதம் யாழ்.மேல் நீதிமன்றம் முன்னர் இயங்கிய கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது. எனினும் அதன் செயல்பாடுகள் இது வரை ஆரம்பிக்கப்படவில்லை. இது தொடர்பாக நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா, நீதிச் சேவை ஆணைக்குழு செயலாளர் கோபல்லாவ மற்றும் நீதிவான் மா.கணேசராஜா ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதன் போது உடனடியாக இரண்டு வாரங்களில் சிறுவர் நீதிமன்றம் தொடர்பான வர்த்தக மானி அறிவித்தலைப் பிரசுரிக்குமாறும், நீதிமன்றத்துக்கு இரவுக் காவல் உத்தியோகத்தரை நியமிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நீதியமைச்சின் செயலாளர் பணித்துள்ளார்.

அத்துடன் தளபாடங்களைச் சிறுவர் நீதிமன்றின் பாதுகாப்பில் வைக்கவும், சிறுவர் நீதிமன்ற உத்தியோகத்தர்களை நியமிக்கும் வகையில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் நீதிவான் மா.கணேசராஜாவைச் சந்தித்த யுனிசெப் அதிகாரிகள் சிறுவர் நீதிமன்றை இயங்கவைப்பது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர். (த-4)




வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்க மண்டபத்தில் வடமாகாண லயன்ஸ் கழக புற்றுநோயாளர் மூலதனத் திட்ட நிதியிலிருந்து 25 புற்று நோயாளர்களுக்கு தலா 4 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்பட்டது. இந்த வைபவத்தில் புற்றுநோயாளர் ஒருவருக்கு லயன்ஸ் டாக்டர் வி.தியாகராசா உதவித் தொகையை வழங்குகிறார். (த)

## உரிய மருத்துவர்கள் இல்லாமல் தனியார் பல் வைத்திய நிலையங்கள்

### அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.மாவட்டத்தில் பல் வைத்தியர்கள் இல்லாமல் மருத்துவ ஆய்வுகூடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் மட்டும் நடத்தப்படுகின்ற தனியார் பல் வைத்திய நிலையங்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்பாகவுள்ள பிரபலமான பற்சிகிச்சை நிலையம் ஒன்றில் மானிப்பாயைச் சேர்ந்த 62 வயதான ஒருவர் கடந்த வாரம் பல் பிடுங்கச் சென்றுள்ளார். குறித்த பற்சிகிச்சை நிலையத்துக்கு எந்தவொரு பல்வைத்தியரும் செல்லாத நிலையில் அங்கு இருந்த மருத்துவ ஆய்வு கூடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 'நான் தான் வைத்தியர்' என்று குறிப்பிட்டுக் குறித்த நபரின் பல்லைப் பிடிங்கியுள்ளார்.

குறித்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவரின் 5 பற்களைப் பிடிங்கியுள்ளார். அன்றிரவு பல் பிடுங்கிய இடத்தில் கடுமையான இரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் சோர்வடைந்து ஆபத்தான நிலைமையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டார்.

குறித்த நபரின் ஏனைய நோய்களை அறியாமல் தவறான முறையில் பல்லைப் பிடுங்கியமையாலேயே இரத்தப் போக்கு ஏற்பட்டு அவர் ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளார்.

இதனையடுத்தே யாழ்.போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்தியப் பிரிவு ஊடாக மேற்படி பற்சிகிச்சை நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை- இவ்வாறான முறையற்ற பற்சிகிச்சை நிலையங்கள் நகரில் செயற்படுகின்றபோதும் பிராந்திய சுகாதார வைத்தியப் பணிமனை இது வரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-15)

## யாழ்.நீதிமன்றிலும் விரைவில் சமுதாய சீர்திருத்தப் பிரிவு

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.நீதிமன்றத்தில் சமுதாயச் சீர்திருத்தப் பிரிவினை உருவாக்கவும் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்கவும் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சீர்திருத்தப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜாவின் வேண்டுகோளை அடுத்துச் சமுதாய சீர்திருத்தப் பிரிவை ஆரம்பிப்பிதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மிகுதி யாழ்.மாவட்டத்தில் முதன் முதலாக சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வருடம் இந்தப் பிரிவினை நீதிவான் மா.கணேசராஜா ஆரம்பித்து வைத்திருந்தார். அதன் அடுத்த கட்ட நடவடிக்கையாகவே யாழ்.நீதிமன்றிலும் இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொலிஸாரால் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் குற்றச்செயல்களுக்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் அபராதத் தொகையைச் செலுத்துவதற்குப் பண வசதியில்லாது சிறைக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளவர்களுக்கு இந்தப் பிரிவு உதவி செய்யும். அதாவது தண்டப் பணம் செலுத்த முடியாதவர்கள் அவர்களின் உடல் உழைப்பின் மூலமாகத் தண்டப்பணத்துக்குரிய வேலைத்திட்டங்களை மேற்கொண்ட பின்னர் மன்றின் அனுமதியுடன் விடுதலை செய்ய உதவும் வகையில் அமைந்ததே இந்த சமுதாய சீர்திருத்தப் பிரிவு.

இதன் மூலமாக ஒவ்வொரு பிரஜையினதும் கௌரவம் பாதுகாக்கப்படுவதுடன் அவர்கள் சிறுகுற்றங்களுக்காகச் சிறை செல்வது தவிர்க்கப்படுகின்றது.

சிறுகுற்றங்களினால் குறுகிய காலச் சிறைத்தண்டனை பெற்று சிறைச் சாலைக்குச் செல்வோர் அங் குள்ளவர்களின் தவறான வழிநடத்தலினால் நிரந்தர மாகச் சிறைத் தண்டனை அனுபவிக்கும் நிலை காணப் படுகின்றது.

எனவே இவ்வாறான சிக்கல்களில் இருந்து ஒவ்வொருவரையும் பாதுகாப்பதாக இந்தப் பிரிவு அமையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் சிறைச் சாலையில் இட நெருக்கடிப் பிரச்சினையும் தவிர்க்கப் பட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்கும்பானில் மணல் ஏற்றிச் செல்லத் தடை

யாழ்ப்பாணம், ஜன.25

எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாமல் மண்கும்பான் பகுதியில் இருந்து குடாநாட்டுக்குப் பெருவாரியான மணல் தினமும் ஏற்றிச் செல்லப்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து பிரதேச சபையின் அனுமதியின்றி மண்கும்பானில் இருந்து குடாநாட்டுக்கு வெளியே மணல் கொண்டு செல்வது நேற்று முதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

**அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களில் இருந்து வாகனங்கள் மூலம் மணல் ஏற்றிச் செல்லப்படுவது நேற்று முன்தினம் பிரதேச சபையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

அல்லைப்பிட்டியில் இருந்தும் மண்கும்பானில் இருந்தும் வாகனங்கள் மூலம் மணல் ஏற்றிச் செல்லப்படுவது நேற்று முன்தினம் பிரதேச சபையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மணல் வியாபாரத்தில் இருவர் ஈடுபட்டிருந்ததும் தெரிய வந்தது. இவர்கள் நேற்று முன்தினம் பிரதேச சபையினரால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

இதனையடுத்து தீவகத்தில் இருந்து வெளியே மணல் மண் கொண்டு செல்வதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் நேற்று அறிவித்தார்.

பிரதேச சபையின் அனுமதியின்றி மணல் தீவகத்தை விட்டு வெளியே கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் வகை தொகையின்றி மண்கும்பானில் இருந்து ஏற்றிச்செல்லப்பட்ட மணலை வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தலைமையிலான குழுவினர் கைப்பற்றினார்கள். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன. இதனை அடுத்தே தீவகத்துக்கு வெளியே மணல் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. (த)

## பளையில் இளைஞருக்கு இலவச கணினிப் பயிற்சி

பளை, ஜன. 25

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினர் பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான இலவச கணினிப் பயிற்சியினை அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளனர்.

பயிற்சி நெறியில் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்துக் கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் பயிலுநர்களைத் தெரிவு செய்யவுள்ளதால் தமது விண்ணப்பங்களை தலைவர், பச்சிளைப்பள்ளி, அபிவிருத்திப் பேரவை, ஏ-9 வீதி, முல்லையடி, பளை என்னும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பேரவை செயலாளர் க.சண்முகதாஸ் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே நடத்தப்பட்ட கணினிப்பயிற்சிகளை நிறைவு செய்த பயிலுநர்களுக்கு அண்மையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-207)

## 20 மினி பஸ்கள் சேவையில்

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்-காங்கேசன்துறை வீதியில் மாவிட்டபுரம் வரை 769 இலக்கப்பாதையில் சுமார் 20 தனியார் மினிபஸ்கள் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக யாழ். மாவிட்டபுரம் சிற்றூர்தி சேவையாளர் சங்கம் தெரிவித்தது.

இச் சேவை காலை 6.10 மணி தொடக்கம் மாலை 7.25 மணிவரை நடைபெறுவதாகவும் சேவையில் ஈடுபடும் அனைத்து மினிபஸ்களும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும் சென்று பொதுமக்கள், ஊழியர்களை ஏற்றி இறக்குவதாகவும் இந்தச் சங்கம் மேலும் தெரிவித்தது. (த-300)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தமிழ் சிறப்பு நெறிப் பயிற்சியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்று வினாவிடை நூலினை வெளியிட்டுள்ளனர். விரிவுரையாளர் ச.லலீசனின் வழிகாட்டலில் வெளியிடப்பட்ட இந்நூலின் முதற்பிரதியை அவர் இளைப்பாறிய விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசுவிடம் கையளிக்கிறார். அருகில் தமிழ் சிறப்பு நெறி மாணவர்கள் உள்ளனர். (த-38)

## தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு உதவிகள்

குருநகர், ஜன.25

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகம் இரண்டு கட்டில்களையும், மூன்று சக்கர நாற்காலிகளையும் வழங்கியுள்ளது.

இந்த உபகரணங்கள் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையில் வைத்து வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஆ.ஜெயகுமரனிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனும் கலந்து கொண்டார். (த-51)

## குடாநாட்டில் விதை வெங்காயத்தின் பரீட்சார்த்த உற்பத்தி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.மாவட்டத்தில் விதை வெங்காயத்தினைப் பரீட்சார்த்தமாக உற்பத்தி செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் ஸ்ரீ பாலசுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

யாழ்.மாவட்ட விவசாய நிலம் வெங்காயச் செய்கைக்கு ஏற்ற நிலப் பிரதேசமாகும். இதனைக் கருத்தில் கொண்டு வெங்காயச் செய்கையை ஊக்கிவிக்கவும், விதை வெங்காயத்துக்கு ஏற்படும் தட்டுப்பாட்டை நீக்கவும் இங்கு விதை வெங்காயத்தை உற்பத்தி செய்யும் பணிகள் பரீட்சார்த்த மாக ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

**விதை வெங்காய உற்பத்தி வெற்றியளிக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் அதற்கான தட்டுப்பாடு முழுமையாக நீங்கிவிடும்.**

இதற்கென 14 விவசாயத் தோட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு விதை வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.இதனை விட திருநெல் வேலி விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்திலும் பயிரிடப்பட்டுள்ளது.

இந்த விதை வெங்காய உற்பத்தி வெற்றியளிக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் அதற்கான தட்டுப்பாடு முழுமையாக நீங்கிவிடும். அத்துடன் விவசாயிகள் தாம் உற்பத்தி செய்யும் வெங்காயத்தைக்கூட விதை வெங்காயத்துக்குப் பயன்படுத்தாமல் அதனை சந்தைப் படுத்தவும் முடியும்.

இந்த விதை வெங்காய உற்பத்தி மூலம் காலபோகத்தில் வெங்காயத்தின் விலை கட்டுப்படுத்தப்படுவதுடன் நுகர்வோரின் தேவையையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்றார். (த-17)

## ஆமை வேகத்தில் வீதிப் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

பருத்தித்துறை வீதியின் அகலிப்புப் பணிகள் ஆமை வேகத்திலேயே நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் பூதர்மடம் வீதியில் இருந்து பிரதேச செயலகம் வரையிலான குறுகிய தூரத்தின் அகலிப்புப் பணிகள் கடந்த மூன்று வார காலமாக நடைபெற்று வருகின்றன.

இந்த அகலிப்புப் பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருவதால் வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியின் குறுகிய தூரம் கிளறப்பட்டு ஒரு வழிப் பாதையாகப் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

வீதி கிளறப்பட்டுள்ள போதும் அதற்கான புனரமைப்பு துரிதப்படுத்தப்படவில்லை. இதனால் இந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (த-17)

## சிரமதானத்துக்கு வாருங்கள்

யாழ்ப்பாணம், ஜன.25

கைதடி அரச முதியோர் இல்ல வளாகத்தைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதற்குப் பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறுகையில்;

இந்த இல்லத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு இல்லச் சுற்றாடலை சிரம தானம் மூலம் துப்புரவு செய்து தூய்மையாக்குவதற்கு நலன் விரும்பிகள், பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும். இல்லத்தின் வளாகம் தினமும் துப்புரவு செய்யப்பட்டு கிருமிநாசினிகள் விசிறப் பட்டும் வருகின்றன. இதற்கு பொது அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்குவது வரவேற்கத்தக் கது.

டெங்கின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு இதனைச் செய்ய வேண்டும் என்றார் அவர். (த-17)

## நுளம்பு பெருகும் அபாயம் கழிவறைகளைக் கவனியுங்கள்

தென்மராட்சி, ஜன.25

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரப் பரிசோதனையில் 416 வீடுகளில் உள்ள மலசல கூடக் குழிகளில் வெடிப்புஏற்பட்டு நுளம்புபெருகக் கூடிய நிலையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறான வெடிப்புகளில் கியுலெக் ரக நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய வாய்ப்புகள் உள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக அவற்றினை மூட நடவடிக்கை மேற்கொள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

மலசல கூடக் குழிகளில் காணப்படும் வெடிப்பு, குழிகளில் பொருத்தப்பட்டுள்ள குழாய்களில் நுளம்பு உட்செல்லாத வகையில் வலை பொருத்தப்படாமை, மலசல கூடக் குழிக்கு மூடி பொருத்தும்போது உரிய முறையில் சிமெந்து பூசப்படாமை போன்றவை இனங்காணப்பட்டதாகவும் இவற்றினைச் சீர் செய்யத் தவறுவோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் சுகாதாரப்பிரிவினர் தெரிவித்தனர். (த-207)

## கோரிக்கை நிறைவேறும் வரை பணிப் பகிஷ்கரிப்புத் தொடரும்

### காரைநகர் பிரதேச சபைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜன.25

தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை பணிப்புறக்கணிப்புத் தொடரும் என்று காரைநகர் பிரதேச சபையின் தலைவர் வே.ஆனைமுகன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது;

எனது கோரிக்கைக்கு இன்று வரை தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. கோரிக்கைக்கு சாதகமான முடிவுகள் கிடைக்கும் வரைக்கும் எனது பணிப்புறக்கணிப்பு தொடரும் என்றார் அவர்.

இதேவேளை பிரதேச சபைத் தலைவரின் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பினால் சபையின் சில அத்தியாவசிய பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தனக்கான வாகன வசதி உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்துப் பிரதேச சபைத் தலைவர் கடந்த ஒரு வார காலமாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகிறார். (த-17)

## நுளம்பு பெருகும் வகையில் சுற்றாடலை வைத்திருந்த 19 பேருக்கு எதிராக வழக்கு

தென்மராட்சி, ஜன.25

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் நுளம்பு உற்பத்தியை பெருக்கக் கூடிய வகையில் கொள்கலன்களை வைத்திருந்த 19 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், பொலிஸார், மலேரியா தடுப்பு இயக்கத்தினர், சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வார பரிசோதனைகளின் போது அகப்பட்ட 19 பேருக்கு எதிராகவே சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு தினமும் ஒரு வலயம் என்ற ரீதியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும் இக் காலப் பகுதியில் 7 ஆயிரத்து 518 வீடுகள் பரிசோதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நுளம்பு பெருகக் கூடிய வகையில் பற்றைகளாகக் காணப்பட்ட காணிகளை துப்புரவு செய்யக் காணி உரிமையாளர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு 15 தினங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இக் காலப்பகுதியில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாத காணி உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது மேற்கொள்ளப்பட்ட தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படவுள்ளதால் குடியிருப்பாளர்கள் தொடர்ந்தும் தற்போது போல குடியிருப்புக்களையும் காணிகளையும் துப்புரவாக வைத்திருக்குமாறும் அறிவித்துள்ளனர். (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ள விசாரணை நடைபெற வேண்டும்

மக்கள் நலன்சார்ந்த தேசிய நிகழ்ச்சித்திட்டத்தைக்கூட தமிழ் மக்கள் சுதந்திரமாக நடைமுறைப் படுத்த முடியாதநிலையில் உள்ளனர் என்று திருகோணமலை நகரசபை உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மூதூர், ஜன. 25

யாழ்ப்பாணம் - சேந்தாங்குளம் பிரதேசத் தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தவிசாளர், உறுப்பினர், பொதுமக்கள் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து பயனுள்ள விசாரணை நடத்தப்படவேண்டும். அத்துடன், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு குறித்து உயர்ந்த பட்ச நம்பிக்கை வழங்கப்படவேண்டும் என்று திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சேந்தாங்குளம் தாக்குதலின்மூலம் சட்டரீதியான நாடளாவிய மக்கள் நலன் சார்ந்த தேசிய நிகழ்ச்சித் திட்டத்தைக்கூட தமிழ் மக்கள் சுதந்திரமாக நடைமுறைப் படுத்த முடியாத நிலையில் உள்ளனர் என்பது வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் மீது பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொள்ளும் இவ்வாறான தாக்குதல்களால் ஜனநாயகக் கட்டமைப்புகள் குறித்து தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய அற்ப சொற்ப நம்பிக்கைகள் கூட மறைந்துவிடும்; ஆபத்துகளும் எதிர்காலத்தில் ஏற்படலாம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மாணவருக்கான போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் சோதனை

கண்டி,ஜன.25

ஹற்றன் பிரதேசத்தில் பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச்செல்வதற்கான போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சோதனைக்குட்படுத்தப்பட்டன.

ஹற்றன் போக்குவரத்துப் பொலிஸாரினால் பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்பட்டபோது, மூன்றாம் தரப்பின் காப்புறுதிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச்செல்வதற்கான போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்கள் சேவையில் இருந்து நிறுத்தப்பட்டன.

நுவரெலியா மோட்டார் வாகனப் பரிசோதகர்களினால் சாரதிகள் தெளிவூட்டப்பட்டதுடன், குறைபாடுகளுடன் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களைச் சரிசெய்வதற்காக 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளைப் புரியும் சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## மாணிக்கக் கல் அகழ்வு; 23 பேர் கைது

இரத்தினபுரி , ஜன.25

இரத்தினபுரி, நிவித்திகல,கரவிட்ட ஆற்றில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபையின் சுற்றிவளைப்புப் பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இந்த சுற்றிவளைப்புக்கு பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது. மாணிக்கக்கல் அகழ்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (ச)



மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்ற இலங்கைக்கான நோர்வே தூதர் ஹில்டே ஹரல்ட்ஸ்டாட், மாநகர முதல்வர் சிவகீத்தா பிரபாகரனை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்துள்ளார்.

## பாதிக்கப்பட்டோருக்கு சிறுதொழில் கடன்கள்

மட்டக்களப்பு,ஜன.25

போரினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் சிறுதொழில் கடன்கள் வழங்கப்படவுள்ளன என்று புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் இ.எஸ்.அமரசிங்க தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை வங்கியுடன் இணைந்து புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துகிறது. போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டரை லட்சம் ரூபா வரை கடன் வழங்கப்படும். பத்து வருட திட்டத்தில் 4 வீத வட்டி அறவிடப்படும் என்று அவர் தெரிவித்தார்.

## தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,ஜன.25

ஒரு நாள் அடிப்படைச் சம்பளத்துக்கான வேலையின் அளவை அதிகரிக்கக் கோரியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து டிக்கோயா போடைஸ் தோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தத் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களில் ஆண் தொழிலாளர்கள் ஒரு நாள் அடிப்படைச் சம்பளத்துக்காக இதுவரை காலமும் 14 கிலோ கொழுந்தினையும், பெண் தொழிலாளர்கள் 16 கிலோ கொழுந்தினையும் பறித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் ஆண், பெண் தொழிலாளர்கள் 18 கிலோ கொழுந்தினைப் பறித்தால் தான், ஒரு நாள் அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுமென்று தோட்ட நிருவாகம் அறிவித்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## மூவருக்கு வழக்குத் தாக்கல்

அம்பாறை,ஜன.25

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தின்போது 3 பேருக்கு எதிராக பொலிஸாரினால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள வீடுகள் மற்றும் பொது இடங்களிலும் டெங்கு ஒழிப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போதே டெங்கு நுளம்பு காணப்பட்ட 3 குடும்பத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி சகீலா இஸ்ஸடீன் தலைமையில், 3 குழுக்களாக இந்த பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பிரியதர்சன யாப்பா காத்தான்குடிக்கு வருகை

மட்டக்களப்பு,ஜன.25

சுற்றாடல்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காத்தான்குடிக்கு சென்றுள்ளார்.

பிரதியமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாவின் அழைப்பின் பேரில் காத்தான்குடிக்குச் சென்ற அமைச்சர் யாப்பா பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் காத்தான் குடியில் திண்மக் கழிவகற்றலிலுள்ள பிரச்சினைகள், குப்பைகளை கொட்டுவதற்கு காத்தான்குடி நகர சபைப் பிரிவில் காணி இல்லாததால் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பாக அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

இதையடுத்து காத்தான்குடி நகர சபையினால் மேற்கொள்ளப்படவுள்ள திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்காக அமைச்சரினால் காத்தான்குடி நகர சபைக்கு முதற் கட்டமாக 20 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது. (ச)

## வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சியே நூல் வெளியீடு

திருகோணமலை,ஜன.25

நூல் வெளியீடு என்பது இன்று சாதாரண ஒரு விடயமல்ல. மனித வரலாற்றை ஆவணப்படுத்தும் ஓர் நல்ல முயற்சி. நூலாசிரியர் தனது நூலை வெளியிடும் போது ஒரு பிராந்தியத்துக்கான பதிவை ஏற்படுத்திக் கொடுக்கின்றார். சர்வதேச ரீதியாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார் என்று திருமலையின் மூத்த இலக்கியவாதி ச.அருளானந்தம் தெரிவித்தார்.

திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளரும், எழுத்தாளருமான கி.முருகுப்பிள்ளையின் 'மீண்டு(ம்) எழுவோம்' என்ற சிறுகதை நூல் வெளியீடு திருமலை கோணேஸ்வர இந்துக்கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனிதனின் உழைப்புக்கு அப்பால் ஓய்வு நேரங்களில் அனுபவங்கள் உள்ளத்திலிருந்து வெளிவர ஆரம்பிக்கும். இதற்கு வடிகால் அமைத்துக் கொடுக்காவிட்டால் அது எழுத்தாளனின் உள்ளத்தைப் பாதிக்கச் செய்யும்.

உழைப்பைக் கருதாமல் எழுத்தாளன் எழுதுகிறான். அன்று உள்ளம் அமைதி பெறுகிறது - என்றார். (ச)

## சம்பளத்தில் கழிக்கப்பட்ட தொகையை வழங்குமாறு நிர்வாகங்களுக்குப் பணிப்பு

பறிக்கப்படவேண்டிய தேயிலைக் கொழுந்தின் அளவு கூட்டு ஒப்பந்த அடிப்படையில் நடைபெறவேண்டுமெனவும், இதை நிர்வாகங்கள் மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஹற்றன் உதவித் தொழில் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா,ஜன.25

பொகவந்தலாவை, பிளாண்டேசன், கொட்டியாகலை தோட்டத் தொழிலாளர்களின் டிசெம்பர் மாதச் சம்பளத்திலிருந்து தோட்ட நிர்வாகங்களால் தன்னிச்சையாக கழிக்கப்பட்ட தொகையை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தோட்ட நிர்வாகங்கள் வழங்கவேண்டும் என ஹற்றன் உதவி தொழில் ஆணையாளர் எஸ்.சந்திரதிலக்க உத்தரவிட்டுள்ளார்.

ஹற்றன் தொழில் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுகளை அடுத்தே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அத்துடன் பொகவந்தலாவை கம்பனிக்கு உட்பட்ட கெம்பியன், பெற்றஸோ, பொகவான, லொயினன், டின்சின் ஆகிய தோட்டங்களிலும் இதே முறையைக்கடைப்பிடிக்க வேண்டும் என்று தொழில் ஆணை யாளர் உத்தரவிட்டார்.

பறிக்கப்படவேண்டிய தேயிலைக் கொழுந்தின் அளவு கூட்டு ஒப்பந்த அடிப்படையில் நடைபெறவேண்டுமெனவும், இதை நிர்வாகங்கள் மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார். தமது சம்பளப் பணத்தில் கழிக்கப்பட்டதை எதிர்த்து தொழிலாளர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரமாக எமக்குத் தேவை தற்காலிக மலகூடங்கள்

தென்மராட்சி,ஜன.25

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்கள் இயற்கைக் கடன் கழிப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

**இங்கு முன்னர் ஒவ்வொரு வீட்டிலும் இருந்த மலகூடங்கள் முழுமையாக சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன.**

இடம்பெயர்வதற்கு முன்னர் இங்கு 286 குடும்பங்கள் வசித்துவந்துள்ளன. அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பின்னர் இந்தத் தொகை 300ஐத் தாண்டியுள்ளது. இங்கு முன்னர் ஒவ்வொரு வீட்டிலும் இருந்த மலகூடங்கள் முழுமையாகச் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன. புதிதாக மலகூடம் அமைப்பதாயின் பெருமளவு பணம் தேவைப் படும்.

இடம்பெயர்வின் பின்னர் இப்பகுதி மக்கள் மிகவும் வறுமையான நிலையில் தமக்குத் தெரிந்தவர்களின், உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்துவிட்டு தமது சொந்த இடங்களுக்கு மீளக் குடியமர்ந்து வருகின்றனர். வீடுகள் அமைக்கவே நிதி இல்லாத நிலையில் வாழும் மக்கள் பெருமளவு நிதிச் செலவில் மலகூடம் அமைப்பது என்பது அவர்களின் வாழ்க்கைத்தரத்துக்கு அப்பாற்பட்ட விடயமாக உள்ளது. இந்நிலையில் இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு மீளக்குடியமர்ந்துள்ள ஒவ்வொரு வீட்டுக் காணியிலும் தற்காலிக மலகூடமாவது அமைத்துத் தருமாறு யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளதாக அப்பகுதி விவசாய சம்மேளன செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார். (ந-207)

# அல்லைப்பிட்டிக்கு மின்சாரம் பிரதேச மக்கள் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன.25

மின்சாரம் இல்லாமல் இருட்காடாக இருந்த அல்லைப்பிட்டிப் பிரதேசத்துக்கு அண்மையில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதால் அந்தப் பிரதேச மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுப் பல வருடம் கடந்த நிலையிலும் அல்லைப்பிட்டிப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கப்படாததால் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரிட்டது.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் இரவுநேரக் கற்றல் நடவடிக்கைகளை குப்பி விளக்குகளைப் பயன்படுத்தி கற்க வேண்டிய நிலையில் இருந்தனர். தற்போது அல்லைப்பிட்டிக் குடியேற்றத் திட்டம் உட்பட அனைத்துப் பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் நன்மை அடைந்துள்ளனர். (ந-313)

# இம்முறை எமக்கு நல்ல விளைச்சல்



யாழ்ப்பாணம், ஜன.25

நீண்ட கால இடைவெளியின் பின்னர் அல்லைப்பிட்டி விவசாயிகளுக்கு இந்த வருடம் நெற்செய்கையில் அதிக விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நெற்பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக இம்முறை விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைக்கலாம்.**

கடந்த போகங்களில் இந்தப் பிரதேசத்தில் நெற்பயிர்களைப் பயிரிடும் போது, கட்டாக்காலி கால்நடைகள் மற்றும் இயற்கைக் காலநிலை காரணமாக நெற்பயிர்கள் சேதமாகி நெற்செய்கை பாதிக்கப்பட்டது.

எனினும் இந்த வருடம் வேலணைப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் விவசாயிகளின் நெற் செய்கையில் இடையூறுகளை ஏற்படுத்தும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்து கால்நடைகளின் துன்புறுத்தல்கள் இன்றி நெல் விளைச்சல் நன்றாக உள்ளது.

இதனால் இன்னும் ஓரிரு தினங்களில் அறுவடைக்காகக் காத்திருக்கும் அல்லைப்பிட்டி விவசாயிகள் மிகுந்த சந்தோஷத்தில் உள்ளனர். (ந-313)

# புகையூட்டல் மூலம் நுளம்பு விரட்டல்

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதி மக்கள் நுளம்புகளை புகையூட்டல் மூலம் விரட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

தினமும் மாலை 6 மணியானதும் நுளம்புகள் கூட்டமாக வந்து மக்களை கடித்துத் துன்புறுத்துகின்றன. இவற்றின் கடிகளில் இருந்து தப்பிப்பதற்கு நுளம்புத் திரிகளை சிலர் கொளுத்தி வைக்கின்றனர்.


இதன் புகை பலருக்கு ஒத்துவராமையினால் பழைய சட்டிகள், வாளிகளில் புகை போடுவதை வழமையாக்கியுள்ளனர்.

இதற்காக சிலர் வேப்பங்குழை, வேப்பம் விதை என்பவற்றை மாலை நேரத்தில் சேகரித்து வைத்துள்ளனர். இந்த நடவடிக்கையால் நுளம்புகள் அவ்விடத்திலிருந்து சில மணி நேரத்தில் அகன்றுவிடுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் குறித்த பகுதியில் உள்ள நுளம்பு பெருகும் இடங்களான நீர்தேங்கும் இடங்கள், பற்றைகள் என்பவற்றை அழிப்பதன்மூலமே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியும் என்று கூறப்படுகிறது (ந)

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரு சுப்பிரமணியம்



**(S.M.S. மணியம் மாஸ்டர் - காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் பௌதிகவியல் ஆசிரியர், முன்னாள் உப அதிபர்)**

சங்கானை, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் 'ரைப்பிங் வாசா' உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட S.M.சுப்பிரமணியம் நேற்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - அன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் இராசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற செல்வம் (கிச்சி அக்கா) அவர்களின் அன்புக் கணவரும் இராசம்மா (கனடா), நடராசா (கனடா), காலஞ்சென்ற கார்த்திகேசு (கனடா) மற்றும் கதிரவேலு (உதயன் பணிமனை), தனவதி (இந்திரா) ஆகியோரின் சகோதரனும் பொன்னுத்துரை (கனடா), இராசமணி (கனடா), இந்திராணி, குருமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2012) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் 'ரைப்பிங் வாசா ', இராமலிங்கம் வீதி, உடுவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவரது மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில், சுன்னாகம்.

தகவல்:
மு. கதிரவேலு (சகோதரர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஈரான் மீது தாக்குதல் அறிவித்தது இஸ்ரேல்

டெல் அவிவ், ஜன.25

ஈரானின் அணு உற்பத்தி நிலையங்களைக் குறிவைத்து, தாக்குதல் நடத்தி அழிக்கப் போவதாக இஸ்ரேல் திடீர் அறிவிப்பை விடுத்துள்ளது. இதனால், அமெரிக்கா உட்பட உலக நாடுகள் அதிர்ச்சி அடைந்துள்ளன.

ஈரான் தொடர்ந்து அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதாக அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. ஈரான் மீது பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்பட்டன. ஆனால், ஆக்கபூர்வ பயன்பாட்டுக்காக மட்டுமே அணுசக்தி உற்பத்தி செய்யப்படுவதாக ஈரான் தொடர்ந்து கூறி வந்தது. இதனால், சமீப காலமாக

**60 ஆண்டுகால நெருங்கிய நட்பு நாடான இஸ்ரேலின் இந்தத் தன்னிச்சையான முடிவால் அமெரிக்கா அதிர்ச்சியடைந்துள்ளது.**




அண்டை நாடுகளான இஸ்ரேல், ஈரான் இடையே மோதல் வெடித்துள்ளது.

இந்தநிலையில் ஈரானின் அணு உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதலைத் தொடங்க அமெரிக்காவுக்கு 12 மணி நேர காலக்கெடுவை இஸ்ரேல் நேற்றுமுன்தினம் விதித்தது. அது தவறும் பட்சத்தில் தன்னிச்சையாகத் தாக்குதல் நடத்தப் போவதாகவும் எச்சரித்துள்ளது. அமெரிக்க முப்படை இணைத் தலைவரான ஜெனரல் மார்ட்டினிடம் இஸ்ரேல் ராணுவ அமைச்சர் எகுத் பாரக் இதை தெரிவித்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால், அமெரிக்கா அதிர்ச்சி அடைந்துள்ளது. 60 ஆண்டு கால நெருங்கிய நட்பு நாடான இஸ்ரேல், தன்னிச்சையாக ஈரான் மீது தாக்குதல் நடத்த எச்சரிக்கை விடுத்துள்ளதால் அதிபர் ஒபாமா அதிர்ச்சி அடைந்துள்ளார் என வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந)

## ஒபாமாவைக் கொன்றால் நீங்கள் வாழலாம்

**இஸ்ரேலியர்களுக்கு அறிவுரை கூறும் பத்திரிகை எழுத்தாளர்.**



அட்லாண்டா, ஜன.25

இஸ்ரேல் மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் அமெரிக்க அதிபர் ஒபாமாவைப் படுகொலை செய்வதுதான் வழி என்று அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் கட்டுரை வெளியானது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தின் அட்லாண்டா நகரில் வசிக்கும் யூதர்களுக்காக வெளிவரும் பத்திரிகை ஜூயிஷ் டைம்ஸ். இதில் ஆண்ட்ரூ அட்லர் என்ற யூத எழுத்தாளர் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இஸ்ரேல் மக்களைக் காப்பாற்ற 3 வழிகள் இருக்கின்றன. ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் இயக்கத்தை அழிக்க வேண்டும். ஈரானில் உள்ள அணுசக்தி மையங்களைத் தகர்க்க வேண்டும். அமெரிக்க அதிபர் ஒபாமாவை இஸ்ரேல் படுகொலை செய்ய வேண்டும் என்று அவர் எழுதியிருந்தார். இது பெரும் பரபரப்பு, சர்ச்சையை ஏற்படுத்தின. இதற்குப் பல தரப்பிலும் கண்டனம் எழுந்தது. அதையடுத்து, கட்டுரை எழுதிய ஆண்ட்ரூ அட்லர் மன்னிப்புக் கேட்டுள்ளார். (ந)

## பறவைக் காய்ச்சலால் சீனாவில் இருவர் சாவு

பெய்ஜிங், ஜன 25

சீனாவில் பறவை காய்ச்சல் நோய்க்கு 2 பேர் பலியாகி உள்ளனர்.

சீனாவில் கடந்த 18 மாதங்களாகப் பறவைக் காய்ச்சல் நோய் பரவி வருகிறது. அதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இருந்தும் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்த நிலையில், தற்போது மேலும் ஒருவர் பலியாகி உள்ளார். இவருடன் சீனாவில் பறவை காய்ச்சலால் இறந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்தது.

தற்போது கிழக்கு ஆசிய நாடுகளான சீனா, வியட்னாம், இந்தோனேசியா, மற்றும் கம்போடியாவில் பறவை காய்ச்சல் நோய் வேகமாகப் பரவி வருகிறது. (ந)



எகிப்தின் முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக் பதவி விலகிய பின்னர் முதல் தடவையாக நாடாளுமன்றக் கூட்டம் தலைநகர் கெய்ரோவில் நடந்தது.

## ஐரோப்பிய யூனியனின் தடை ஈரானை பெருமளவு பாதிக்காது

பிரஸ்ஸல்ஸ், ஜன.25

ஈரானில் இருந்து 20 சதவீதம் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யும் ஐரோப்பிய யூனியன், நேற்றுமுன் தினம் அதற்குத் தடை விதித்துள்ளது. இந்தத் தடை ஈரான் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்றாலும் பெருமளவில் அதன் தாக்கம் இருக்காது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈரானின் அணுசக்தித் திட்டங்களை அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் தொடர்ந்து எதிர்த்து வருகின்றன. ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக அவை குற்றம் சாட்டுகின்றன. ஆனால், தனது அணுசக்தி ஆக்கபூர்வ செயற்பாடுகளுக்கு மட்டுமே பயன்படுத் தப்படுவதாக ஈரான் கூறி வருகிறது.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்சில், ஐரோப்பிய யூனியன் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நடந்தது. அதில், ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்க்குத் தடை விதிக்க முடிவு செய்யப்பட்டது. இந்தத் தடை, இந்த வார நடுப்பகுதியில் இருந்து நடைமுறைக்கு வரும். அதில் இருந்து, ஈரானுடன் எண்ணெய் இறக்குமதிக்குப் புதிய ஒப்பந்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது. ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள், எதிர்வரும் ஜூலை 1ஆம் திகதியோடு காலாவதியாகி விடும். இதன் மூலம், ஈரானுக்கு மேலும் நெருக்கடி அதிகரித்துள்ளது.


ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியில், 20 சதவீதம் ஐரோப்பிய யூனியன் வாங்குகிறது. எனினும் பெரும்பாலான ஏற்றுமதி, ஆசிய நாடுகளைச் சார்ந்தே உள்ளது. சீனா, 20 சதவீதமும், ஜப்பான் 17 சதவீதமும், இந்தியா 16 சதவீதமும், இத்தாலி 10 சதவீதமும், தென் கொரியா 9 சதவீதமும் ஏனைய நாடுகள் 8 சதவீதமும் ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்கின்றன. இந்த எண்ணெய்த் தடை மூலம், ஈரானின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றாலும் பெருமளவிலான தாக்கம் இருக்காது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ந)

## எச்சரிக்கையை மீறி அமெ.கப்பல் பாரசீக வளைகுடாவில் நுழைந்தது

ஈரானின் எச்சரிக்கையை மீறி அமெரிக்காவின் விமானம் தாங்கிப் போர்க்கப்பலான யு.எஸ்.எஸ்.ஆபிரகாம் லிங்கன் நேற்று ஹோர்முஸ் நீரிணை வழியாக பாரசீக வளைகுடாவுக்குள் நுழைந்துள்ளது.

இதேவேளை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஹோர்முஸ் நீரிணைப் பகுதிக்கு போர்க்கப்பல்களை அனுப்பியிருப்பதால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியை மூடிவிடப் போவதாக ஈரான் அண்மையில் எச்சரித்துள்ளது. அடுத்தே மேற்குலக நாடுகள் இந்த அதிரடி முடிவினை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



ஈரானின் எச்சரிக்கையை மீறி 100,000 தொன்கள் எடைகொண்ட யு.எஸ்.எஸ் ஆப்ரகாம் லிங்கன் என்ற விமானத்தாங்கி அமெரிக்க கப்பல் ஹோர்முஸ் பகுதியில் நங்கூரமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எச்சரிக்கையையும் மீறி பிரிட்டன், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் மூன்று நாடுகளினதும் கப்பல்கள் ஒரே நேரத்தில் அங்கு பிரவேசித்திருப்பது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அமெரிக்கத் தாக்குதலில் தீவிரவாதிகள் ஐவர் சாவு

இஸ்லாமாபாத், ஜன.25

பாகிஸ்தான் எல்லையில் மலைப்பகுதியில் அமெரிக்கப் படை நேற்றுமுன்தினம் நடத்திய ஆளில்லா விமான தாக்குதலால் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் உள்ள வீடு மற்றும் ஒரு கார் மீது அமெரிக்க படை நேற்று தாக்குதல் நடத்தியது. அதில், 5 தீவிரவாதிகள் பலியானதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (ந)

## திடீரென மூழ்கிய கப்பல்கள்

பிலிப்பைன்ஸ் நாட்டு கடற்பகுதியில் சிமெந்து மற்றும் இரும்புத் தாது பொருள்களை ஏற்றிச் சென்ற 2 சரக்கு கப்பல்கள் திடீரென்று கடலில் மூழ்கத் தொடங்கின.

அதைத் தொடர்ந்து 3 கப்பல்கள் மற்றும் ஹெலிகொப்டர்களில் மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று கப்பல்களில் சிக்கியிருந்த 32 ஊழியர்களைப் பத்திரமாக மீட்டனர். இந்தக் கப்பல்கள் மூழ்கியதற்கான காரணம் தெரியவில்லை. இதுகுறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (ந)

## தந்தையின் கண் எதிரே முதலைக்கு இரையான சிறுமி

தந்தையின் கண்முன்னே மகளை முதலை கடித்து விழுங்கியது. இந்தச்சம்பவம் இந்தோனேஷியாவில் இடம்பெற்றுள்ளது. இந்தோனேசியாவில் கிழக்கு நுசாடென் காரா மாகாணத்தில் உப்புநீர் ஆறு ஓடுகிறது. அதில் ஆமைகள் மற்றும் அழகிய மீன்கள் அதிக அளவில் உள்ளன. அங்கு 10வயதுச் சிறுமி தனது தந்தை மற்றும் சகோதரருடன் சுற்றுலா வந்து இருந்தாள்.

ஆற்றங்கரைக்குச் சென்ற சிறுமி அங்கு நீந்திக்கொண்டிருந்த ஆமைகளை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். அப்போது திடீரென ஆற்றில் தவறி விழுந்து விட்டாள். உடனே, அந்த ஆற்றில் இருந்த முதலை அவளைக் கடித்து தண்ணீருக்குள் இழுத்து சென்றது. இதனால் அவள் அலறி கூச்சலிட்டாள். அதை பார்த்ததும் சில மீற்றர் தூரத்தில் நின்று கொண்டிருந்த அவரது தந்தை ஓடி வந்தார். அதற்குள் அவளை அந்த முதலை கொன்று விழுங்கிவிட்டது. தனது கண் முன்னே இந்தக் கொடூர சம்பவம் நடந்ததை [illegible] நிலையில்தந்தை நின்று துடித்துக் கொண்டிருந்தார்.

## தரைவிரிப்பில் இந்துக் கடவுள் படங்கள் எதிர்ப்பால் நீக்கியது ஜேர்மன் நிறுவனம்

இந்துக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, சுவாமியின் படம் போட்ட யோகாசன தரைவிரிப்புகளை ஜேர்மனி நிறுவனம் நீக்கியுள்ளது.

ஜேர்மனியின் விக்கன்ஸ்பக் நகரைச் சேர்ந்த நிறுவனம் யோகிஸ்டர். யோகாசனமான செய்யும்போது அணியும் பேண்ட், சட்டை, அமர்ந்து யோகா செய்வதற்கான தரைவிரிப்பு, உள்பட பல்வேறு பொருள்களை இணையம் மூலமாக விற்று வருகிறது. உட்காரும் தரை விரிப்பில் இந்து கடவுள்களான விநாயகர், சிவன், லட்சுமி உள்ளிட்ட சுவாமி படங்கள் அதில் வரையப்பட்டிருந்தன. விலை ரூ.1,600. அமெரிக்காவில் இது பரபரப்பாக விற்பனையானது.



இந்தநிலையில், உட்கார்ந்து, கால் வைத்து பயிற்சி செய்யும் தரைவிரிப்பில் சுவாமி படம் போட்டிருப்பதற்கு இந்துக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியது. இந்த விரிப்பை நீக்கம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். இதைத் தொடர்ந்து, இணைய விற்பனையில் இருந்து, சுவாமி படம் போட்ட விரிப்பை யோகிஸ்டர் நிறுவனம் நீக்கிவிட்டது. புத்தகம், பேனா, பென்சில், மட்டுமின்றி சாதாரண பேப்பர் காலில் பட்டால் கூட இந்துக்கள் தொட்டுக் கும்படுவார்கள். மக்களின் மன உணர்வை புரிந்து கொண்டு தரைவிரிப்பை நீக்கம் செய்த யோகிஸ்டர் நிறுவனத்துக்குப் பாராட்டுகள் என்று அமெரிக்கா வாழ் இந்துக்கள் அமைப்பின் தலைவர் ராஜன் சேத் கூறியுள் ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஷாரப்பை ஆதரிக்கிறார்கள் முன்னாள் ராணுவ அதிகாரிகள்

இஸ்லாமாபாத்,ஜன.25

முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் நாடு திரும்ப அனுமதிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் ராணுவ முன்னாள் அதிகாரிகள் நூற்றுக்கும் அதிகமானோர் குரல் கொடுத்துள்ளனர்.

கடந்த 1999ஆம் ஆண்டு ராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்தவர் பர்வேஸ் முஷாரப். அதிபர் பதவியை ஏற்றுப் பல அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்தவர். பின்னர் அரசியல் மாற்றங்களால், கடந்த 2008ஆம் ஆண்டு பதவியில் இருந்து விலகித் தற்போது லண்டனில் தஞ்சம் அடைந்துள்ளார். இந்த நிலையில், ஜனவரி மாதம் நாடு திரும்ப உள்ளதாகவும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் முஷாரப் பேட்டி அளித்தார்.

ஆனால், முஷாரப் நாடு திரும்பினால், முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ படுகொலை வழக்கில் கைது செய்யப்படுவார் என்று பாகிஸ்தான் அரசு திட்டவட்டமாகக் கூறியுள்ளது. இதையடுத்து முஷாரப் தனது திட்டத்தை கைவிட்டுள்ளார். இந்நிலையில், பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் நூற்றுக்கும் அதிகமானோர் முஷாரப் நாடு திரும்பவும் தேர்தலில் போட்டியிடவும் ஆதரவுக் குரல் கொடுத்துள்ளனர்.

**முஷாரப் நாடு திரும்பவும் தேர்தலில் போட்டியிடவும் ஆதரவுக் குரல் கொடுத்துள்ளனர்.**



முஷாரப் நாடு திரும்ப அனுமதிக்க வேண்டும். அவரைக் கைது செய்யக் கூடாது என்று வலியுறுத்தி ஓய்வு பெற்ற ராணுவ ஜெனரல் முகமது ஆசிஸ் கான், ஷாஹித் கரிமுல்லா உள்பட 100 இற்கும் அதிகமானோர் கடிதத்தில் கையெழுத்திட்டு அரசுக்கு அனுப்பி உள்ளனர். (ந)


# பிஜி தீவில் நிலநடுக்கம்

பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள பிஜி தீவில் நேற்று அதிகாலையில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவு கோலில் 6.3 ஆகப் பதிவாகியுள்ளது.

பிஜி தலைநகர் சுவா நகருக்கு தெற்குப் பக்கமாக 582 கி.மீ. ஆழ் கடற் பரப்பில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

கடலில் நிலநடுக்கத்தின் மையம் அமைந்திருந்ததால் கடல் அலைகளின் சீற்றம் அதிகமாக இருந்தது. ஆனாலும் சுனாமி ஏற்படும் வாய்ப்பு இல்லை என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கத்தால் உயிர்சேதம் ஏற்பட்டதாக இதுவரை எந்தத் தகவலும் இல்லை. (ந)

# புகுஷிமாவில் மீண்டும் கதிர்வீச்சு



டோக்கியோ, ஜன.25

ஜப்பானின் புகுஷிமா அணுஉலை கதிர்வீச்சு தண்ணீரில் மீண்டும் பரவியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜப்பானில் கடந்த மார்ச் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமியை அடுத்து புகுஷிமா அணுமின் நிலயத்தில் உள்ள அணுஉலைகள் வெடித்தன. இதனால் அங்கிருந்து கதிர்வீச்சு வெளியேறியது. இது குடிநீர், பால், கீரை வகைகள் உள்ளிட்ட உணவு பொருள்களில் பரவியது.

அங்கிருந்து வெளியேறிய கதிர்வீச்சுத் தாக்கத்தை அணு உலை அதிகாரிகள் மிகக் கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்தினர்.

இந்த நிலையில், மீண்டும் புகுஷிமா அணுமின் நிலையத்தில் இருந்து கதிர்வீச்சு வெளியாகி உள்ளது. அங்குள்ள 2ஆவது அணுஉலையில் இருந்து வெளியான கழிவு நீரில் கதிர்வீச்சு பரவியுள்ளது. அதன் அளவு மிகவும் அதிகமாக இருப்பதாகவும், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் ஜப்பானில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ந)



*சீனாவில் டிராகன் புத்தாண்டு கோலாகலமாகப் பிறந்தது. பீஜிங் உள்ளிட்ட நகரங்களில், கண்ணைக் கவரும் வாண வேடிக்கைகளுடன் மக்கள் உற்சாகமாகப் புத்தாண்டைக் கொண்டாடினர்.*

# அசாத் பிடிவாதம்



டமாஸ்கஸ், ஜன.25

சிரிய அதிபர் பஷர் அல் அசாத், தனது பதவியை ராஜினாமா செய்து விட்டுப் பொறுப்புக்களைத் துணை அதிபரிடம் அளிக்க வேண்டும் என்ற அரபு லீக்கின் அழைப்பை சிரியா நிராகரித்துவிட்டது.

சிரியாவில் அதிபர் அசாத்துக்கு எதிராக கடந்த 10 மாதங்களாக மக்கள் போராடி வருகின்றனர். அவர்களுடன் ராணுவத்தில் இருந்து பிரிந்தோரும் சேர்ந்துள்ளனர். ராணுவத்தில் இருந்து பிரிந்தோர், 'சிரிய விடுதலை ராணுவம்' என்ற பெயரில் இயங்கி வருகின்றனர். இவர்களுக்கும், அசாத்தின் ராணுவத்துக்கும் மோதல் வலுத்து வருகிறது. இது உள்நாட்டுக் கலவரமாகப் பரிணமிக்கும் முன், தடுத்த நிறுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் அரபு லீக் சில பரிந்துரைகளை முன்வைத்தது.

இந்த நிலையில் தான் நேற்று முன்தினம் எகிப்து தலைநகர் கெய்ரோவில் கூடிய அரபு லீக் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில், சிரியாவில் உள்ள அரபு லீக் பிரதிநிதிகள் குழுவின் ஆய்வை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்க முடிவெடுக்கப் பட்டது. அத்துடன், அதிபர் அசாத், பதவி விலகித் தனது பொறுப்புக்களைத் துணை அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரிக்கையும் விடுக்கப்பட்டது.

இதுகுறித்து நேற்று சிரியா வெளியிட்டுள்ள அறிக்கையில்'அரபு லீககின் இந்த அழைப்பு, சிரியாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகிறது. அரசு, பயங்கரவாதிகள் கூடத் தான் மோதிக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே எடுக்கப்பட்ட அரபு லீக்கின் முடிவுக்கு மாறாக வெளியிடப்பட்ட இந்த அழைப்பை சிரியா நிராகரிக்கிறது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. (ந)

# நடுவானில் விமானி மரணம்

நடுவானில் விமானம் பறந்து கொண்டிருந்தபோது ரஷ்ய விமானி திடீரென இறந்ததால் பதற்றம் ஏற்பட்டது.

ரஷ்யாவின் போயிங் விமானம் ஒன்று பாங்கொக்கில் இருந்து ரஷ்யாவின் நோவோசிபர்ஸ்க் பகுதிக்குப் பறந்து கொண்டிருந்த போது, விமானி செர்ஜி கோலெவ்வுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

விமானத்தில் அவருக்கு எல்லாவித முதலுதவியும் அளிக்கப்பட்டன. அத்துடன் விமானத்தில் பயணம் செய்த இருதயவியல் டாக்டர் மூலமும் அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்தநிலையில் உடனடியாகத் தலைமை விமானி சீனாவின் சென்ட் விமான நிலையத்தில் விமானத்தை அவசரமாகத் தரையிறக்க முயற்சித்தார். அதற்குள் விமானி செர்ஜி மாரடைப்பில் இறந்துவிட்டார்.

அதனால் விமானம் தரையிறங்கவில்லை. செர்ஜிக்கு வயது 44தான் ஆகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. தற்போதுதான் இந்தத் தகவல்கள் வெளியாகி உள்ளது. (ந)

# பிரமாண்ட 'சூரிய' உதயம்

## இந்த போலி சூரியனானது ஒரு காற்பந்தைப்போல் 30,000 மடங்குகள் பெரிதாக அமைக்கப்பட்டது

லண்டனிலுள்ள றாபல்கா சதுக்கத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட மிகப்பிரமாண்டமான சூரிய உதயம் அங்கு கூடியிருந்தவர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

ஆனால் அது நிஜமான சூரியன் அல்ல என்று சிறிது நேரத்தின் பின்னரே அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

அதாவது அந்த இடத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்கிலேயே இந்த பிரமாண்டமான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதாவது 60,000 மின்குமிழ்களைப் பயன்படுத்தி சூரியனை போன்ற அமைப்பில் ஒரு போலி சூரியனை உருவாக்கியுள்ளனர்.

இந்தப் போலி சூரியனானது ஒரு காற்பந்தைப்போல் 30,000 மடங்குகள் பெரிதாக அமைக்கப்பட்டதுடன் அதன் மொத்தப் பரப்பளவு 200 சதுர மீற்றர்களாகும். அத்துடன் இதன் நிறையானது சுமார் 2,500 கிலோ கிராம்கள் ஆகும்.



# பான் கீ-மூன் கடும் கண்டனம்

நைஜீரியா, ஜன.24

நைஜீரியாவில் நடந்த தொடர் வெடிகுண்டு தாக்குதலுக்கு ஐ.நா பொதுச்செயலர் பான் கீ-மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது;

'மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் 162 பேர் உயிரிழந்துள்ளனர். இது கடும் கண்டனத்துக்குரியது.

இது போன்ற தாக்குதல்களால் பல அப்பாவி மக்கள் பலியாகின்றனர். மனித உயிர்களுக்கு எதிராக நடத்தப்படும் இதுபோன்ற தாக்குதல்களை ஒரு போதும் பொறுத்துக்கொள்ள முடியாது.

இதற்கு காரணமானவர்கள் கண்டிப்பாக சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

நைஜீரியாவில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையங்களின் மீதும், கானோ நகரில் உள்ள உளவுத்துறை அலுவல்கங்கள் மீதும் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர்.

இதில் 162 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துடன்; பலர் காயமடைந்தனர். (ந)

# அரசியல் தலைவர்கள் மீது வழக்கு

கென்யாவில் 2007ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலை அடுத்து இடம்பெற்ற இன மோதல்களின் போது மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்ததாக அந்த நாட்டின் நான்கு அரசியல் தலைவர்கள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

கென்யாவின் அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிட இருந்த உஹுரு கென்யாட்டா, வில்லியம் ருடோ ஆகியோரும் குற்றம் சாட்டப்பட்டவர்களில் அடங்குவர்.

தேர்தல் முடிவு தொடர்பாக இனக்குழுக்கள் இடையே வன்முறைகளைத் தூண்டிவிட்டார்கள், என்று இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# இன்னமும் முபாரக் அதிபரே

கெய்ரோ,ஜன.25

எகிப்து நாட்டின் அதிபராக இன்னமும் முபாரக் தான் உள்ளார். அவர் முறையாக ராஜினாமா கடிதம் கொடுக்கவில்லை என அவரது சட்டத்தரணி வாதாடியுள்ளார்.

கடந்த ஆண்டு எகிப்து அதிபர் ஹோஸினி முபாரக்கிற்கு எதிராக மக்கள் புரட்சி ஏற்பட்டது. 18 நாள்கள் நடந்த போராட்டத்துக்குப் பின்னர் அதிபர் முபாரக் பதவி விலகினார். போராட்டத்தின் போது ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கொல்லப் பட்டதால், இவர் மீது ஊழல் மற்றும் போர்க்குற்றவழக்குகள், கெய்ரே சிறப்பு நீதிமன்றில் நடந்தது வருகிறது.

முபாரக்கின் சட்டத்தரணி ஃபரீத்-அல்தீப் வாதிட்டார். அதன்போது அவர் கூறியதாவது;


எகிப்து அதிபராக முபாரக் இன்னமும் பதவியில் உள்ளார். கடந்த ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி பதவி விலகுவதாக அறிவித்தாலும், முறையாக ராஜினாமாக் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை.

அதிகாரப்பூர்வமாக அவர் பதவிவிலகுவதாக எந்த ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை. அதற்குப் பதிலாக, முன்னாள் உளவுத் துறைத் தலைவரான ஒமர் சுலைமான் என்பவரை துணை அதிபராக நியமித்து அவரிடம் தற்காலிகப் பொறுப்பை ஒப்படைத்தார் என்றார். இதைத் தொடர்ந்து வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி 16ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வங்கியில் ரூ.24 லட்சம் கொள்ளை

**சென்னை பெருங்குடி ராஜீவ்காந்தி வீதியில் பாங்க் ஒப் பரோடா வங்கியின் கிளையில் நேற்றுமுன்தினம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டது.**




சென்னை, ஜன.25

சென்னையில் பட்டப் பகலில் நான்கு பேர் கொண்ட கும்பல் புகுந்து துப்பாக்கி முனையில் ரூ. 24 லட்சம் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டின் சென்னை பெருங்குடி ராஜீவ்காந்தி வீதியில் பாங்க் ஒப் பரோடா வங்கியின் கிளை உள்ளது. நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு 10 வாடிக்கையாளர்கள் வங்கிக்குள் இருந்தனர்.

இந்த சமயத்தில் நான்கு இளைஞர்கள் காரில் வங்கிக்கு வந்தனர். வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுக்க வந்தவர்கள் போல் வாடிக்கையாளர்களுடன் வரிசையில் நின்ற படி நோட்டமிட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவன் திடீரென்று வங்கி மேலாளரின் அறைக்குள் சென்று துப்பாக்கியைக் காட்டி இந்தியில் பேசி சத்தம் போட்டால் கொன்று விடுவேன் என்று மிரட்டினான்.

இதையடுத்து அவனுடன் வந்த மற்ற 3 பேரும் தங்களிடமிருந்த துப்பாக்கிகளை எடுத்து வங்கிக்குள் காத்திருந்த வாடிக்கை யாளர்களையும், வங்கி ஊழியர்களையும் மிரட்டி அமைதியாக இருக்குமாறு எச்சரித்தனர். அப்போது ஒரு வாடிக்கையாளர் தனது செல்போனை எடுத்து யாருக்கோ தகவல் தர முயன்றார். இதைப் பார்த்த கொள்ளையன் அவரைத் தாக்கினான்.

ஹிந்தியில் பேசிய நால்வரும் கைகளில் துப்பாக்கியுடன் மிரட்டியதால் ஊழியர்களும், வாடிக்கையாளர்களும் சத்தம் போடாமல் அமைதியாக இருந்தனர். 2 பேர் மேலாளரையும், காசாளரையும் துப்பாக்கியைக் காட்டி பணத்தை எடுத்து வைக்கும் படி மிரட்டினர்.


பின்னர் அங்கிருந்த ரூ.24 லட்சம் பணத்தை தாம் கொண்டு வந்திருந்த 4 பைகளில் போட்டனர். அதன் பின்னர் வங்கி ஊழியர்களையும், வாடிக்கையாளர்களையும் அறைக்குள் போட்டுப் பூட்டி விட்டுச் சென்றனர்.

பொலிஸாருக்குதகவல் சென்றதும் மாநகர பொலிஸ் ஆணையாளர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் விரைந்து வந்தனர். கை ரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாயும் வரவழைக்கப்பட்டது.

தற்போது வங்கியில் கொள்ளையடித்த வர்கள் பீஹார் மாநிலத்தைச் சேர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகப்பட்டுள்ளனர். இதையடுத்து 30 ஆயிரம் தொழிலாளர்களை தீவிர கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வங்கிக் கிளையில் 2500 கணக்குகள் உள்ளன. அதில் 1500 கணக்குகள் வட மாநிலத்தவர்களின் கணக்குகளாகும். இவர்கள் அனைவருமே கட்டுமானத் தொழிலாளர்கள் என்பது பொலிஸாரை சிந்திக்க வைத்துள்ளது. (வ)

## மத்திய அமைச்சராகுவாரா நடிகர் சிரஞ்சீவி?



பிரஜா ராஜ்யம் கட்சியின் தலைவரும், தெலுங்கு நடிகருமான சிரஞ்சீவிக்கு மத்திய அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரஜா ராஜ்யம் கட்சிக்கு ஒரு மத்திய அமைச்சர் பதவியும், இரண்டு மாநில அமைச்சர்கள் பதவியும் தரப்படும் என்று காங்கிரஸ் மேலிடம் உறுதி அளித்தி ருந்தது.

இதனடிப்படையில் கடந்த வாரம் ஆந்திர அமைச்சரவையில் சிரஞ்சீவி கட்சியைச் சேர்ந்த காந்த சீனிவாசராவ் மற்றும் ராமச்சந்திரய்யாவுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன.

தற்போது ஐந்து மாநில தேர்தல் பிரசாரத்தில் காங்கிரஸ் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பிரசாரம் முடிந்தவுடன் மத்திய அமைச் சரவை விரிவுபடுத்தப்படும்.

அப்போது சிரஞ்சீவிக்கு அமைச் சரவை அந்தஸ்தில் அமைச்சர் பதவி வழங்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## 'டுவிட்டரில்' பிரதமர் அலுவலகம்

டில்லி, ஜன 25

பிரதமர் மன்மோகன் சிங்கின் அலுவலகம் பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரில் அறிமுகமாகியுள்ளது.

பிரதமரின் தகவல் தொடர்பு ஆலோசகராக தொலைக்காட்சிப் பத்திரிகையாளர் பங்கஜ் பச்செளரி பதவியேற்றுக் கொண்டதன் எதிரொலியாக பிரதமர் அலுவலகம் டுவிட்டரில் இணைந்துள்ளது.

மக்களின் நலனுக்காகவே அரசு செயற் படுகிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள பிரதமரின் பணிகள் இவ்வாறு டுவிட்டரில் கொண்டுவரப்படுவதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)



டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற, வீரதீர சிறுவர்களுக்கான விருது வழங்கும் விழாவில் பிரதமர் கலந்து கொண்டு, உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஓம்பிரகாஷூக்கு விருது வழங்கிக் கௌரவித்தார்.

# மக்கள் மன்றப் பணியாளர்கள் 13,000 பேர் மீண்டும் பணிக்கு

தமிழ்நாட்டில் பணி நீக்கம் செய்யப்பட்ட 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களையும் உடனடியாக பணியில் அமர்த்த தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில்தி.மு.கஆட்சியின் போது ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மக்கள் நலப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

சுமார் 13,500 மக்கள் நலப் பணி யாளர்கள் பணியாற்றி வந்தனர். பஞ்சாயத்தால் மேற்கொள்ளப்படும் பணிகளை இவர்கள் செய்து வந்தனர். இவர்கள் உள்ளூராட்சித் துறையின் கீழ் உள்வாங்கப்பட்டவர்கள்.


தற்காலிகப் பணியாளர்களான இவர்களுக்கு கடந்த தி.மு.க. அரசு அடுத்த ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரை பணி நீடிப்பு ஆணை வழங்கியிருந்தது. இந்தநிலையில் நவம்பர் 8 ஆம் திகதி இரவோடு இரவாக அத்தனை பேரும் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

அரசின் இந்த நடவடிக்கைக்கு மக்கள் நலப் பணியாளர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

பணி நீக்கத்தை எதிர்த்து மக்கள் நலப் பணியாளர்களின் 2 சங்கங்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதை விசாரித்த உயர் நீதிமன்றம் பணி நீக்க உத்தரவுக்கு இடைக் காலத் தடை விதித்திருந்தது. இந்தநிலையில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதில் மக்கள் நலப் பணியாளர்கள் நீக்கத்தை ரத்து செய்வதாகவும் உடனடியாக அனைத்து மக்கள் நலப் பணியாளர்களையும் தமிழக அரசு மீண்டும் பணியில் சேர்க்க வேண்டும் என்றும் அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

## இந்தியாவிடமும் அணுவாயுத நீர்மூழ்கி



**10 வருட குத்தகை அடிப்படையில் ரஷ்யாவால் இந்தியக் கடற்படைக்கு இந்த அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல் வழங்கப்பட்டது.**

ரஷ்யாவிடம் இருந்து நெர்பா ரக அணுஆயுத நீர்மூழ்கிக் கப்பலை இந்தியா வாங்கியுள்ளது. 10 வருட குத்தகை அடிப்படையில் இந்தியக் கடற்படைக்கு இது பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பலுக்கு மொத்த குத்தகைத் தொகையாக 900 மில்லியன் டொலர்கள் கொடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானது.

ரஷ்யாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் இந்தியாவின் ரஷ்யத் தூதர் அஜய் மல்கோத்ரா கலந்து கொண்டார். அவரிடம் நெர்பா ரக அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கப்பலுக்கு ஐ.என்.எஸ். சக்ரா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் அமெரிக்க, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து இந்தியா அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பலை இயக்கும் நாடுகளின் பட்டியலில் 6 ஆவது நாடாக இடம் பெறும் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. (வ)

## உலகப் பொருளாதார மாநாட்டில் இந்தியக்குழு

சுவிற்ஸர்லாந்தில் நடைபெற உள்ள உலக பொருளாதார அமைப்பின் மாநாட்டில் 110 பேர் கொண்ட இந்தியக் குழுவினர் பங்கேற்க உள்ளனர்.

உலக பொருளாதார அமைப்பின் மாநாடு சுவிற்ஸர்லாந்து நாட்டில் உள்ள டாவோஸ் நகரில் நடைபெற உள்ளது.

இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 5 தினங்கள் நடைபெற இருக்கும் உலக பொருளாதார மாநாட்டில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா தலைமையில் 110 பேர் கொண்ட இந்திய பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் பங்கேற்கவுள்ளனர். (வ)

## தானே புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்துக்கு கூடுதல் நிதி

### பிரதமர் அறிவிப்பு

'தானே' புயல் பாதிப்புக்காக தமிழகத்துக்கு கூடுதல் நிதி வழங்கப்படும் என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

தானே புயல் நிவாரணம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ண சாமி எழுதியிருந்த கடிதத்துக்கு பிரதமர், பதில் அளித்து எழுதிய கடிதத்தில் தெரிவித்ததாவது:

'தானே' புயலால் பாதிப்புக்குள்ளான தமிழகத்திற்கு இடைக் கால நிவாரணமாக 500 கோடி ரூபாயும், புதுச்சேரி மாநிலத்துக்கு 125 கோடியும் மத்திய அரசு வழங்கியுள்ளது. இந்த பாதிப்புகளை நேரடியாகப் பார்வையிட்ட மத்திய குழு, மத்திய அரசுக்கு அறிக்கை அளித்ததும், அதன் அடிப்படையில் தமிழகத்துக்குத் தேவையான நிதி முழுமையாக வழங்கப்படும் .

பாதிக்கப்பட்ட மக்களின் மறு வாழ்வுக்காக என்னென்ன உதவிகள் வேண்டுமோ, அவை அனைத்தை மத்திய அரசு வழங்கும் என்று அதில் உறுதி அளிக்கப்பட் டுள்ளது. (வ)

## பிரதமர் வேட்பாளராக மோடியை நிறுத்த முடிவு



குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளராக களமிறக்குவதற்கு அந்தக்கட்சியின் தேசியத் தலைவர் நிதின் கட்காரி ஆதரவு தெரிவித்துள்ளார். அத்துடன், தேசிய அளவில் பா.ஜ.கவை வழி நடத்துவதற்கு மோடியிடம் திறமை உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடம் டிசெம்பர் மாதத்துடன் நிதின் கட்காரியின் தலைவர் பதவி முடி வுக்கு வரும் நிலையில், தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் பேட்டியளிக்கையில் தெரிவித்ததாவது:

'நான் ஒருபோதும் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட மாட்டேன். பிஜேபியின் தலைவராவதற்கும், பிரதம ராவதற்கும் மோடி தான் மிகவும் பொருத்தமானவர்.

எனது தலைமைப் பொறுப்பை நீட்டித்துக்கொள்ள விரும்பவில்லை. ஒரு சாதாரண தொண்டனாக கட்சிப் பணியைத் தொடர விரும்புகிறேன். தலைவர் பொறுப்பை மோடி ஏற்பதற்கு எனது ஆதரவை வழங்குவேன்.

பிரதமர் வேட்பாளரைப் பொறுத்தவரை, பிஜேபி உரிய கால கட்டத்தில் சரியான தெரிவைச் செய்யும்' - என்றார் அவர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்தங்கிய நிலையில் வலி.மேற்குப் பிரதேசம்

## பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஜன.25

வலி.மேற்கு பிரதேச சபை 25 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டதாக உள்ள போதிலும் அங்குள்ள கிராமங்கள் அனைத்தும் அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன.

இங்கு பின்தங்கிய கிராமங்களுக்கு புத்துயிர் கொடுத்து அவற்றினை அபிவிருத்தி செய்வதற்கு வலி.மேற்கு உள்ளூராட்சி சபையும்- அலுவலர்களும் முதலில் விழிப்படைய வேண்டும் என வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்தியும் - பின்தங்கிய கிராமங்களை நோக்கி அபிவிருத்தி செய்தலும் எனும் தலைப்பில் நடனேந்திரனிடம் கேட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது சம்பந்தமாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

இங்கு அபிவிருத்தி என்பது கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, காணிபகிர்வு, மலசலகூட அபிவிருத்தி, மருத்துவம், சிறுவர் அபிவிருத்தி, முதியோர் அபிவிருத்தி என பல துறைகளிலும் ஏதோவொரு விடயத்தில் உயர்ந்து இருக்க வேண்டும். ஆனால் எமது பிரதேசத்தில் நாம் மேற்படி துறைகளில் அபிவிருத்தியின்றி பின்தள்ளப்பட்டே வருகின்றோம்.

**2012 அபிவிருத்தி ஆண்டாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அபிவிருத்தி என்ற செயற்பாடு வடக்கில் வலுவிழந்து விட்டது.**

2012 அபிவிருத்தி ஆண்டாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அபிவிருத்தி என்ற செயற்பாடு வடக்கில் வலுவிழந்து விட்டது.

அரசின் வரவு-செலவு திட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அவர்களின் தகுதிக்கேற்ப முழுமையாக வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் தற்போது அதற்கும் மிக குறைந்த ஒதுக்கீடே எமக்குக் கிடைக்கவுள்ளது என்பது ஊடகங்கள் ஊடாக அறியக் கூடியதாக உள்ளது.

எனவே ஒரு பிரதேசம் உண்மையான அபிவிருத்தி அடைய வேண்டும் எனின் பிரதேசத்தின் கீழ் உள்ள கிராமங்களையும் அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்ல வேண்டும். அங்குள்ள அனைத்து கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு, விளையாட்டு மைதானம் உட்பட அனைத்தும் இயங்கு நிலைக்கு (Dynamic function) கொண்டு வரப்பட வேண்டும்.

எனவே வலி.மேற்கு பிரதேச சபை வலிமையுடைய பிரதேசமாக மாற வேண்டுமெனில் அங்குள்ள சபையும் - அதிகாரிகளும் விழிப்படைய வேண்டும்.

எண்ணங்களையும், சிந்தனைகளையும் ஒருமுகப்படுத்தி செயற்பட அனைவரும் ஒன்று திரண்டால் மட்டுமே அபிவிருத்தியை அடையலாம் என்றார். (எ)

# 9 வீடுகள் சிக்கின

குருநகர், ஜன.25

தேசிய ரீதியான டெங்குக் கட்டுப்பாட்டு வார நிகழ்வுகள் குருநகர்ப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன.

ஜே/ 68, ஜே/ 69, ஜே/ 70, ஜே/71, ஜே/72, ஜே/67, ஜே/75, ஜே/76 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள வீடுகளில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் 688 வீடுகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது நுளம்பு பரவுவதற்குரிய வகையில் வீடுகளைத் துப்புரவு செய்யாமல் வைத்திருந்த ஒன்பது வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக யாழ்.மாநகர சபையின் குருநகர்ப் பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

**இதில் 688 வீடுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது நுளம்பு பரவுவதற்குரிய வகையில் வீடுகளைத் துப்புரவு செய்யாமல் வைத்திருந்த ஒன்பது வீட்டுஉரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை.**

இந்த நிகழ்வில் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்களும் கலந்து கொண்டார்கள். (எ-51)

# புதுமை மாதா திருவிழா ஆரம்பம்

குருநகர், ஜன.25

குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்றுக் காலை 6 மணிக்கு திருப்பலியைத் தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி காலை 6 மணிக்கு திருப்பலியில் மெழுகுவர்த்தி ஆசிர்வாதமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் நற்கருணைநாதர் ஆசிர்வாதமும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் 2 ஆம் திகதி திருநாள் திருப்பலிகளில் முதலாம் திருப்பலி காலை 5 மணிக்கும், 2 ஆம் திருப்பலி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் காலை 6.30 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு அன்னையின் திருச்சொரூபப் பவனி நடைபெற்று திருச்சொரூப ஆசீர்வாதம் நடைபெறும். (எ-51)

## ஸ்ரெப் பாடநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.25

அரச அலுவலர்களுக்கான ஆங்கில மொழி 'ஸ்ரெப்' பாடநெறியின் புதிய பிரிவு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் உள்ள 'ஸ்ரெப்' நிறுவனத்தில் மேற்படி கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேற்படி புதிய கற்கை நெறி நேற்று ஆரம்பித்து எதிர்வரும் 17ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (எ-83)

# கந்தன் காட்டு மயானம் இளைஞர்களால் புனரமைப்பு

கோப்பாய், ஜன.25

கோப்பாய் கைதடி வீதியில் உள்ள கந்தன் காட்டு மயானம் அப் பகுதி இளைஞர்களால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அப் பகுதி மக்கள் உடல்களை தகனம் செய்வதற்கு மேற்படி மயானத்துக்குச் செல்லும் போது பல சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதனால் பல தடவைகள் சம்பந்தப்பட்ட தரப்புக்கு கடிதம் அனுப்பியும் எந்தவிதமான பயனும் கிடைக்காத நிலையில் அந்தப் பகுதி இளைஞர்கள் தாங்களே நிதியைச் சேகரித்து மயானத்தைப் புனரமைப்புச் செய்துள்ளனர்.

இதேபோல் ஒவ்வொரு ஊரிலும் உள்ள இளைஞர்கள் தாங்களாகவே முயற்சி செய்து தமது ஊரில் உள்ள புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டால், அரச அலுவலகங்களைப் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டிய தேவை இருக்காது என அப் பகுதி இளைஞர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (எ)


## இலவச பின்னூட்டல் வகுப்பு

குருநகர், ஜன.25

குருநகர் சென்ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் நடத்தப்படும் இலவச பின்னூட்டல் வகுப்புக்கள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக இந்தக் கல்விக் கழகத்தின் செயலாளர் மு.நெல்சன் தெரிவித்தார்.

குருநகரில் தரம் 4 தொடக்கம் தரம் 9 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக இந்த வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-51)

# உயிர் பெற்றெழுகிறது குரும்பசிட்டி ஆலயம்



யாழ்ப்பாணம்,ஜன.25

கடந்த 22 வருடங்களுக்கு மேலாக சிதைவடைந்து காணப்பட்ட குரும்பசிட்டி சித்திவிநாயகர் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்த ஆலயம் கடந்த 2 மாதகாலங்களுக்கு முன்னர் மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட போது மக்கள் வழிபாட்டுக்காக கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆலயத்தின் உள் வீதிப்பகுதிகள் மற்றும் வெளிவீதிகள் என்பன குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பொது மக்களின் ஆதரவுடன் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் தமது ஆலய வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

தற்போது ஆலயக்குரு சிவத்திரு இரத்தினசாமி ஐயா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கட்டடப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை ஆலயத்தில் புதிய சந்தானகோபாலர் திருக்கோயில் அமைப்பதற்காக கட்டடப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

திருத்தப் பணிகள் நிறைவடைந்ததும் வெகுவிரைவில் ஆலய குடமுழுக்கு நடத்துவதற்கும் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. (எ-313)

# மருந்துச் சிட்டைகளை பரிசோதிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.25

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகளின் மருந்துச் சிட்டைகள் பரிசோதிக்கப்படவுள்ளன.

வடமாகாண சுதேச மருத்துவ மாகாணப் பணிப்பாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடமாகாணத்தில் உள்ள பல ஆயுள்வேத வைத்தியசாலைகளில் நோயாளர்களின் மருந்துச் சிட்டைகளில் நோயாளர்களின் நோய் அறிகுறிகள், நோய்க் குறிப்புகள், இன்றி மருந்துகளை மட்டும் எழுதுவது, தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது மிகவும் தவறான அணுகுமுறையாகும்.

ஒவ்வொரு நோயாளிக்கும் சிகிச்சை வழங்கப்படும்போது நோயாளியின் சுயவிவரங்களுடனான முறைப்பாடு, சம்பந்தப்பட்டவரது, நோய் தொடர்பான தற்காலிக நோய், நிர்ணயம்

**ஆயுள்வேத வைத்தியசாலைகளில் நோயாளர்களின் மருந்துச் சிட்டைகளில் நோயாளர்களின் நோய் அறிகுறிகள், நோய்க் குறிப்புகள், முன்னேற்றம் இன்றி மருந்துகளை மட்டும் எழுதுவது, தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.**

என்பவற்றுடன்சிகிச்சை முறையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

இவ்வாறான அறிவிப்புக்கள் குறிப்புக்கள் இன்றி, மருந்துகளை மட்டுமே எழுதி வழங்கும் முறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. விரைவில் நடத்தப்படும்சோதனை மூலம் இது அறியப்படவுள்ளது - என்றார். (எ)

# குளத்தையும் வீதிகளையும் புனரமைப்பார்களா?

கோப்பாய், ஜன.25

கோப்பாய் பாலனை கண்ணகை அம்மன் கோயிலுக்கு முன்னால் உள்ள குளமும் அதனைச் சூழவுள்ள வீதிகளும் நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யாமல் காணப்படுகின்றன.

இதனால் அந்த வீதிகளினூடாகப் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மழைகாலங்களில் பல பகுதிகளில் இருந்து இந்தக் குளத்துக்கு வெள்ளம் பாய்வதால் வீதிகள் வாய்க்கால் போல் காட்சி தருகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள் இந்தப் பகுதி மக்கள் கடிதம் அனுப்பியும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னர் இருந்த அரச அதிகாரிகள் திறமையானவர்களாக இருந்ததால் இப்பகுதியில் வீதிகள் அமைக்கப்பட்டதாகவும், இப்பொழுது இன்றுள்ள அதிகாரிகளால் (முயற்சி) இல்லாததால் இப் பகுதி பின்னோக்கிய நிலையிலேயே இருக்கப் போவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

**சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள் இந்தப் பகுதி மக்கள் கடிதம் அனுப்பியும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

அரச அதிகாரிகளாக பதவி உயர்வு பெற்றால் மட்டும் போதாது, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதன் மூலமே அப் பதவிக்கு மரியாதை இருக்கும் என மக்கள் மேலும் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேட்டீர்களா?

# வியனம்

### உள்ளூர்க் காரர் செய்வதெல்லாம் நியாயமோ ..... என்ன?

இலங்கையில் வேறெங்கும் இல்லாத சுண்ணக்கல் கொண்ட பிரதேசமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது.ஓரளவுக்கு மாங்குளம் வரை இது பரந்துள்ள போதும் யாழ்ப்பாணம் முழுவதும் இது அதிகளவில் செறிந்துள்ளது.யாழ்ப் பாணத்தின் நீராதாரம் சுண்ணக் கற்பாறைகளாலானது. இன்னொரு வகையில் கூறின் சுண்ணக்கல்லின் அழிவானது யாழ்ப்பாணத்தைப் பாலைவனமாக்கி விடும்.மழையாக மேற்பரப்பில் விழும் நீரானது இலங்கையின் ஏனைய பாகங்களில் அருவியாய் பாய்ந்து,ஆறாக ஓடி,நீர்த்தேக் கங்களை நிறைத்து ஈற்றில் கடலில் கலக்கிறது.ஆனால் யாழ்ப்பாணத்தில் விழும் நீரோ கசிய விடும் இயல்புள்ள நுண்ணிய துவாரங்கள் வழியாக சுண்ணக்கல்லுள் புதைந்து கிடக்கிறது.இதற்கு மேலதிகமான நீரே கடலுள் கலக்கிறது.

ஒரு படையாக சுண்ணக் கல்லுள் ஊடுருவி நிற்கும் மழை நீரையே நாம் தாகம் தீர்க்கவும், விவசாயத் தேவைக்கும், இதர தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றோம்.ஒரு புறம் விவசாயத்துக்குப் பயன்படுத்தும் எல்லையற்ற உரப் பாவனையும், பீடைநாசினிப் பாவனையும் நீரை மாசுறுத் துகின்றது.அதேவேளை நீரை அதிகளவில் பயன் படுத்தும் போது சுண்ணக் கல்லின் இடையே பொதிந் துள்ள நீர் அற்றுப் போக நேரிடும்.அவ்வாறு படை யாகக் காணப்படும் நன்னீர் வளம் அற்றுப் போகப் போக அந்த இடத்தை கடல்நீர்நிரப்பும் நிலையும் ஏற்படும். அவ்வாறான நிலை குடாநாட்டின் கடலை அண் மித்த பல இடங்களில் ஏற்கனவே ஏற்பட்டுள்ளது.இந்த இடங் களில் குழாய்நீரை எதிர்பார்க்கும் நிலை காணப்படுகின்றது.



இப்போது இன்னொரு பிரச்சினை முக்கியத்துவம் பெறுகின்றது.ஜீ.ஜீ.பொன்னம்பலம் வடபுல இளைஞர் களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்குடன் காங்கேசன்துறையில் சிமெந்துத் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் பாடுபட்டார். ஆனால் மறுபுறம் அதனால் ஏற்பட்ட சூழல் பிரச்சினைகள் தொடர்பில் இன்று அதிகம் பேசப்படுகிறது.ஜீ.ஜீ.யின் தொலைநோக்குப் பற்றி இங்கு கேள்வியெழுப்பவில்லை.அவரது தொலைநோக்காக, அவரது அவாவாக ஒரு சமுதாயத்தின் தொழில் ஆதாரமே இருந்தது.அதனால் அவரால் சூழல் பாதிப்பினை மதிப்பிட முடியவில்லை.

ஆனால் போர் நிலைமையைத் தொடர்ந்து சிமெந்துத் தொழிற்சாலை இயங்காமற் போனது. கூடவே ஆயிரக் கணக்கானோரின் தொழில்வாய்ப்பும் அருகிப் போனது. ஆனால் பிரதேசம் படையினரால் விடுவிக்கப்பட்டு, மக்கள் அங்கு போய்ப் பார்த்த போது சுண்ணக் கற்கள் தொடர்ந்து அகழப்பட்டதும், அகழ்வு வேலைகள் இடம்பெற்றதும் தெரிய வந்தது.நமது அரசியல்வாதிகள் குரல் கொடுத்தனர். சூழலியலாளர் குரல் கொடுத்தனர்.ஒருவாறு அந்த அகழ்வு நிறுத்தப்பட்டது.

படையினர் அல்லது பெரும்பான்மையினத்தவர்கள் ஒரு பிரதேசத்தில் சுண்ணக் கல்லை அகழும் போது குரல் கொடுப்பது நியாயமே! அதுபோல நம்மவர்கள் அதே வேலையைச் செய்யும் போது நாம் வாளாவிருப்பது எவ்வகையில் நியாயமாகும்?

இப்போது பல இடங்களில்,குறிப்பாக வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப் பட்டுள்ளனர். வலி.வடக்கு சுண்ணக் கற்கள் செறிந்துள்ள பிரதேச மாகும்.இப்போது அங்குள்ள மக்களின் பிரதான தொழில் சுண்ணக்கல் அகழ்வும்,இரும்புக் கம்பி விற்பனையுமே! ஒவ்வொருவரும் தத்தமது காணிகளிலும், வேறு ஆள்களது காணிகளிலும் கணக்கு வழக்கின்றி சுண்ணக் கற்களை அகழ்ந்து வருகின்றனர். கையால் அகழ்ந்து தமது ஜீவனோபாயத்துக்காக உழைப்பவர் ஒரு புறம்.பெரிய பெக்கோ இயந்திரங்கள் மூலம் பெரியளவில் காணிகளை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கல்லடித்து விற்பவர்கள் ஒரு புறம்.

ஒருவர் குறிப்பிட்டளவு காணியை வலி.வடக்கில் அண்மை யில் மீளக் குடியமர்ந்த பிரதேசத்தில் வாங்கினார். வாங்கிய அவர் முதலில் காடாக வளர்ந்திருந்த மரங்களை பெக்கோ இயந்திரங்கள் மூலம் வெட்டினார்.வெட்டிய மரங்களை விற்றார். அதன் பின் கல் அடித்தார்.பல தினங்கள் இயந்திரம் மூலம் கற்களைக் கிளறி,லொறிகளிலும்,ரக்ரர்களிலும் கிறேசர்களுக்கு அனுப்பி வைத்தார். எந்த அனுமதிப் பத்திரமும் இல்லை. வேலை முடிந்தது. கையில் காசும் கிடைத்தது. அதன் பின் காணியைப் பிரித்து பகுதி பகுதியாக விற்றார். தானும் அதிலொரு காணியை எடுத்துக் கொண்டார். புத்திசாலிகள் காட்டில் எப்போதும் மழைதானே!

சாதாரணமாக காங்கேசன்துறைக்' குவாறி 'பற்றிக் கதைக்கும் சூழலியலாளர்களோ, அரசியல்வாதிகளோ இதைப் பெரிதாக எடுக்கவில்லைப் போன்ற தெரிகின்றது. சுற்றாடல் இயற்கை வள அமைச்சின் அனுமதியின்றி எவராவது சுண்ணக் கல்லைக் கிளற முடியுமா? ஆனால் பிரதேசந் தோறும் பொலிஸார் இருக்கின்றனர். இராணுவத்தினர் இருக்கின்றனர். கிராம அலுவலர்கள் செயற்படுகின்றனர். பிரதேச செயலகம் இருக்கின்றது.

இவ்வளவு பொறிமுறையும் கண் மூடியிருக்க, பெக்கோ இயந்திரங்களின் பேரிரைச்சலுடன் பல இடங்களிலும் எங்கள் ஆதார செல்வம் அழிக்கப்படுகின்றது.நமது அடுத்த சந்ததிக்கு பாலைவனத்தைப் பரிசளிக்க நாம் தயாராகி வருகின்றோம். கடல் மட்டத்துக்கு நமது நிலத்தைச் சமப் படுத்த விளைகிறோம்.கடல் மட்டம் உயர்ந்தால் நமது சப்த தீவுகள் கடலில் மூழ்கி விடும் என்று சொல்லப்படு கின்றது.சுண்ணக் கல் அகழ்வு நீடித்தால் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் மூழ்கும் பட்டியலுள் உள்ளடங்கி விடும். உடைத்த சங்கு ஊத்துப் பறியுமோ?

விழிச்சான் குஞ்சு.

# ஆலயங்களினால் எமது ஊர் முன்னேற்றம் காண வேண்டும்

## மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

யாழ்ப்பாணம்,ஜன.25

இந்து ஆலயங்களை பராமரிப்பவர் களின் மனத்தில் ஏற்படும் மனமாற் றமே இந்த மண்ணில் வாழும் மக்களின் துன்ப துயரங்களைப் போக்க ஓர் அடிப் படைக் காரணியாக அமைய முடியும் என வடமாகாண கல்வி கலாசார பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன் தெரிவித்தார்.

வாழ்வில் கஷ்டப்படும் மக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முன்னின்று பல செயற் திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டிய கடமையும் பொறுப்பும் இந்து ஆலயங்கள் உட்பட ஏனைய மத நிறுவனங்களுக்கும் உண்டு.

துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 87 ஆவது பிறந்த நாள் அறக்கொடை நிதிய விழா வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிவலிங்கம் சத்திய சீலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்: இன்று தெல்லிப்பழை துர்க்கையம் மன் கோயிலைப் பொறுத்த வரையில் ஏனைய இந்து ஆலயங்களுக்கு ஒரு முன்னோடி ஆலயமாகத் திகழ்கின்றது. சமயப் பணிகளில் மட்டும் நின்று விடாது சமூகத்தின் தேவை உணர்ந்து சமூகப் பணிகளிலும் கூட ஈடுபட்டு வருகின்றார்கள்.

இத்தகைய ஒரு பணியை முன் னெடுத்த பெருமை அம்மா அவர் களுக்கே உரியதாகும். அந்தப் பணியைத் தொடர்ந்து பேணிக் காத்து செயற் படுத்திக் கொண்டுவரும் இன்றைய தலைமையையும் அவருடன் இணைந்து செயல்படும் ஏனைய உறுப்பினர் களையும் கூட பாராட்ட வேண்டும்.

அம்மையார் சைவத்துக்கும் தமிழுக் கும் கலாசாரப் பண்பாடுகளுக்கும் முன்னோடியாக வாழ்ந்தவர்.

இந்து சமயத்தில் பெரிய பணி களை மேற்கொண்ட ஒரு பெரும் தகையாவார். இதனை ஏனைய இந்து ஆலயங்களும் பின்பற்றி செயல்பட வேண்டிய தேவையும் அவசியமும் இன்று காணப்படுகின்றது.

வாழ்வில் கஷ்டப்படும் மக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்த முன்னின்று பல செயற் திட்டங் களையும் மேற்கொள்ள வேண்டிய கடமையும் பொறுப்பும் இந்து ஆல யங்கள் உட்பட ஏனைய மத நிறுவனங் களுக்கும் உண்டு. இதனை உரிய முறை யில் மேற்கொண்டால் சமூகத்தின் பொருளாதார சமூக மேம்பாட்டை எமது இனம் எட்டக் கூடியதாகவும் சுயமாக வாழவும் வழி ஏற்படுத்த முடியும்.

அம்மாவின் பாதையில் நின்று நாமும் மதத்துக்கும் சமூகத்துக்கும் எம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும். இதன் மூலம் பரவலாக உதவிகள் கிடைக்கப் பெறுவதன் மூலம் சமூகத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும் எனவும் குறிப்பிட்டார். (எ-86)



சரசாலை வடக்கு நித்திலா ஐக்கிய நாணய சங்கத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவையொட்டி குழந்தைகள் சிறுவர்களின் சேமிப்பை ஊக்குவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் உரையாற்றுகின்றார். அருகில் சங்கத்தலைவி திருமதி க.ஞானச்சந்திரன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். (எ-207)

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம்,ஜன.25

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாட சாலையின் ஆசிரியராகக் கடமையாற் றிய சிவஞான சுந்தரம் கணேசகுமார் வலிகாமம் கல்வி வலயத்தின் விஞ் ஞான பாட ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.(எ-313)

## மருத்துவ நிபுணர் நியமனம்

தென்மராட்சி,ஜன.25

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு பொது மருத்துவ சிகிச்சை நிபுணர் கடந்த 13 ஆம் திகதி பொறுப் பேற்றுள்ளார்.

வைத்திய கலாநிதி ரீ.ஸ்ரீதரன் என்ப வரே யாழ்.பிராந்திய சுகாதார சேவை கள் மாகாணப் பணிப்பாளரினால் நியமிக் கப்பட்டுக் கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார். (எ-207)

## திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.கந்தர்மடம் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமான் கோயிலில் திருமுறை முற்றோதல் கடந்த 15 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தில் இருந்து தினமும் அதிகாலை 5.30 மணியில் இருந்து 7.30 மணி வரை நடைபெறுகிறது. (எ)

## கோட்டப் பணிப்பாளராக பதவி உயர்வு

யாழ்ப்பாணம்,ஜன.25



கடந்த 13 ஆண்டு கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி வந்த அப்பாத்துரை ஈஸ்வரநாதன் இம் மாதம் 21ஆம் திகதி முதல் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நிய மனம் பெற்றுள்ளார்.

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவரின் வழிகாட்டலின் கீழ் கடந்த ஆண்டு மேற்படி கல்லூரி நூற்றாண்டு விழா வைக் கொண்டாடி இருந்தது.

ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்கு ஆதரவளித்து வழிகாட்டி வரும் உரும் பிராய் [illegible] இல்லத்தின் தலைவ ராக இருந்தும் இவர் பணியாற்றி வரு கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.(எ)

# ஒழுக்கம் சார்ந்த வாழ்வியலாக நோக்குவதே ஆரோக்கியமானது

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்

சுன்னாகம்,ஜன.25

சிறுவயதில் சமயப் பழக்கங்களை மாணவர்களிடம் ஏற்படுத்துவதில் பாடசாலைகள் அதிக அக்கறை எடுக்க வேண்டும். சமயம் என்பதைக் கிரியை சார்ந்த வாழ்வியலாக நோக்காமல் ஒழுக்கம் சார்ந்த வாழ்வியலாக நோக்கு வதே ஆரோக்கியமானது. இந்த ஒழுக் கத்தைச் சிறுவயது முதலே மாணவர் மத்தியில் ஏற்படுத்துவதில் பெற் றோரும் ஆசிரியரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன். தெரிவித்தார்.

இன்றைய பிள்ளைகள் கடவுள் வழிபாட்டில் அதிக அக்கறை எடுப்பதில்லை.

'புத்தூர் இந்து ஆரம்பப் பாட சாலையில் தரம் 01 வகுப்பில் புதிதாக அனுமதி பெற்ற மாணவர்களை வாழ்த்தி வரவேற்கும் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை காலை அதிபர் இ.கோகுலராகவன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்

பாடசாலை என்பது அறிவின் ஆலயம். எனவே தான் இதனை வித்தியாலயம் என்கிறோம். முன்னைய காலங்களில் சைவப் பாடசாலைகளின் திருநீறு, சந்தனம் முதலிய சிவத் திரவியங்களை மாணவர்கள் அணிவதற்கு ஏற்ற வாய்ப்பை வழங்கியிருந்தனர். இங்கு வைக்கப்பட் டிருக்கும் சிவத்திரவியங்களை அணிந்து கொண்டு மாணவர்கள் வகுப்பினுள் நுழைந்தனர். சமய வாழ்விற்கு உட்பட் டிருக்கிறோம் என்ற உணர்வைப் பெற் றனர். இதனால் ஒழுக்கம் சார்ந்த பண் புகளிலும் அவர்கள் தவறிவிடாமல் வாழ்ந்தனர்.

இன்றைய பிள்ளைகள் கடவுள் வழி பாட்டில் அதிக அக்கறை எடுப்பதில்லை. தனக்கு மேலாக ஒரு சக்தி இருக்கிறது என்ற உணர்வு மனிதன் ஒருவனை நல்ல வழியில் வாழ வைக்கும். கடவுள் நம்பிக்கையை ஊட்டி வளர்ப்பதன் வாயி லாக மாணவரிடம் ஏற்படக் கூடிய பல பிறழ்வுகளைத் தவிர்க்க முடியும். இதற் கேற்றாற்போல் சிறுவயது முதலே கடவுள் நம்பிக்கை கட்டி வளர்க்கப்பட வேண்டும் - என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கி அச்சுவேலிக் கிளை முகா மையாளர் எஸ். யோகராசாவும், கௌரவ விருந்தினராக யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியர் இரஞ்சனிதேவி இராமனாதனும் கலந்து கொண்டனர். தரம் 01 இல் அனுமதி பெற்ற மாணவர்களுக்குப் பல்வேறு பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன.(எ-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377,
021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## எப்போது நடவடிக்கை?

டெங்கு ஒழிப்புப் பணிகள் யாழ். குடாநாட்டில் தீவிரம் பெறுவதும் பின்னர் தணிந்து போவதும் நுளம்புக்கடி ஆரம்பித்ததும் மீண்டும் தீவிரம் பெறுவதுமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

"டெங்கு நுளம்பை வளர்த்தவர்கள் மீது வழக்கு", "நுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருந்தவர்கள் மீது வழக்கு", அத்தனை பேர் கைது இத்தனை பேர் நீதிமன்றில் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின்றன. கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட 'டெங்கு ஒழிப்பு வார' நடவடிக்கையில் மட்டும் யாழ். மாநகர சபைப் பிரிவுக்குள் 17பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

வெறுங் காணிகளைத் துப்புரவு செய்யாமல் வைத்திருத்தல் மற்றும் டெங்கு நுளம்புகள் முட்டையிடுவதற்கு வசதியாக தண்ணீர் தேங்கக்கூடிய வகையில் பொருள்களை வைத்திருத்தல் போன்ற குற்றங்களுக்காகவே அனேகமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

டெங்கு ஓர் ஆட்கொல்லி நோய். எனவே அதனை ஒழிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டியது முக்கியம். அவ்வாறு செய்யாதவர்களை தண்டித்துத்தான் திருத்த முடியும் என்றால் அதனைச் செய்வதும் ஏற்புடையதே.

ஆனால், யாழ். நகரில் நுளம்புப் பெருக்கத்துக்கு மிக முக்கிய காரணமாக இருப்பவை வீதியோரக் 'கான்'கள். இவை நாளாந்தம் சுத்தப்படுத்தப்படுவதே இல்லை. இதனால் ஆங்காங்கே சேரும் குப்பை கூளங்கள் மற்றும் மணலினால் ஏற்படுத்தப்படும் தடைகளுக்கு இடையே தாராளமாகத் தண்ணீர் தேங்கி நிற்கிறது. நுளம்பு மற்றும் ஈக்களின் உற்பத்தி மையமாக இவை விளங்குவதைக் கண்டறிய 'டெலஸ்கோப்'களின் உதவி தேவையில்லை. மாலை வேளையில் காலாற ஒரு தடவை நகரைச் சுற்றி வீதியோரமாக வலம் வந்தாலேயே போதும்.

அது தவிர பெரும்பாலான இடங்களில் வெள்ளநீரோ கழிவு நீரோ ஓடுவதற்கான பொருத்தமான வடிகால்கள் கிடையா. கடந்த 30 ஆண்டுகளாகப் போரைக் காரணம் காட்டி புனரமைக்கப்படாமலும் புதிதாகக் கட்டப்படாமலும் விடப்பட்ட வடிகால்கள் விடயமாக போர் முடிந்த நிலையில் நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளிலும்கூட பெரியளவில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

பிரதான வீதிகளின் அகலிப்பின் போது அருகே புதிதாக அமைக்கப்படும் வடிகால்கள் தவிர வேறு எங்கும் எந்த உள்ளூராட்சி அமைப்பும் தனது சொந்தப் பணத்தில் இந்த வடிகால்களை அமைத்ததாக இல்லை. வெள்ள நீர் தேங்குவதற்கும் கழிவு நீர் தேங்குவதற்கும் இவையெல்லாம் காரணமாகின்றன. அதேபோன்று நுளம்புகளின் உற்பத்திச் சாலைகளாகவும் இவை பின்னர் மாற்றமடைகின்றன.

நேற்றுமுன்தினம் யாழ். மாநகர சபையின் ஊழியர்களால் சங்கிலியன் வீதியின் மருங்குகளில் உள்ள புற்கள் செருக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டன. ஆனால், அந்த வீதியில் தூர்ந்து போய் ஆங்காங்கே கிடக்கும் வடிகால்களினுள் முளைத்துக் கிடக்கும் புற்கள் பூண்டுகளை அந்த ஊழியர்கள் அகற்றவில்லை.

மழை பெய்தால், தூர்ந்துபோய் ஒழுங்கற்றுக் கிடக்கும் அந்த வடிகால்களில் தண்ணீர் தேங்கிய நுளம்புகள் பெருகும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. குடாநாட்டின் உள்ளூராட்சி அமைப்புகளின் செயற்பாட்டுக்கான ஓர் உதாரணம்தான் இது. இப்படி தமது காலடியிலேயே நுளம்பு உறுபத்தி மையங்களைப் பராமரிக்கும் உள்ளூராட்சி அமைப்புகளின் மீதும் அதற்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகள் மீதும் சுகாதாரத்துறை அதிகாரிகள் எப்போது நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள்?

தேவையான வடிகால் கட்டமைப்புக்களையும் உட்கட்டுமாணங்களையும் போர் முடிந்தும் ஏற்படுத்திக் கொடுக்காத இந்த அரசு மீதும் அதனை வடக்கில் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்று கூறும் அமைச்சர் மீதும் சுகாதாரத் துறை அதிகாரிகள் எப்போது நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? சட்டம் எல்லோருக்கும் சமனானது என்றால் எல்லோர் மீதும் நடவடிக்கை எடுத்துத்தானே ஆகவேண்டும்.

# செந்தமிழும் நாப்பழக்கம்

தானா

எந்தவொரு விடயத்திலும், மனிதனின் அனுபவம் அவனது திறமையைப் புடம் போட்டுப் பிரகாசிக்க வைக்கிறது. இதன் அடிப்படையில் அமைந்ததே " சித்திரமும் கைப்பழக்கமும்; செந்தமிழும் நாப்பழக்கம்" என்ற முதுமொழி போலும்.

மேடைப் பேச்சு என்பது, எடுத்துக் கொள்ளும் தலைப்புக் கேற்ப கருப்பொருளை அப்பழக்கமின்றி சங்கிலித் தொடராக கேட்போரைக் கவரும் விதத்தில், வெளிப்படுத்தும் வேளையிலேயே சிறப்புறுகிறது.

மேடைப் பேச்சு, எல்லோருக்கும் இலகுவில் கை வரும் கலையல்ல. அது இலேசானதொன்றாக அமைவதுமில்லை. சிலர் இதற்கு விதி விலக்கு. அது அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்துவிடும் ஒரு சிறப்புத்திறன்.

எந்தவொரு விடயம் குறித்தும் என்னால் எந்த வேளையிலும், தேவைக்கேற்ற வகையில், சுவாரஸ்யமாக எழுத இயலும். ஆனால் ஒரு சபையில் பார்வையாளர் முன்னால் என்னால் அதனைப் பேச்சாக வெளிப்படுத்த இயலாது எனக் கூறுவோர் பலருண்டு. இத்தனைக்கும் அத்தகையோர் கற்றறிந்த, கல்வி கேள்விகளில் சிறந்த புத்திஜீவிகளே. இந்த நிலை மேடைக் கூச்சம் என அடையாளப்படுத்தப்படுவதுண்டு. அதேசமயம் இத்தகையோரில் ஒரு தரப்பினரிடம் ஞாபக சக்தி, கிரகித்துக் கொள்ளும் தன்மை அருகிக் காணப்படும். சிந்திக்கும் வேளையில் கூட அத்தகையோருக்கு ஒரு குறிப்பிட்ட தலைப்புக்குள் அடங்க வேண்டிய விடயங்கள் சங்கிலித் தொடராக, ஒன்றுடன் ஒன்று தொடர்புபடும் விதத்தில் சிந்தனையில் வந்து சேரா. அத்தகைய நிலையில் மேடையில் பார்வையாளர்கள் முன்னிலையில் அத்தகையோருக்கு எடுத்துக் கொள்ளும் விடயம் குறித்து சங்கிலிக் கோர்வையாகத் தமது கருத்தை வெளிப்படுத்துவது சிரமமாக அமையும்.

அதற்காக எடுத்துக் கொள்ளும் விடயம் தொடர்பாக அவர்களிடம் பரந்த அறிவாற்றல் கிடையாதெனக் கருதுவது தப்புக்கணக்கே.

சொற்பொழிவு அல்லது உரையொன்றை ஒரு மேடையில் பூரணத்துவம் கொண்டதாக, கேட்போருக்குத் திருப்தி தரத்தக்கதாக நிகழ்த்த வேண்டுமானால் பேச்சாளரொருவர் ஒரு சில விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

தாம் நிகழ்த்தவுள்ள உரையின் கருப்பொருள் கேட்போரின் தராதரத்துக்கும், நிகழ்வின் சூழலுக்கும் ஏற்புடையது தானா என்பதைப் பேச்சாளர் முதலில் எடையிட்டு உறுதி செய்து கொள்ளல் அவசியம். மறுவகையில் கூறுவதானால், தமது உரை கேட்போரின் வரவேற்புக்கும் இரசனைக்கும் உட்படும் வகையிலான தலைப்பைக் கொண்டது தானா என்பதில் பேச்சாளர் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இல்லையேல் அவர் புள்ளி விவரங்களையும் தகவல்களையும் தேடியெடுத்துக் கோர்வையாகத் தமது உரையை வழங்கினாலும் அது கேட்போரின் வரவேற்புக்கும் திருப்திக்கும் உள்ளாவது துர்லபமே.

அதேவேளை, பேச்சாளரொருவரின் உரையைக் கேட்போரின் திருப்தியும் வரவேற்புமே அப் பேச்சாளருக்கான ஊக்க மருந்து என்பதனையும் மறுதலித்தல் இயலாது.

இந்த காலத்தில் பெரும்பாலான மேடைப் பேச்சுக்கள் அதை நிகழ்த்துபவரால் முற்கூட்டியே தயாரிக்கப்பட்டு மெருகூட்டப்பட்டதாகவே அமைவது வழக்கமாகியுள்ளது. சில சமயங்களில் இடம், நிகழ்வின் தரம், தேவை என்பவற்றின் அடிப்படையில் முற் தயாரிப்பின்றி பேச்சாளர் திடுதிப்பென்று தமது உரையை நிகழ்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதுண்டு.

அத்தகைய சந்தர்ப்பத்தில், மேடைப் பேச்சு அனுபவம் வாய்ந்த பேச்சாளர்கள் மிக இலகுவாக தமக்கான அல்லது தாம் தேர்ந்தெடுக்கும் தலைப்பில் கேட்போரை ஈர்க்கும் வகையில் தமது பேச்சை நிகழ்த்துவதில் வெற்றி காண்பார். அத்தகைய அனுபவம் குறைந்த பேச்சாளரொருவர், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக திடுதிப்பென உரையொன்றை ஆற்ற நேரும்போது, அது கேட்போருக்கு இரசனை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அதிருப்தியை ஏற்படுத்துமானால், அது பேச்சாளருக்குச் சங்கடத்தையும் குற்ற உணர்வையும் ஏற்படுத்தவும் காரணமாகி விடுவதுண்டு.

**பன்மொழித் திறன் படைத்த அறிஞர்கள் பலர் நம் மத்தியில் உள்ளனர். அவர் தம் மொழித் திறனை வெளிப்படுத்த வாய்க்கும் சந்தர்ப்பங்களில் தம் பேச்சால் கேட்போரின் இரசனைக்குத் தீனி வழங்குவதுடன் சிந்திக்கத் தூண்டும் விதத்திலும் உரையாற்றவும் அவர்களால் முடிகிறது. இடம், பொருள், ஏவல் அறிந்து நிகழ்த்தப்படும் இத்தகைய உரைகள் குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கு மட்டுமன்றி சமூக மட்டத்திலும் சிந்தித்துக் செயற்பட வைக்கும் தன்மை கொண்டமைவன.**

பொது நிகழ்வுகள் பல தரப்படும், இலக்கிய, சமயம், அரசியல் பாராட்டு, புத்தக வெளியீடு என அவை பல வகையாக அமையும். இவற்றில் முற்கூட்டியே தயார்செய்து தரவுகள் சேகரித்து நிகழ்த்த வேண்டிய உரைகள் எனவும் தமக்குள்ள பொது அறிவாற்றல், மொழியாற்றலுக்கேற்ப முன் ஆயத்தம் செய்யாது தகவல்களைக் கோர்த்து நிகழ்த்தத் தக்க திடீர் உரைகள் எனவும், இவை வெவ்வேறு வகைப்படும்.

எவ்வளவு தான் நினைவாற்றலும், படிப்பாலும் அனுபவத்தாலும் கிட்டும் அறிவாற்றல் வாய்க்கப் பெற்றிருப்பினும், தமது உரையை முன் தயாரிப்பின்றி வழங்கத்தக்க திறன் வாய்த்திருப்பினும், ஆரம்பம் முதல் இறுதி வரை சங்கிலிக் கோர்வை போன்று தொகுத்து வழங்குவதில் தான் பேச்சாளரின் பேச்சின் சிறப்பும் வெற்றியும் தங்கியுள்ளது. அத்தகைய நிலையிலேயே அவரது உரை கேட்போரின் இரசனைக்கு விருந்தாக அமையும்; நினைவில் நிற்கும்; மனதில் பதியும்.

கேட்போரின் இரசனையும் பல்தரப்படும் உணர்ச்சிகளைத் தூண்டும் ஆவேசப்பேச்சு, ஹாஷ்யத்தனம் கவர்ந்த பேச்சு ஆற்றொழுக்குப் போன்றமையும் அமைதியான பேச்சும், தரவுகள் புள்ளி விவரங்களைக் கலந்து வழங்கும் பேச்சு என்பவை பேச்சுப் பாணிகள் இவற்றில் ஏதோவொன்றே குறிப்பிட்ட ஒரு பேச்சாளருக்கு இயல்பாக அமையும் கைவரும் கலை.

அரசியல் சார்ந்த உரையை முன் ஆயத்தமின்றி திடுதிப்பாக ஆரம்பித்து வழங்க இயலுமாயினும் தமது உரை மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்துக் குறித்து பேச்சாளர் கவனமும் கட்டுப்பாடும் பேண வேண்டி ஏற்படும். இல்லையேல் உணர்ச்சி வேகத்தில் அவர் வெளிப்படுத்தும் கருத்து அவரது அரசியல் வாழ்க்கைக்கு ஊறு ஏற்படுத்த இடமுமுண்டு. கேட்போரால் தவறாக அர்த்தப்படுத்தப்பட்டு, விமர்சனத்துக்கு உள்ளாக நேர்வதுமுண்டு.

முன் ஆயத்தங்களுடனான இலக்கியப் பேச்சும் சரி, சமயப் பேச்சும் சரி சிறப்பாய் அமைய வாய்ப்புண்டு. முன் ஆயத்தம் எதுவுமின்றி எடுத்துக் கொள்ளும் தலைப்பிலிருந்து விலகி வெளிச் செல்லாது, சிறப்பாக ஆற்றத்தக்க திறன் கொண்ட பலர் நம் மத்தியில் உளர். இது அவர்களிடம் இயற்கையாய் அமைந்த திறனே. ஒரு வகையில் அனுபவமும் கை கொடுப்பதாகக் கொள்ளவும் இயலும்.

பன்மொழித் திறன் படைத்த அறிஞர்கள் பலர் நம் மத்தியில் உள்ளனர். அவர் தம் மொழித் திறனை வெளிப்படுத்த வாய்க்கும் சந்தர்ப்பங்களில் தம் பேச்சால் கேட்போரின் இரசனைக்குத் தீனி வழங்குவதுடன் சிந்திக்கத் தூண்டும் விதத்திலும் உரையாற்ற அவர்களால் முடிகிறது. இடம், பொருள், ஏவல் அறிந்து நிகழ்த்தப்படும் இத்தகைய உரைகள் குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கு மட்டுமன்றி சமூக மட்டத்திலும் சிந்தித்துக் செயற்பட வைக்கும் தன்மை கொண்டமைவன.

முன்னரெல்லாம் குறிப்பிட்டதொரு துறையிலோ, ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளிலோ தமது அறிவாற்றல் திறனை தம் பேச்சினூடாக சமூகத்தில் பரவ வைக்கும் திறன் படைத்தோர் சமூக மட்டத்தில் மதிப்பும் கௌரவமும் ஈட்டிக் கொண்டனர். ஆயினும் இன்றைய நவீன உலகு இலத்திரனியல் கலாசாரத்தை உள் வாங்கி வளர்ச்சி கண்டு வரும் நிலையில், மேடைப் பேச்சின் பிரபல்யமும் இரசிப்பும் சமூக மட்டத்தில் பின்னடைவு கண்டு வருவது கால மாற்றத்தின் விளைவுகளில் ஒன்றே.

மொத்தத்தில் மேடைப் பேச்சை ஒழுங்கமைந்த வகையில், இரசனையுடனும் சிறப்புடனும் வழங்கத்தக்க பேச்சாளர்களுக்கு அதற்கான வாய்ப்புக்கள் கிட்டும் வரை, அத்தகைய உரைகளை ஆவலோடும் இரசனைத் தனத்தோடும் கேட்டனுபவிக்க விரும்பும் இரசிகர்கள் இருக்கும் வரை மேடைப் பேச்சுக்கலை நம் மத்தியில் நீண்டு நிலைத்துவாழும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வம் ஈட்டித் தருபவர்கள் நீங்கா வறுமையில்

இலங்கைக்கு அன்னியச் செலாவணியைப் பெருமளவில் ஈட்டித் தருபவர்களாக இருந்தபோதும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு தொடர்ந்தும் வறுமையிலேயே கழிகிறது. தோட்டத் தொழிலாளர்களின் 11.4 சதவீதமான குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழேயே இருக்கின்ற என்கிற விடயத்தை அலசும் இந்தக் கட்டுரை இந்தியாவிலிருந்து இயங்கும் ஐஆர்ஐஎன் செய்திச் சேவையினால் வெளியிடப்பட்டுள்ளது. அதன் தமிழ் மொழியாக்கம் புதினப்பலகையிலிருந்து...

தேயிலைப் பயிர்ச் செய்கையானது இலங்கைக்கு வருமானம் ஈட்டித் தருகின்ற பெருந் தோட்டப் பயிர்களில் ஒன்று. ஆனால் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வோரின் குடும்பங்கள் மிகவும் குறைவான கூலியையே பெறுகின்றன. அவர்கள் போசாக்கற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்று இந்தப் பிராந்திய மக்களின் போசாக்கான திட்டங்களை ஆராயும் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் போசாக்கற்ற சிறார்களின் எண்ணிக்கை, ஐந்து வயதிற்கு மேற்பட்ட ஐந்து சிறார்களுக்கு ஒருவர் என்ற விகிதாசாரத்தில் காணப்படுகின்றது. புதிதாகப் பிறக்கும் ஆறு குழந்தைகளுக்கு ஒரு குழந்தை குறைந்த நிறையைக் கொண்டுள்ளதாகவும், இது சிசு மரணத்திற்குக் காரணமாக அமைவதாகவும் கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் கொள்கைக் கற்றலுக்கான நிறுவகத்தின் அண்மைய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொதுவான நிலை இப்படி இருந்தபோதும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் சிறார்களின் நிலை மிகவும் மோசமானது. அதாவது 3 சிறார்களுக்கு ஒருவர் குறைந்த நிறையைக் கொண்டுள்ளனர். பிறக்கும் குழந்தைகளில் 40 சதவீதமானவர்கள் மிகக் குறைந்த நிறையில் பிறக்கின்றன எனவும் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்து பிள்ளைகளின் தந்தையும் தோட்டத் தொழிலாளியுமான இராமசாமி இராமகிருஷ்ணனும் (வயது 46) தேயிலைக் கொழுந்து பறிக்கும் மனைவியுமாக இணைந்து தமது குடும்பத்திலுள்ள ஏழு உறுப்பினர்களுக்காக மாதம் 130 அமெரிக்க டொலர்களையே சம்பாதிக்க முடிகின்றது. இவர்களின் ஐந்து பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்லும் வயதை உடையவர்கள்.


"இவ்வளவு கொஞ்ச சம்பளம் தந்தால் நாங்கள் எவ்வாறு பிழைக்க முடியும்? என்னால் வேறு தொழிலும் செய்ய முடியாத நிலையில் இது மிகக் கஷ்ட சீவியம் தான்" என அவர் தெரிவித்தார்.

அரச புள்ளிவிவரத்தின் பிரகாரம், இலங்கையில் உள்ள ஒன்றரை மில்லியன் தோட்டத் தொழிலாளர்களில் - அதாவது இலங்கையின் மொத்த சனத்தொகையான 21 மில்லியனில் 05 சதவீதமான மக்களில் - இராமசாமி இராமகிருஷ்ணனின் குடும்பமும் ஒன்று.

தோட்டத் தொழிலாளர்களின் 11.4 சதவீமான குடும்பங்கள் இலங்கையின் தேசிய வறுமைக் கோடான மாதாந்த வருமான 3,028 ரூபாவுக்கு அல்லது 27 அமெரிக்க டொலர்களுக்குக் குறைந்த வருமானத்தையே பெறுகின்றனர். 2009-2010 காலப்பகுதியில் தேசிய வறுமை ஆய்வுப் பிரிவு மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வர்த்தகத் தலைநகரமான கொழும்புக்குத் தெற்காக 150 கிலோமீற்றரில் உள்ள நுவரெலியா மாவட்டத்திலும் அதனுடன் இணைந்து காணப்படும் பதுளை மாவட்டத்திலும் 2006 - 2007 காலப் பகுதியில் சிறுவர் குறை வளர்ச்சியானது முறையே 44 மற்றும் 33 சதவீதமாகக் காணப்பட்டது.

இந்த இரு மாவட்டங்களிலேயே அதிகளவான தேயிலைத் தோட்டங்கள் காணப்படுகின்றன. ஒரு குடும்பத்துக்குக் கிடைக்கும் வருமானம் என்பது ஐந்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் போசாக்கில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றது என ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



வறுமை மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் நிலைமையானது ஊட்டச்சத்துக் குறைந்த இளம் தலைமுறையை உருவாக்குவதற்கு வழிவகுப்பதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட விரிவுரையாளரும், இலங்கையின் போசாக்கு அமைப்பின் துணைத் தலைவருமான அன்சலா டீ சில்வா தெரிவித்துள்ளார்.

"இளவயதுத் திருமணங்கள், பருவ வயதினர் கர்ப்பமுறுதல் அல்லது ஊட்டச்சத்துக் குறைந்த நிலையில் கர்ப்பமுறுதல் போன்ற காரணங்களால் நிறை குறைந்த குழந்தைகள் பிறக்கின்றன. அதாவது தாயின் குறைபாடானது பிறக்கும் குழந்தையும் குறைபாடுடையதாகப் பிறக்கக் காரணமாகின்றது" என விரிவுரையாளர் சுட்டிக்காட்டுகிறார்.

பிறக்கும் குழந்தைக்குப் போதியளவு ஊட்டச்சத்துக் கிடைப்பதற்காக ஆறுமாத காலம் வரை தனித் தாய்ப்பால் மட்டும் ஊட்டப்பட வேண்டும் என உலக சுகாதார அமைப்பால் பரிந்துரைக்கப்பட்ட திட்டத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது. அத்துடன் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் உள்ளடங்கலாக நலிவடைந்த மக்களுக்குத் தேவையான போசாக்கு மற்றும் ஊட்டச்சத்து உணவுகளை அரச சிகிச்சை நிலையங்களில் வழங்குவதற்கான திட்டங்களும் நடைமுறையில் உண்டு.

ஊட்டச்சத்துக் குறைந்த சமூகத்தினரை இலக்கு வைத்தே இவ்வாறான திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக, டீ சில்வா தெரிவித்துள்ளார்.

கல்வி அறிவு மட்டம் மற்றும் அடிப்படை சுகாதாரப் பராமரிப்பு தொடர்பாகத் தாய்மார் பெற்றுள்ள விழிப்புணர்வு குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை உறுதிப்படுத்துவதில் பெரும் பங்களிப்பை வழங்குகின்றது. உலக வங்கியின் கொழும்பு அலுவலகத்தைச் சேர்ந்த சுகாதாரத் துறையின் வல்லுனரான குமாரி நவரத்ன இதனைக் கூறுகிறார்.

"ஒரு குழந்தைக்கான ஆரம்பப் பராமரிப்பாளர் அந்தக் குழந்தையின் தாயாவார். பொருத்தமான முறையில் பாலூட்டுதல் மற்றும் குழந்தைப் பராமரிப்புத் தொடர்பில் தாய் விழிப்புணர்வைக் கொண்டிருந்தால், அவர் தனது குழந்தைக்கு மிகச் சிறந்த பராமரிப்பை வழங்க முடியும்" எனக் குமாரி நவரத்ன மேலும் குறிப்பிடுகிறார்.

குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்பட்டால் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும் என இலங்கையின் போசாக்கு அமைப்பு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளன.

நுவரெலியா மாவட்டம் உள்ளடங்கலாக ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கொண்ட பிரதேசங்களில் பல்துறை சார் மாதிரித் திட்டங்களை மே 2011 முதல் இலங்கை அரசின் தேசிய போசாக்குச் சபை நடைமுறைப் படுத்தி வருகின்றது.



பிரதேச மக்களின் ஆரோக்கியத்தை அதிகரிப்பதற்கான ஊட்டச்சத்துத் திட்டங்களைக் கண்காணிப்பதற்கும், சிறுவர் நேயசிகிச்சைநிலையங்களைப் பராமரிப்பதற்கும் ஏற்ற விதத்தில் மாவட்ட சுகாதார, விவசாய மற்றும் கால்நடைகள் திணைக்களங்கள் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், இலங்கையர்களுக்கு நீண்ட கால உடல் ஆரோக்கியம் கிடைப்பதற்காக அரசு கடைபிடித்து வந்த கொள்கைகள் தோல்வியடைந்துள்ளன ஏன்று பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவரும், ஆஸ்திரேலியாவின் மொனஸ் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளருமான முத்துக்கிருஷ்ணா சர்வானந்தன் சுட்டிக்காட்டுகிறார்.

"இலங்கை அரசின் சுகாதாரத் துறைசார் கோட்பாடுகள் எதிகால விளைவுகளை முக்கியப்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர, அதற்கான உள்ளீடுகளின் அளவைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படக் கூடாது" எனவும் அவர் கூறுகின்றார்.

"ஊட்டக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக இலங்கை அரசின் கோட்பாட்டுத் திட்டங்களில் நலிவடைந்த வெவ்வேறு வகையினர் தொடர்பான தேவைப்பாடுகள் தனித்தனியாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்" எனவும் சர்வானந்தன் குறிப்பிடுகிறார். (உ)

---

# 'இந்து'வின் அறிவுரை

**இந்தியாவின் இந்து நாளேட்டின் ஆசிரியர் தலைப்பின் மொழியாக்கம் இது.**

அண்மையில் இலங்கைக்குச் சென்ற இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடனான சந்திப்பின்போது, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறையாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதில் தனது அர்ப்பணிப்பை மஹிந்த மீளவும் வெளிக்காட்டியமை வரவேற்கப்பட வேண்டியது.

ஜனாதிபதி, இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் தான் கொண்டுள்ள ஆர்வத்தை, 2009 இல் 'இந்து' நாளேட்டுக்கு வழங்கிய நேர்காணல் உள்ளடங்கலாகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிக்காட்டியுள்ளார்.

இலங்கைப் படைகளால் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு இரு ஆண்டுகளுக்கும் மேலாகி விட்ட பின்னரும் அரசியற் தீர்வு விடயத்தில் இலங்கை அரசு குறைந்த முன்னேற்றத்தையே காட்டியுள்ளதாக, இலங்கையின் ஜனாதிபதியின் முன்னைய அரசியற் தீர்வு விடயத்தில் ஆதரவாக இருந்த இந்தியா உட்பட உலக நாடுகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

ராஜபக்ஷ தனது அரசியல் நலன்களைக் கட்டியெழுப்பும் நகர்வுகளிலும், இலங்கை அரசு புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள போருக்குப் பின்னரான காலப் பகுதியில், அரசியல் தீர்வை அரசு முன்வைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

போரின் பின் இலங்கை அரசானது அரசியல் தீர்வில் தான் தீவிர கரிசனையுடன் இருப்பதைக் காட்டுவதற்கான சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது. தமிழ் சிறுபான்மை சமூகத்தின் அரசியல் பிரதிநிதிகளான தமிழ்க் கூட்டமைப்புடன், பேச்சையும் ஆரம்பித்தது.

தீர்வு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றையும் அரசு அறிவித்தது. அவசரகாலச் சட்டத்தை தளர்த்தியமையும் தீர்வைக் காண்பதில் அரசு முனைப்பாக இருப்பதைக் காட்டுவதற்கான சமிக்ஞையாகியது.

நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக் குழுவை நியமித்ததன் மூலம், 2009இல் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் நிகழ்ந்த உரிமை மீறல்கள் மற்றும் பொதுமக்கள் இழப்புகள் தொடர்பான அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களுக்குப் பதிலளித்தது.

ஆணைக்குழுவானது இலங்கை அரசால் மேலும் கவனிக்கப்பட வேண்டிய சில பரிந்துரைகளை அடையாளங் கண்டுள்ளது. இருந்தும், தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசு இன்னமும் உறுதியான சில நகர்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெளிப்படையாக வழங்கப்பட்ட தீர்ப்பைக் கொண்டு அவர் செயற்படுவதற்கான நேரம் இதுவாகும்.

இதுவரையில், இலங்கை அரசு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களில் விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்வதற்கான தனது விருப்பத்தை வெளிக்காட்டவில்லை. '13ஆம் திருத்தச் சட்டத்தின் மேலதிக சரத்தானது' மேல்சபையில் சகல மாகாணங்களுக்கும் பிரதிநிதித்துவத்தை வழங்குவதைக் குறிக்கின்றது.

அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை வரைவதற்கான பொறிமுறையை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் இலங்கை அரசால் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது முன்னைய ஆணைக்குழுக்கள் போன்று செயற்படக் கூடாது. அதாவது அரசால் முன்னர் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அனைத்தும் எந்தவொரு பயனுள்ள வெளி விளைவுகளையும் தருவதற்கான நகர்வுகளை மேற்கொள்ளவில்லை. பதிலாக அரசியற் தீர்வை எதிர்ப்பதற்கான நகர்வுகளை மேற்கொண்ட அமைப்புக்களாகவே விளங்கியுள்ளன.

இருந்தபோதும் தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் கடப்பாட்டிலிருந்து விலகக் கூடாது. சமூகத்தின் மத்தியில் காணப்படும் தீவிரவாதப் போக்குக் கொண்ட சக்திகள் ஊறுவிளைவித்தாலும் கூட தமது நிலைப்பாட்டில் கூட்டமைப்பு உறுதியாக நிற்க வேண்டும்.

யாழ்ப்பாணம் மற்றும் இதர பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள பெரும் எண்ணிக்கையிலான படையினர் தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள அச்ச நிலைக்கு அப்பால், வடக்கில் மாகாணத் தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கு இலங்கை அரசு திட்டமிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றே செய்க - அதை இன்றே செய்க

உடனடியாகச் செய்து முடிக்கக்கூடிய வேலைகளைக் கூட ஒத்திப் போடுவது என்பது சிலர் வழக்கம். பல் வலிக்கிறது என்று வாய் வலிக்கப் புலம்பு வார்களே ஒழிய, மருத்துவரை உடனே பார்க்க மாட்டார்கள். ஆனால் வாழ்க்கையில் வெற்றி பெற்ற தலைவர்கள் உலக வழிகாட்டிகள், இதிகாச நாயகர்கள் எதையும் ஆழமாகச் சிந்தித்து, அறிவுபூர்வமாக முடிவெடுத்து உடனே செயலுக்கும் கொண்டு வருவார்கள்.

இராமனுக்கு முடிசூட்டுவது என்று தசரதர் நிறைய ஆலோசித்து உடனே முடிவெடுத்தார். எப்படி? ஆலோசனைதான் நீண்ட நேரம் நடந்ததே ஒழிய, பட்டாபிஷேகம் என்றதும் 'நாளைக்கு' என்று அதிரடியாகத் தீர்மானிக்கிறார். அதற்குள் விதி விளையாடியது என்பது வேறு விஷயம். ஆனால் முடிவெடுத்த உடனே நாளை பட்டாபிஷேகம் என்கிற நடவடிக்கை வேகம் தசரதன் தலைமைக்கு அத்தாட்சி.

கைகேயி ''ஆட்சி இல்லை'' என்று இராமனுக்கு அறிவித்தாள். காடு போகத் துணிந்தான் இராமன் . கால அவகாசம் கேட்டானா? இடைக்காலத் தடையுத்தரவு கேட்டுப் போராடினானா? இல்லையே. காடு போவது என்று தீர்மானித்தவுடன் இன்றே போவது என்று முடிவு செய்தான். ''மின் ஒளிர்கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்'' என்று புறப்பட்டுச் சென்றும் விட்டான். ஒத்தி போடுகிற மனோபாவம் அந்தத் தலைவனுக்கு இல்லை.

மகாபாரதத்தில் வரும் பீஷ்மன். அடேயப்பா என்ன உறுதி? என்ன மனோபலம். தந்தை சந்தனு, ஒரு பெண்ணை மணக்க விரும்புகிறார் என்ற செய்தியைத் தேரோட்டி மூலம் அறிந்து கொண்டான். அந்த மீனவப் பெண்ணை வளர்க்கும் பெரியவரை வணங்கினான். தந்தைக்குப் பெண் கேட்டான்.

பரிமளகந்தி என்ற அந்த மீனவப் பெண்ணின் தந்தை நிபந்தனை ஒன்றை விதித்தார். சந்தனுவின் முதல் மகன் பீஷ்மன் தான். என்றாலும் பரிமளகந்தி வயிற்றில் பிறக்கும் மகனுக்குத்தான் பட்டம் சூட்ட வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. மீனவர் தலைவனின் நிபந்தனையை அறிந்ததும் பீஷ்மன் கால அவகாசம் கேட்கவில்லை. முடிவை ஒத்திப்போடவில்லை. தயக்கமின்றிச் சொன்னான்.

''உன் மகள் வயிற்றில் பிறக்கும் மகனுக்கு ஆட்சியை வழங்குவேன்.'' மீனவர் கிழவன் மிகமிகக் கெட்டிக்காரன். ''நீ நல்லவன். ஆனால் நாளை உன் வயிற்றில் பிறக்கும் பிள்ளை ஆசைப்பட்டு என் பேரனை வென்று, கொன்று ஆட்சியைப் பிடித்து விட்டால்?'' என்று இழுத்தான். அப்போது பீஷ்மன் தயங்கவில்லை. எடுத்த முடிவில் மாற்றம் இல்லை; குழப்பம் இல்லை. தெளிவாகச் சொன்னான்:

''எல்லோரும் கேளுங்கள். புத்திரப்பேறு இல்லாதவர்க்கு மோட்சம் இல்லை என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் மணம்முடிக்க மாட்டேன். மங்கையரைத் தீண்டி மகப்பேறு அடையேன். என் தந்தையின் ஆசை நிறைவேற நித்ய பிரம்மசர்யம் மேற்கொள்வேன்'' என்றான். வலிமையான முடிவுகளை உடனடியாக எடுத்து நடைமுறைப்படுத்தும் பலசாலிகள் ஒரு தேசத்தின் தேவை. அந்த இதிகாச புருஷர்கள் தான் இந்தியத் தலைவிதியை மாற்றி அமைக்கும் மகா புருஷர்கள்.

வினோபா, காந்தி, ராஜாஜி, படேல் போன்ற விவேகம் உள்ளவர்கள் அப்படிப்பட்ட மகானுபவர்கள். முடிவெடுக்காது குழம்புதல், எடுத்த முடிவைச் செயல்படுத்த மாட்டாது தயங்குதல், கூடுமான வரை ஒத்திப்போடுதல், இவை முன்னேற்றத்தின் முதுகெலும்பையே ஒடிப்பவை.


உண்ணாவிரதம், மௌனவிரதம், உணவுக் கட்டுப்பாடு, தீயபழக்கங்களை விடுவதாகக் கொள்ளும் சபதங்கள் இவற்றில் ஒத்திப் போடுதல் இருக்கக் கூடாது. ''சர்க்கரையை தவிருங்கள். கொழுப்பைக் குறையுங்கள்'' என்று மருத்துவர் அறிவுறுத்தினால் நாளை முதல் என்பவர்கள் நிரந்தர நோயாளி கள் தாம். 'இன்றே' என்ற இராமபிரான் வாரிசுகள் ஆரோக்கியசாலிகள்.

தருமம் செய்கிறவர்கூட இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். தருமனே தயங்கிய போது பீமன் மூலம் இந்த நல்லறிவு அவனுக்கு வாய்த்தது என்று ஒரு கதை உண்டு. நாள்தோறும் தருமம் செய்வான் தருமன். ஒருநாள் தருமம் செய்து முடித்த பின்னர் ஒரு யாசகன் வந்தான். யாசகம் கேட்டான். தருமனுக்கு வேறு வேலைகள் அல்லது ஏதோ தயக்கம். ''நாளைக்கு வா.... நாளை கண்டிப்பாக வா.... என் கையால் நானே தருகிறேன்'' என்றான். பக்கத்தில் இருந்த பீமன் பெரிதாகக் கையைத் தட்டிச் சிரித்துக் காவலாளியைப் பார்த்து உத்தரவிட்டான்.

''நாடு முழுவதும் நன்றாக அலங்கரியுங்கள். வீதி எல்லாம் விழாக் கோலம் பூணட்டும். இன்று ஒரு பொன்னாள்.'' தருமனுக்கு ஒன்றும் புரியவில்லை யாசகம் வாங்க வந்தவனை 'நாளை வா' என்றால் தம்பி ஏன் விழா எடுக்கிறான்? கேலி செய்கிறான்? அவனுக்குப் புரியவில்லை. தம்பியையே கேட்டான். பீமன் பதில் உரைத்தான்.

''அண்ணா... நீர் பெரிய ஞானியாகிவிட்டீர். அதற்குத்தான் விழா... யாருக்குமே தெரியாத உண்மைகள் உமக்குத் தெரிந்து விட்டன; அந்த யாசகனை நாளைக்குக் கண்டிப்பாக வா.... என்றீர்.

எனவே நாளை வரை அவன் நிச்சயம் உயிரோடு இருப்பான் என்பது உனக்குத் தெரிந்து விட்டது. மரணம் எப்போது வருமோ என்று நாங்கள் எல்லாம் அஞ்சிக் கொண்டிருக்கிறோம். நாளைக்குள் அவனுக்கு மரணம் இல்லை என்று நீர் உறுதியாக இருப்பதால் நீர் ஞானியாகி விட்டீர். அது மட்டும் இல்லை. அவனுக்கு நீர் உம் கையாலேயே நாளை தானம் தருவதாக வாக்களித்தீர்.



நாளை வரை உமக்கும் மரணம் இல்லை என்பது உமக்கும் தெரிந்து விட்டது. இன்றைக்கே இப்போதே வேண்டுமானாலும் வரக்கூடிய மரணத்தை நீர் நாளை வரை நிறுத்தி வைத்து விட்டீர்... நீர் மரணத்தை வென்று விட்டீர்.... அதற்குத் தான் விழா'' என்றான் கேலியாக பீமன்.

தருமம் செய்வதனால் அன்றே, அப்போதே செய்ய வேண்டும். 'நாளைக்கு' என்று சொல்வது அறிவீனம்.

நாளைக்கு இருக்கப் போகிறோம் என்பது என்ன நிச்சயம்?

சுகி. சிவம்

# கல்வியில் உயர் நிலைநோக்கி நகரும் நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி



நெடுந்தீவு மத்தி றோ.க. தமிழ்க் கலவன் வித்தியாலயம் என்ற பெயருடன் 1876ஆம் ஆண்டுக்கு முன்னர் றோமன் கந்தோலிக்க திருச்சபையினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 66 வருடங்கள் கலவன் பாடசாலையாக இயங்கி வந்த நிலையில் 1941ஆம் ஆண்டு அதில் இருந்து பிரிந்து ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையான பெண்கள் பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. 1972ஆம் ஆண்டு புதிய கல்வித்திட்டம் அறிமுகமானதைத் தொடர்ந்து மீண்டும் கலவன் பாடசாலையாக மாற்றியமைக்கப்பட்டது.

1938ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை டெய்சி நெடுந்தீவின் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றுக் கொண்ட சமயம் மத்தி றோ.க. வித்தியாலயம் கலவன் பாடசாலையாக இருந்த காரணத்தினால் இங்குள்ள பெண்கள் கல்வியில் வளர்ச்சி பெற வாய்ப்புக்கள் குறைந்துள்ளதாக யாழ் ஆயருடனும், திருக்குடும்ப துறவறசபையின் மாகாணத் தலைவியுடனும் தொடர்பு கொண்டதை அடுத்து தனியான பெண்கள் பாடசாலையாக 1943ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி பிரிந்து சென்றது.

இதன் முதல் அதிபராக அருட்செல்வி அகத்தா பொறுப்பேற்றுக் கொண்டார். ஆரம்பப் பாடசாலையாக இருந்த இந்த வித்தியாலயம் தொடர்ந்து க.பொ.த சாதாரண தரம் வரை இயங்கத் தொடங்கியது. இந்தக் காலங்களில் அருட் சகோதரிகளின் அயராத முயற்சியினாலும் மாணவிகளின் ஒத்துழைப்பாலும் பாடசாலை பல வழிகளில் வளர்ச்சியடைந்து இறுதித் தேர்வுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வந்தது.

மீண்டும் 1971ஆம் ஆண்டு தரம் இறக்கப்பட்டது. எனினும் அங்கு கடமையாற்றிய சகோதரிகள் றிசெற்றார் விக்ரர் திருமதி இ.கந்தையா ஆகிய ஆசிரியைகளின் ஒத்துழைப்புடன் புதிய கல்வித்திட்டத்தைச் செயற்படுத்துவதில் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னோடியாக அமைந்திருந்தமை இந்தப் பகுதி மக்களுக்கு மகிழ்ச்சியைத்தந்துள்ளது. 1971ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே இங்கு நடத்தலாம் என்று உத்தரவிடப்பட்ட போது இப்பகுதி மக்கள் பெரும் அதிருப்தியடைந்தனர். 1963இல் அரசு இந்தப் பாடசாலையைப் பொறுப்பேற்றபின் இதன் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

> 1982ஆம் ஆண்டிலேயே நெடுந்தீவின் முதலாவது றோ.க. ஆண்கள் வித்தியாலயத்துக்கு இணையாக நெடுந்தீவில் தனியான பெண்கள் வித்தியாலயமாக மாற்றம்

1971இல் தரம் இறக்கப்பட்டதற்கு எதிராக அப்போதைய அதிபர் டிருசரேத், பங்குத்தந்தை, பெற்றோர், நலன் விரும்பிகள் மேற்கொண்ட கடும் முயற்சி காரணமாக மீண்டும் 1978இல் தரம் உயர்த்தப்பட 1982இல் க.பொ.த. சாதாரண தரம் வரை இயங்கத் தொடங்கியது. இந்த ஆண்டிலேயே நெடுந்தீவின் முதலாவது றோ.க.த ஆண்கள் வித்தியாலயத்துக்கு இணையாக நெடுந்தீவில் தனியான பெண்கள் வித்தியாலயமாக உருமாறிக் கொண்டது.

1984இல் றோ.க பெண்கள் வித்தியாலயத்தில் பயின்ற பலர் க.பொ.த சாதாரணதரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர் கல்வி கற்கும் தகைமையையும் பெற்றுக் கொண்டனர். இது இந்த வித்தியாலத்திற்குப் பெருமை சேர்த்ததாக பாடசாலைச் சமூகம் கூறுகின்றது. அருட்சகோதரிகள் மேரி. அகத்தா, மேரி. மோனிக்கா, மேரி. இமா லொறற்றா, ஜான் மேரி, மேரி றொஜினா, மேரிவலன்ரைன், மேரி. கில்டக்ளாட், செறின்லியோ, மேரிதிறேசிற்றா, மேரி. நிசெற்றா, மேரி. டிருசரேத், மேரி.யோசப், மேரி.லொறன்ரீன, மேரி.லூயிஸ், ஜெயசீலி றொட்றிக்கோ, இக்னேசியா சூசைப்பிள்ளை, ஆகியோர் அதிபர் பணியில் இருந்துள்ளனர். தற்போதைய அதிபராக பொறுப்பில் உள்ளவர் அருட்செல்வி யசிந்தாராணி அந்தோனிப்பிள்ளை.

அருட்செல்வி ஜெயசீலி றொட்றிக்கோ காலத்திலேயே இந்தப் பாடசாலை றோ.க மகளிர் கல்லூரி என்ற அந்தஸ்தினைப் பெற்றது. சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும், இணைப் பாடவிதான செயற்பாடுகளில் முன்னணியில் விளங்கவும், இவரது முயற்சியே முதன்மைக் காரணம் என அதிபர் யசிந்தாராணி கூறுகிறார்.

பழைய ஆண்கள் பாடசாலைக் கட்டடத்தில் புதிய பெண்கள் கல்லூரி இயங்கி வந்தது. இந்தக் கட்டடம் மிகவும் பழமையானது என்பதால் புதிய கட்டடங்களை அமைக்க அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா உதவியிருந்நதார். பான்ட் வாத்தியமும் வழங்கப்பட்டது. அதிபராக இருந்த அருட் செல்வி ஜெயசீலி ஒரு சிறந்த அதிபராக நிர்வகித்தவர் என்பதுடன் இன்றைய வளர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றியவர். அவரும் அவருடன் பணியாற்றிய ஆசிரியர்களும் இந்தப் பாடசாலையின் உயர்வுக்கு ஆற்றிய பணிகள் என்றும் மனதை விட்டு நீங்காதவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது காலத்திலேயே சுற்றாடலில் உள்ள தனியாளின் காணிகள் பாடசாலைக்குக் கிடைத்தன.

அதிபர் இக்னேசியா சூசைப்பிள்ளையின் காலத்தில் பாடசாலையின் நலனில் அக்கறை கொண்ட சிலரால் கணினி மாடிக்கட்டடம் அலுவலக முற்பகுதி புனரமைப்பு என்பன மேற்கொள்ளப்பட்டன. ஆரம்ப பிரிவுச் சிறார்களுக்கான அழகிய சித்திரங்கள் சுவர்களில் பொறிக்கப்பட்டன.

அதிபர் யசிந்தாராணி பதவியேற்றது முதல் கல்விச் செயற்பாடுகள் மேலும் உச்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. ஆண்டு ஐந்து புலமைப்பரிசில், க.பொ.த சாதாரணப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கின்றன. பாடங்களுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. விளையாட்டுப்போட்டிகளில் மாவட்ட மாகாண மட்டங்களில் குறிப்பிடத்தக்க திறமைகளை மாணவர்கள் வெளிப்படுத்தியுள்ளதாகவும், தேசியமட்டம் வரை சென்று பரிசில்களைப் பெறவேண்டும் என்பது மாணவிகளின் குறிக்கோளாகவும் உள்ளது.

இவை தவிர சமய, கலை, கலாசார சமூக விழுமியங்களிலும் முக்கிய கவனம் செலுத்தப்படுவதாகவும், பௌதிக வளங்கள் பேணப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது. பொது நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம், ஆரம்பப் பிரிவு தண்ணீர்த் தொட்டி, சமையற் கூடம் நுழைவாயில் வளைவு என்பன அமைக்கப்பட்டுள்ளன. விளையாட்டு மைதானம் கனடா ஒன்றியத்தால் வழங்கப்பட்டுள்ளது. சுற்றுமதிலாக 'கல்வேலி' உள்ளது.

**லக்ஸ்மன்**

றோ.க மகளிர் கல்லூரி இப்போது ஏழுபதாவது ஆண்டை நோக்கி நகர்கின்றது. இந்த நிலையில் கல்விப்பயணத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்குவதுடன் சமூகத்தின் உயர்வில் அக்கறை கொண்டவர்களாக அளப்பரிய மனிதர்களை வழங்கவேண்டும் என்ற இலட்சியப் பயணத்தில் பல்கலைக்கழகத்திற்கும், ஆசிரியர் கல்லூரிகளுக்கும் வருடா வருடம் மாணவர்கள் தெரிவாகக் கூடியதாக கற்பித்தல் முறைமைகளைக் கொண்டு செயற்படுவதாகவும், அனைவரது உதவிகள் ஒத்துழைப்புடன் தனது இலக்கை நோக்கித் தொடர்ந்தும் நகரும் எனவும் அதிபர், ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். ⁎

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியேறினர் இஸ்லாமிய போதகர்கள்

கொழும்பு,ஜன.25
இலங்கையில் சட்ட விரோதமாக தங்கியிருந்த வெளிநாடுகளைச் சேர்ந்த 161 இஸ்லாமிய மதபிரசாரகர்களில் பெரும்பாலானோர் நாட்டில் இருந்து வெளியேறிவிட்டதாக குடிவரவுத்துறை கட்டுப்பாட்டாளர் சூலாநந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் இருந்து வெளியேறியவர்களில் பெரும்பாலானோர் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்களாவர் என்று அவர் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வந்த இவர்கள், மதப்போதனைகளில் ஈடுபட்டு வந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. முஸ்லிம் சமூகத்தில் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இவர்களை நாட்டில் இருந்து வெளியேற உத்தரவிட்டதாக அவர் தெரிவித்தார். (ச)

## 30 கட்சிகளின் பதிவுகள் ரத்தாகும்

கொழும்பு,ஜன.25
கணக்கறிக்கை மற்றும் கொள்கை அறிக்கைகளை பல வருடங்கள் சமர்ப்பிக்கத் தவறிய 30 அரசியல் கட்சிகளின் பதிவுகளை ரத்துச் செய்வதற்கு தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் 67 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் ஆனால் அவற்றில் 30 கட்சிகள் கடந்த பல வருடங்களாக செயற்பாட்டு அரசியலில் ஈடுபடவில்லை என்றும் தேர்தல்கள் திணைக்களத்தை சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட புதிய சட்டத்தின்படி அரசியல் கட்சிகள் தமது வருடாந்த கணக்கறிக்கையை தேர்தல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

கட்சியின் யாப்பு மற்றும் நிர்வாகிகளின் விவரங்கள், அரசியல் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் பிரதிகளையும் அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வறிக்கைகளை வழங்குவதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இக்கட்சிகள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டங்களின்படி செயற்படத் தவறிவிட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இறுதிப் போரில் மீறல்கள் ஐ.நா.ஆய்வு தொடர்கிறது

### ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர் தகவல்


கொழும்பு,ஜன.25
இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பாக ஆலோசனை வழங்க, ஐ.நா பொதுச்செயலர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையைக் கவனத்தில் எடுப்பது குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர் மார்ட்டின் நெஸ்ர்க்கி தெரிவித்துள்ளார்.

நியுயோர்க்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அறிக்கை இப்போது ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் கவனத்தில் உள்ளது. அவர்களுக்கு அதை நாம் அனுப்பிவிட்டோம். அவர்களே அதனைக் கவனிப்பார்கள்.

இலங்கையில் போரின் போது ஐ.நாவின் கடப்பாடுகள் குறித்து நடத்தப்படும் ஆய்வுகள் இன்னமும் முடிவடையவில்லை- என்றார். (ச)



இலங்கைக்கான ஈராக் தூதர் கஹ்தான் தாஹா கல்பிற்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. இரு நாடுகளுக்கும்மிடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை கட்டியெழுப்புதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

## சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிக்க விசேட பிரிவு

கொழும்பு,ஜன.25
இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளை கண்காணிப்பதற்கு விசேட பிரிவு உருவாக்கப்படவுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கைகள் குறித்து இந்தப் பிரிவு கண்காணிப்பு நடத்தும் என்று இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் கண்காணிப்புக் குழு உண்மையான சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் அமையாது என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**இந்த விசேட பிரிவு உண்மையான சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் செயற்படாது என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.**

நாட்டுக்கோ, கலாசார விழுமியங்களுக்கோ அல்லது தேசியபாதுகாப்புக்கோ குந்தகம் ஏற்படுத்தும் வகையில் சுற்றுலாப் பயணிகள் நடந்துகொள்ள அனுமதிக்க முடியாது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## நவீனமாகி வரும் புத்தளம் கடற்கரை

புத்தளம்,ஜன.25
புத்தளம் நகர கடற்கரையோரம் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படும் என்று புத்தளம் நகர சபைத் தலைவர் கே.ஏ.பாயிஸ் தெரிவித்தார்.

அநுராதபுரம், வவுனியா போன்ற இடங்களில் இருந்து வரும் பயணிகள் புத்தளத்தின் ஊடாக கொழும்பை சென்றடைகின்றனர். இவ்வாறு இந்த இடங்களில் இருந்து வருகைதரும் பயணிகள் முகம் கொடுக்கின்ற இடமாக புத்தளம் கடற்கரையோரம் விளங்குவதனால் இந்த கடற்கரையோரத்தை புனரமைத்து அதற்கு 'கொழும்பு முகம்' என்று பெயரிடப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்த 'கொழும்பு முகம்' கடற்கரையோர புனரமைப்புப் பணிகளுக்காக கடற்கரையோரங்களில் சட்ட விரோதமாக கட்டப்பட்டிருக்கும் அரச மற்றும் தனியார் கட்டடங்கள் யாவும் அகற்றப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## 'விழுது' அலுவலகம் உடைத்துச் சோதனை

கொழும்பு,ஜன.25
அரச சார்பற்ற நிறுவனமான 'விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின்' கொழும்பிலுள்ள அலுவலகம் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அங்குள்ள ஆவணங்கள் கிளறி ஆராயப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பு டொரிங்டன் அவெனியூவிலுள்ள இந்த அலுவலகத்தின் பின்புறக் கதவை உடைத்து உள்ளே புகுந்த நபர்கள், அங்கிருந்த கோப்புகள், ஆவணங்களை ஆராய்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அலுவலகத்திலிருந்து பெறுமதியான பல பொருள்கள் எதுவும் திருடப்படவில்லை. எனினும் 15,000 பணம் மாத்திரம் காணாமற்போயுள்ளதாக கறுவாத் தோட்ட பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து மேற்படி அலுவலகத்துக்கு வந்த கறுவாத் தோட்ட பொலிஸார் கைரேகைப் பதிவு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் இலவச சட்ட உதவிகளை வழங்கிவரும் விழுது நிறுவனம் ஊடக கற்கை நெறிகளை நடத்துவதுடன் ஆசிரியர்களுக்கான அகவிழி மற்றும் பெற்றோர்களுக்கான சஞ்சிகைகளையும் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தெரிவுக்குழுவில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மக்களின் ஒப்புதலுடனேயே நிறைவேற்றலாம்

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட தீர்வு ஒன்றைப் பற்றிப் பேசுவதற்கு இலங்கை அரசுக்கு எந்த மக்கள் ஆணையும் இல்லை என்று ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.**



கொழும்பு,ஜன.24
நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எடுக்கப்படும் எந்த தீர்மானமும் மக்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட தீர்வு ஒன்றைப் பற்றிப் பேசுவதற்கு இலங்கை அரசுக்கு எந்த மக்கள் ஆணையும் இல்லை.மகிந்த சிந்தனை விஞ்ஞாபனத்துக்கே மக்கள் வாக்களித்தனர். அதில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட தீர்வு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஆளும் கூட்டணியில் ஜாதிக ஹெல உறுமயவும் ஓர் அங்கமாக இருக்கின்ற போதும், செனட் சபையை அமைக்கும் திட்டம் குறித்து எமக்கு எதுவும் தெரியாது.

இந்த விவகாரங்கள் தொடர்பாக அரசு எம்முடன் பேசவில்லை. இதுபற்றி எமக்குத் தெரியப்படுத்தவும் இல்லை.

செனட் பற்றிய எந்த விவாதத்தையும் அரசு எம்முடன் நடத்தவில்லை. ஆனால் காணி, பொலிஸ் அதிகாரங்களை பகிரமுடியாது என்று தெரிவித்துள்ளது - என்றார். (ச)

## 25% சம்பள உயர்வை ஏற்றது மின்சார சபை

கொழும்பு,ஜன.25
அரசினால் வழங்கப்பட்ட 25 சதவீத சம்பள உயர்வை ஏற்றுக் கொள்வதாக இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்துக்கு மாத்திரம் தாம் அதனை ஏற்றுக் கொள்வதாகவும், அடுத்த வருடம் மேலும் 20% சம்பள அதிகரிப்பு தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஜனவரி மாத சம்பளத்தில் இருந்து இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு 25 சத வீத சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் ஊழியர்களுக்கு 18 சதவீத சம்பள உயர்வு வழங்க அரசு தீர்மானித்ததை அடுத்து தொழிற் சங்கங்கள் எதிர்ப்பை வெளியிட்ட நிலையில் அது 25 சத வீதமாக உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அதிவேகப் பாதை கம்பிகள் திருட்டு

கொழும்பு,ஜன.25
தெற்கு அதிவேக வீதியின் இரு பக்கமும் பொருத்தப்பட்டிருந்த சல்லடை இரும்புக் கம்பிகள் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளன.

அதிவேக வீதியில் தொடங்கொட நுழைவாயில் தொடக்கம் கொழும்பு வரை, இரு பக்கமும் பொருத்தப்பட்டிருந்த சல்லடைக் கம்பிகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறைப்பாட்டுக்கு ஏற்ப விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெற்கு அதிவேக வீதியின் பணிப்பாளர் எரிக் பெரேரா தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர் இனி மூவர் மட்டுமே ஓட்டோவில்

ஓட்டோக்களில் மூவருக்கு மேற்பட்டுப் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கு தடைவிதிக்கும் சட்டம் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் கொழும்பில் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஓட்டோக்களில் மூவருக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கு தடை விதிக்கும் சட்டம் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் கொழும்பில் நடை முறைக்கு வந்துள்ளது.

இது குறித்து கொழும்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனா நாயக்க தெரிவித்ததாவது:

ஓட்டோச் சாரதிகள் சிலர் ஐந்து, ஆறு பேருக்கு மேற்பட்ட பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் சந்தர்ப்பங்கள் உள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. முன்வைக்கப்பட்டுள்ள இந்த முறைப்பாடுகள் மற்றும் தகவல்களை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் வயதில் கூடிய பிள்ளைகளென்றால் இருவரையும் சிறு பிள்ளைகள் என்றால் மூவரையும் மட்டுமே ஓட்டோவில் ஏற்றிச் செல்ல முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தடை உத்தரவை மீறிச் செயற்படும் ஓட்டோச் சாரதிகளைக் கைது செய்யுமாறும் ஓட்டோக்களைக் கைப்பற்றுமாறும் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் கொழும்பிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

ஓட்டோக்களில் ஏற்றிச் செல்லக்கூடிய எண்ணிக்கையை விட பாடசாலை மாணவர்கள் ஏற்றிச் செல்லப்படுவதால் ஏற்படக் கூடிய அபாயகரமான நிலைப்பாட்டைக் கவனத்தில் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-22)

## பயணிப்போர் சிரமத்தில்

தென்மராட்சி, ஜன.25

மழை ஓய்ந்து ஒரு மாதமாகியும் வீதியில் காணப்படும் வெள்ளம் வழிந்தோடாததால் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். கெற் பேலி கிழக்கு கேடில்ஸ் நகரில் உள்ள குடியிருப்பாளர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கிராமத்துக்குச் செல்லும் சந்தியிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்துக்கு தொடராக வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் வெள்ளம் வழிந்தோடக் கூடிய வாய்ப்பு இல்லாததால் குடியிருப்பாளர்கள் தினமும் இந்த வெள்ளத்தின் ஊடாகவே பயணித்து வருவ தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வெள்ளத்தால் பல்வேறு தொற்று நோய்கள் பரவி வருவதாக வும் இந்த வெள்ளத்தை வெளியேற்ற உதவுமாறு உரிய திணைக்களங்களுக்கு அறிவித்தும் பயன் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## ஜெனீவாவுக்கான இலங்கை தூதருக்கு அச்சுறுத்தல்

### சிங்களப் பத்திரிகை தகவல்

ஜெனீவாவுக்கான இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகத்திற்கு விடுதலைப் புலிகள் அச்சுறுத்தல் விடுத்து வருவதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் 27 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக விடுதலைப்புலி ஆதரவாளர்கள்பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் என்று அந்தப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த தமரா குணநயாகம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இதன் காரணமாகவே விடுதலைப்புலி ஆதரவாளர்கள் தூதருக்கு கொலை மிரட்டல் விடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மொழிகளில் பாண்டியத்தியம் பெற்ற தமரா குணநாயகம் விடுதலைப் புலிச் செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளை ஒடுக்க பல வழிகளில் முயன்று வருவதாக பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் தூதரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அருகாமையில் விடுதலைப் புலிச் சந்தேகநபர்கள் சந்தேகத்துக்கு இடமான வகையில் சுற்றித் திரிந்ததாக அந்தப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## ஒளிந்திருந்த நபர் பிடிபட்டார்

தண்ணீர் தொட்டிக்குள் ஒளிந்திருந்த மட்டுவில் வடக்கு வாசி ஊர்மக்களால் முறையாகக் கவனிக்கப்பட்ட சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை இரவு மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

இந்தப் பகுதி வீடொன்றில் இரவு வேளையில் கிணற்றுக்குப் பக்கத்தில் உள்ள தொட்டிக்குள் யாரோ அமர்ந்திருப்பதை அவதானித்த வீட்டுக்காரர் தொலைபேசியில் தகவல் கொடுக்க ஊர் மக்கள் திரண்டு சுற்றி வளைத்து தொட்டிக்குள் மறைந்திருந்த நபரை முறையாகக் கவனித்த பின்னர் சாவகச்சேரி பொலி ஸாரிடம் ஒப்படைத்தனர்.

அடுத்தவரின் காணிக்குள் அத்துமீறிப் பிரவேசித்த தன் குற்றச்சாட்டில் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளைக்கு முன்னிலைப்படுத்தினர். இவரை மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தி விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்த வழக்குத் தொடர்பாக சட்டத்தரணி த.புவனேஸ்வரன் தாக்கல் செய்த பிணை மனுவை விசாரித்த நீதவான் மேற்படி நபரை பிணையில் செல்ல அனுமதித்து அடுத்தமாதம் 23 ஆம் திகதி வழக்கை ஒத்தி வைத்தார்.

## கிராமத்துக்கு பெயர்ப்பலகை இல்லாததால் மக்கள் விசனம்

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் ஊரைக் குறிக்கும் பெயர்ப் பலகை இதுவரை போடப்படவில்லை.

எழுதுமட்டுவாழ்'' தெற்குப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளபோதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஊரைக் குறிக்கும் பெயர்ப்பலகை இது வரை போடப்படாதது குறித்து இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். மக்கள் மீளக் குடியமர்ந்த போதிலும் இன்னமும் வீதியோரங்கள் புனரமைக்கப் படாததால் இப்பகுதியை அடையாளம் காணமுடியாத நிலை காணப்படுவதால் வீதிப் பெயர்ப்பலகை இரு புறமும் அமைக்குமாறு கடந்த நவம்பர் மாதம் வீதி அபிவிருத்தி அதி கார சபையின் பிரதம பொறியிய லாளருக்கு மக்கள் சார்பில் எழுது மட்டுவாழ் தெற்கு விவசாய சம்மேளனத்தின் செயலாளரினால் கடிதம் அனுப்பி வைக்கப் பட்டது. வீதியில் ஊரின் பெயர்ப் பலகை நடப் படுவதால் தூர இடங்களிலிருந்து வருவோர் சிரமமின்றி இங்கு வரக் கூடியதாக இருக்கும் என்பதால் எழுதுமட்டுவாழ் எனக் குறிப்பிடும் பெயர்ப் பலகையை விரைவில் வீதியின் இரு பக்கமும் பொருத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (207)

## யாழ்.குடாநாட்டின் மரக்கறி விதைக்கு தெற்கில் கிராக்கி

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.குடாநாட்டு மரக்கறி விதையினங்களுக்கு தெற்கில் பெரியளவில் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெண்டி, குரங்குவால் பயிற்றை போன்ற மரக்கறி விதைகளுக்கே தெற்கில் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட விதை உற்பத்தி சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் இந்த குரங்குவால் பயிற்றை, பால் வெண்டிக்காய் போன்றவற்றுக்கான விதைகளுக்கு அதிக கிராக்கி நிலவுகின்றன.

திருநெல்வேலி விதை உற்பத்தி சங்கத்தின் விதை உற்பத்தி தோட்டத்தில் தற்போது மரக்கறி விதைகளை உற்பத்தி செய்யும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. புடோல், கத்தரி, வெண்டி, தக்காளி, பயிற்றை, கீரை போன்ற பயிர்கள் அதிகமாக விதைக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன. (வ-17)


**J.C.B.BACKHOE இயந்திரம் வாடகைக்கு**




பழைய கட்டடங்களை இடித்து துப்புரவு செய்யவும் காணிகளைத் துப்புரவாக்கி மட்டப் படுத்தவும் பாதைகளைச் சீர்செய்யவும் மணித்தியாலக் கணக்கில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776035633, 0776452019, 0777279151



**பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்**

சண்டிலிப்பாய் பிரதேச செயலராக அரும்பணியாற்றி தெல்லிப்பழைப் பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் மதிப்பிற்குரிய



**திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம்**

அவர்கள் மாதகல் கிழக்கு J/150, மாதகல் தெற்கு J/151, மாதகல் மேற்கு J/152, கிராம அலுவலர் பிரிவுகளில் மீள் குடியேற்றம், சுனாமி அனர்த்த பாதிப்பு மற்றும் புயல் அனர்த்தங்களின் போது விசேடமாகச் சேவையாற்றியதோடு அப்பகுதி மக்களின் தேவையறிந்து அன்போடும் பரிவோடும் சேவையாற்றி எல்லோர் மனதிலும் இடம்பிடித்தவர். அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துவதோடு எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(13394)(2-9-7)

தெல்லிப்பழைப் பிரதேச செயலராக அரும்பணியாற்றி சண்டிலிப்பாய் பிரதேச செயலராகக் கடமையாற்ற வந்துள்ள மதிப்பிற்குரிய

**சுப்பிரமணியம் முரளிதரன்**

அவர்களை வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றோம். எம் கிராம வளர்ச்சிக்குத் தங்களது சேவையைத் தொடர்ந்து எதிர்பார்க்கும்



**மாதகல் நலன்புரி சங்கம்,**
**மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம்**


## தமிழ் நாள்காட்டி

சுன்னாகம்,ஜன.25

சங்க இலக்கியப் புலவர் ஈழத்துப் புதன் தேவனார் நினைவாகத் தமிழர் நாள் காட்டி வெளியிடப் பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் செயலரும், இலங்கை மின்சார சபையின் ஓய்வுபெற்ற மின் கண்காணிப்பாளருமாகிய நா.வை. குமரிவேந்தன் (மகேந்திரராசா) இந்நாள்காட்டியைத் தொகுப்பாக்கம் செய்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்ப் புத்தாண்டு நாளான தைப்பொங்கல் நாளை முதல் நாளாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இந்நாள்காட்டி ஒரு மாதத்திற்கு ஒரு தாளைக் கொண்டதாக விளங்குகின்றது. ஒவ்வொரு தாளிலும் தமிழ்ப் பெரி[illegible] தாங்கியுள்ளது. (38)


**27 ஆவது அகவை காணும் யாழ்ப்பாணம் கலாலயா பயிற்சியகம் நீடூழி வாழ்க**

கலைகளின் ஆலயமே!
கார் இருளை நீக்கும் சூரியனே!
மண்ணில் புதைந்த வைரமாக
ஒளியற்று இருந்த மங்கையரை
மீட்டெடுத்து பட்டை தீட்டி ஒளிரவிட்டு
பார்தனிலே நற் தகுதியைப் பெற்றுத்தந்த - கலை அரசியே!

உன் அகத்தில் தான் எத்தனை கலைகள்
கேக் ஐசிங், உணவு தயாரித்தல், உடை தயாரித்தல், கூந்தல் அலங்காரம்,
முக அழகுக் கலை எனப் பல் கலைகளைக் கற்பித்து எமை மெருகேற்றும்
தாயே!
உன்னுடைய இலட்சனை போல மங்கையரின் வாழ்வு தனில்
குடத்துள் விளக்காக இருந்த எம்மை
குன்று மேல் தீபமாகத் தரணி காண வைத்த அன்னை சரஸ்வதியே!
என்றென்றும் உன் பணி 26 ஆண்டுகள்
இனிதே கழிந்து இன்னும் பற் பல ஆண்டுகள்
காண வாழ்த்துகின்றோம்! தாயே!
வணங்குகின்றோம்.

- 2011 ஆம் ஆண்டு மாணவிகள்

(அ/8087)(2-8-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லா மாவட்டங்களிலும் ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்

# புலம்பெயர்ந்தோருக்காக ஆங்கிலத்தில் இறுவட்டு

### தகவல்களை ஆவணப்படுத்தி வைப்பதற்கு சாதகமாக அமையும்

யாழ்ப்பாணம்,ஜன.25

நீர்வேலிப் பிரதேசத்தின் கலை, பண்பாடு தொடர்பான தகவல்களை ஆங்கில மொழியில் இறுவட்டாக வெளியிட வேண்டும் என சமூக ஆர்வலர்களால் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி கலை பண்பாட்டு மன்றத்தின்பொதுக் கூட்டம் கடந்த 21ஆம் திகதி நீர்வேலி ஸ்ரீ கணேச முன்பள்ளியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்கள், மற்றும் சமூக ஆர்வலர்கள் நீர்வேலி கலை பண்பாட்டு மன்றத்தின் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடிய போது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட்ட விடயங்களாவன:

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நீர்வேலி மக்களுக்கு நீர்வேலிப் பிரதேசத்தின் கலை, பண்பாடுகள் தொடர்பாக எடுத்துக் காட்டுவதற்கும் ஞாபகமூட்டல் செய்வதற்கும் கலை விழாக்கள் நடத்தப்படவேண்டும்.

அத்துடன் கிராம வளர்ச்சியை முன்னெடுக்கக்கூடிய வகையில் கலை நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும்.

இது தொடர்பான தகவல்களை ஆங்கில மொழியில் இறுவட்டாக வெளியீடு செய்தால் வெளிநாடுகளில் வசிப்பவர்கள் இலகுவாகத் தகவல்களை ஆவணப்படுத்தி வைப்பதற்கு சாதகமாக அமையும் எனப் பலராலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (ந-313)

## வீதி எங்கும் வாகனங்கள், போக்குவரத்துக்குப் பாதிப்பு

### வீதியில் சைக்கிள்களை நிறுத்தாது சந்தைக்கென ஒதுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இடங்களில் நிறுத்தவும்

நவாலி,ஜன.25

நவாலி பிரதேச சந்தையின் முன்பக்க வீதியின் இருமருங்கிலும் மோட்டார் வாகனங்கள் சைக்கிள்கள் என்பவற்றை நிறுத்துவதால் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

இதனால் வீதியில் வாகனங்களை நிறுத்தாது சந்தைக்கென ஒதுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இடங்களில் நிறுத்துமாறு சந்தை குத்தகைக்காரர் தெரிவித்துள்ளார் எனினும் பொது மக்கள் அவரிடம் பிரச்சினைக்குச் செல்கின்றார்கள்.

இதனால் லட்சம் ரூபா கொடுத்து குத்தகை எடுத்தவருக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் நேரில் வந்து இவற்றைப் பார்வையிட்டு ஆவன செய்ய வேண்டுமென அந்த வீதியால் பயணிப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-100)

## மெற்போமின் வழங்கப்படவில்லை நீரிழிவு நோயாளர் சிரமம்

அளவெட்டி, ஜன.25

நீரிழிவு நோய்க்குரிய மெற்போமின் வில்லைகள் வழங்கப்படவில்லை என தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் நீரிழிவு நோய்க்கு சிகிச்சை பெறும் நோயாளிகள் வருத்தத்துடன் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் இந்த மருந்துகள் வழங்கப்படாமையால் பணம் கொடுத்து மருந்துக் கடைகளில் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

மெற்போமின் வில்லைகள் பல மாதங்களாக வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அந்த மருந்துகள் விரைவில் கிடைத்ததும் உரிய நோயாளிகளுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். (ந-36)

## டெங்கு ஒழிப்பு தீவிரம்

நவாலி,ஜன.25

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு நவாலிப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் பரிசோதனை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் இவர்கள் இங்குள்ள வீடுகள், வளவுகள், கடைகள், தொழிற்சாலைகள் ஆலயங்கள் மற்றும் பொது இடங்கள் என்பவற்றுக்குச் சென்று டெங்கு பெருகும் இடங்களை அவதானித்து அறிவுரைகளையும் வழங்கி வருகின்றனர்.

இதனையடுத்து குடியிருப்பாளர்கள் தாமாகவே முன்வந்து தமது காணிகள், வீதிகள் வீடுகள் என்பவற்றைத் துப்புரவு செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது. (ந-100)

## முதியோர் விவரம் திரட்டல்

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு ஒவ்வொரு மாதமும் சமூக சேவைத் திணைக்களத்தால் விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. அதனால் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விவரங்களைத் தருமாறு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ரி.சாந்தகுமாரன் சகல முதியோர் சங்களுக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளார் (ந-100)

## வாகன அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஜன.25

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இதுவரை மூவாயிரம் பேருக்கு வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரங்களைப் பெறும் இறுதிநாள் எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதால் வாகன சொந்தக்காரர்கள் நெருக்கடிகளின்றி அனுமதிப் பத்திரத்தைப் பெறக்கூடியதாக உள்ளது. (ந-100)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும்(26.01.2012) விநியோகிக்கப்படும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085

(13302) (45-7-9)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் சிறிய நிறுவனங்களுக்கு அல்லது குடும்பத்தினருக்கு வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு: 077 8208898 (7-9-6)(13337)

## JCB வாகனம் விற்பனைக்கு

பாவனையிலுள்ள JCB (இங்கிலன்ட்) வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 159 2712

## ஒத்து மாறல்

வவுனியா நகரை அண்மித்த பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு: 077 8029892 - 077 8543405

## தவறிவிட்டது

கொக்குவில் கிழக்கு எனும் முகவரியுடைய மார்க்கண்டு இராசேந்திரம் என்பவரின் தேசிய அ.அ. (582650535 x) மற்றும் மோட்டார் சைக்கிள் சம்பந்தமான சகல ஆவணங்களும் பேர்சுடன் கோண்டாவிலுக்கும், கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடனும் முகவரியுடனும் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு. 077 625 8115, புதிய சலூன் கொக்குவில் சந்தி

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

(13094) (8-7-6)

## T Vகள் மலிவு விற்பனை

யாழ்நகரில் எங்கும் கிடைக்காத மிக மிக மலிவு விலையில் Japan Sony Waga Flat T Vகள் 21"-10000/=, 25"-12500/=, Pioneer Amp-10000/=, குளிர் சாதனப்பெட்டிகள் - 20000/=, CD-Casstte-Radio- 2000/=

தொடர்புகளுக்கு: 077 0440570 - 077 9712958 (அப்பளம்)

சொனி றேட்ற்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக 56, K.K.S. வீதி, சுன்னாகம்.(13290) (45-7-9)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி, பழங்கிணற்றடி பிள்ளையார் வீதி, இல. 6 இல்
[illegible]

தொடர்பு: 077 3286295


## மரண அறிவித்தல்



திருமதி
# கரல்ட் ராணிறெஜினா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சொலமன் லேன், கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி கரல்ட் ராணிறெஜினா (23.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இம்மானுவேல் மாகிறேற் (பஞ்சமணி) அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற கரல்ட் தேவராசாவின் அன்பு மனைவியும் மற்றும் மேரி அஞ்சலா (சந்திரா - கொழும்பு), எட்மன் சேவியர் (பிரான்ஸ்), புளோறிடா (சென். சாள்ஸ் மகா வித்தியாலயம் ஆசிரியர்), ஆகியோரின் பாசம் மிக்க தாயும், சாமுவேல் இராஜரெட்ணம், (கொழும்பு), அன்ரன் இம்மானுவல் (முருங்கன் தபால் அலுவலகம்) ஆகியோரின் மாமியும், டிலானி, றொஷானி, போன்ஷிகா, மக்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும், இக்கினேஷியஸ், (பிரான்ஸ்), லில்லிப் பிலோமினா (அவுஸ்திரேலியா), பற்றிக்சந்திரன், துரைரெட்டிணம், றூபித்திரேசா (இத்தாலி), கிறிஸ்ரி - இராஜக்கோண் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (25.01.2012) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

120/3, சொலமன் லேன்,
கொய்யாத்தோட்டம்.

தகவல்:
பிள்ளைகள்

(13385) (45-9-6)

## நன்றி நவிலல்



கடந்த 12.01.2012 இல் காலமான

அமரர்
# டானியல் யேசுதாசன்

(பொறியியலாளர்)

அவர்களின் இறுதிக்கிரியைகளில் செபித்து ஆறுதல் கூறிய யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும், எமது இல்லத்திற்கும், திருப் பலிக்கும் வருகை தந்த புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர் சங்கத்தினருக்கும் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகளுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பகர்கள் யாவருக்கும் அமரர் குடும்பத்தினர் சார்பில் நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

63, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

சகோதரி
திருமதி பி.எவ். சின்னத்துரை,
(ஓய்வு நிலை அதிபர்)

(13396) (45-7-6)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



# ஆரோக்கியநாதர் திருமாவளன் (திரு)

மலர்வில் மகிழ்ந்தது:
26★10★1975

மறைவில் வெந்தது:
25★01★2009

*உன் சுவாசம் அடங்கிய*
*மண்ணுக்குள் மனிதமே மறைந்ததால்*
*வாசமில்லா வாழ்வில் வதங்கியே ஏங்குகின்றோம்*
*உன் நேச முகம் தேடி*
*முகவரி தொலைத்தவர்களாய்*
*மூன்றாண்டுகள் மூச்சடக்கிக் கதறுகின்றோம்*
*ஈசன் பாதம் அமர்ந்திருந்து*
*வருடிக் கொடுத்திடுவாய் எம் திருவே*

64,ஓடக்கரைவீதி,
குருநகர்.

திருமதி ஆரோக்கியநாதர்
குடும்பத்தினர்.

(13387)(2-7-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி- மலேசிய அகதிகள் ஒப்பந்தம் தோல்வியில்

**ஆஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப் பட்ட அகதிகள் 4 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்குவது என்றும் மேலதிகமாக தங்கியுள்ள 800 பேரை மலேசியாவுக்கு அனுப்புவது என்றும் ஒப்பந்தத்தினூடாக தீர்மானிக்கப்பட்டது.**

ஆஸ்திரேலிய மற்றும் மலேசியாவுக்கு இடையிலான அகதிகள் கைமாற்றுத் திட்டம் தோல்வி அடைந்துள்ளதாக மலேசிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

புகலிடக் கோரிக்கை தொடர்பாக எதிர்வரும் வருடங்களில் ஆஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்ட அகதிகள் 4 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்குவதென ஆஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகளுக்கிடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப் பட்டது.

இதன்படி ஆஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப் பட்ட அகதிகள் 4 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்குவது என்றும் மேலதிகமாக தங்கியுள்ள 800 பேரை மலேசியாவுக்கு அனுப்புவது என்றும் ஒப்பந்தத்தினூடாக தீர்மானிக்கப்பட்டது.

மலேசியாவின் உள்துறை அமைச்சர் ஹிஷாமுடீன் உசைன் மற்றும் ஆஸ்திரேலியாவின் குடிவரவு, குடியகல்வுத் துறை அமைச்சர் கிரிஸ் போவன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

மலேசியாவில் புகலிடக் கோரிக்கையை முன்வைத்து 93 ஆயிரம் அகதிகள் உள்ளதாகவும் இவர்களில் இலங்கையரும் உள்ளடங்குவதாகவும் அப்போது அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆஸ்திரேலிய, உயர்நீதிமன்றம் ஆஸ்திரேலிய அரசு மலேசியாவுடன் செய்து கொண்ட அகதிகள் தொடர்பான உடன்படிக்கை செல்லுபடியற்றது என்று அண்மையில் தீர்ப்பளித்தது.

6 : 1 என்ற பெரும்பான்மையுடன் வழங்கப்பட்ட தீர்ப்பில் தஞ்சம் கோருவோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய சட்டங்கள் மலேசியாவில் இல்லை என்று ஐ.நா. அகதிகள் நிறுவகத்தில் மலேசியா பதியப்பட்ட நாடு அல்ல என்றும் ஆஸ்திரேலிய உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## தங்க நகைகளை கடத்தியவர் கைது

சட்டவிரோதமான முறையில் சார்ஜாவிலிருந்து ஒரு கோடி ரூபாவுக்கு அதிகமான தங்க நகைகளைக் கொண்டு வந்த நபர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளதாக பிரதி சுங்கப் பணிப்பாளர் சட்டத்தரணி ராஜ்மோகன் தெரிவித்தார்.

சார்ஜாவிலிருந்து நேற்று அதிகாலை நான்கு மணிக்கு இலங்கைக்கு இந்த விமானத்தில் வந்த கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர்

### சிறுவர்களுக்கு அணிவிக்கும் பெம்பர்ஸ்களில் நகைகள் கடத்தல்

ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த சந்தேக நபரின் பயணப் பொதியிலிருந்த சிறுவர்களுக்கு அணிவிக்கும் பெம்பர்ஸ்களில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப் பட்டிருந்த நிலையிலேயே குறித்த நகைகள் மீட்கப் பட்டதாகவும் அவற்றில் தங்கச் சங்கிலிகள், மோதிரங்கள், தோடுகள் உட்பட நான்கு கிலோ வரையிலான பெருந்தொகையான நகைகள் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.



யாழ்.மத்திய கல்லூரியில் இந்த ஆண்டுக்கான மாணவர் முதல்வர்களுக்கான பதவியேற்பு அண்மையில் நடைபெற்றது. மாணவ முதல்வர்களுக்கான இலச்சினையை அணிவித்த பின்னர் அதிபர் சி.க எழில் வேந்தன் உரையாற்றுகின்றார். (த-17)

## சந்தேக நபருக்கு ஆதரவளித்த மூவர் கைது

கடனட்டை மோசடியில் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபருக்கு ஆதரவளித்த மேலும் மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

பல்பொருள் அங்காடிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் கடன் அட்டையைப் பயன்படுத்தி இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கடன் அட்டை மோசடியுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஹெந்தல, வத்தள பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

குறித்த சந்தேக நபருக்கு ஆதரவளித்த மேலும் மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொரலஸ்கமுவ பிரதேசத்தில் உள்ள பல்பொருள் அங்காடியில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு முயற்சித்த போது புலனாய்வுப் பிரிவினர் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து பத்து கடன் அட்டைகளும் இரண்டு கணினிகளும் மீட்கப் பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் குறித்த பிரதான சந்தேக நபர் கொழும்பு வங்கியொன்றிலிருந்து கடன் அட்டையைப் பயன்படுத்தி ஐந்து மில்லியன் ரூபாவை மீளப்பெற்றுக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## தாய்லாந்துக்குச் செல்ல முயன்ற இலங்கையர் கைது

மலேசியாவின் சுங்கம், குடிவரவு மற்றும் தொற்றுநோய் ஒதுக்கிடப் பிரிவில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற இலங்கை நபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மலேசிய ஊடகங்கள் நேற்றுத் தெரிவித்துள்ளன.

உள்நாட்டில் உள்ள கார் ஒன்றில் வைத்து 30 வயது மதிக்கத்தக்க இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் போலி மலேசிய கடவுச் சீட்டு இருந்ததாகவும் மலேசியா ஊடாக தாய்லாந்துக்குத் தப்பிச் செல்ல இவர் முயற்சித்ததாகவும் மலேசிய செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிலும் கண்ணும், கருத்துமாகச் செயற்படும் நாள். இதுவரை உங்களின் வீட்டுக்கு வராத உறவினர்கள் சிலர் உங்களைத் தேடி வரலாம். கஷ்டப்பட்டு முடிக்க வேண்டிய வேலை ஒன்றை சுலபமாக முடித்து ஆதாயம் பார்ப்பீர்கள். பெண்கள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்ய நேரிடலாம்.

**இடபம்:** வியக்க வைக்கும் அல்லது அதிர்ச்சியடைய வைக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். இரண்டு நாள்களாக முடியாமல் இருந்த காரியம் ஒன்று, இன்று வெற்றிகரமாக முடியும். சில பொருள்களை வாங்கி பணப்பற்றாக் குறையால் ஒருவரிடம் கடன் சொல்ல நேரிடலாம். கோபம், வேகத்தைக் குறைக்க வேண்டும். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டிய நாள். நண்பர்கள் சிலர் கேட்ட உதவிகளைச் செய்யாமல், அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். எங்காவது வெளியில் புறப்பட்டுச் செல்லும் நேரத்தில் யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். சிலரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம்.

**கடகம்:** பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று சேரலாம். உறவினர்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத் தீர்த்து வைப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். பழகிய சிலருக்காக கணிசமான பணத்தைச் செலவிடுவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

**சிங்கம்:** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள். மனதில் தோன்றியதை வெளிப்படையாகப் பேசி சொந்த பந்தங்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். இரண்டு மூன்று நாள்களாக நீடித்த குழப்பம் ஒன்றுக்கு, இன்று தீர்வு காண்பீர்கள். சிலரிடம் அவசரப்பட்டு கோபமாகப் பேசி விட்டு, பின்னர் கவலை அடைவீர்கள்.

**கன்னி:** வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் வேலை பார்க்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். நடக்காத ஒரு விடயத்தைப் பற்றி பெரிய அளவில் கற்பனை செய்வீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

**துலாம்:** வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். நீண்ட நாளைய ஆசை ஒன்று நிறைவேறலாம். உங்களின் உதவியோடு சிலர் காரியம் சாதிக்க முற்படுவர். மாமன், மைத்துனர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. சக ஊழியர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளு உண்டாகும்.

**விருச்சிகம்:** எந்த விடயத்திலும் பிடிவாதமாக இல்லாமல் பக்குவமாக நடந்து கொள்வீர்கள். நண்பர்கள் சிலரைப் பாராட்டிப் பேசியே காரியம் சாதிப்பீர்கள். பிரியமான சிலருடன் மனம் விட்டு பேசுவீர்கள். பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் முயற்சிகளுக்கு துணையாக இருப்பர்.

**தனுசு:** உங்களுக்காக மட்டுமின்றி, மற்றவர்களுக்காக எடுத்த காரியங்களிலும் குழப்பம், பிரச்சினை உருவாகலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பிடித்தமான கோயில் ஒன்றுக்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். உணவுப்பண்டங்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவிடுவீர்கள். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.

**மகரம்:** நினைத்ததற்கு மாறாக சில விடயங்கள் நடக்கலாம். சிலர் பாராட்டுவதுபோல உங்களை விமர்சிக்கலாம். தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம், தெம்பு அடையலாம். கூட்டுத் தொழில் விவகாரங்கள் அனுகூலமாக அமையும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். சிலருடன் சண்டை, சச்சரவுகளில் ஈடுபடலாம்.

**கும்பம்:** முக்கியமான வேலையாக சிலர் உங்களைத் தேடி வரலாம். சிறு விடயங்களுக்காக கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றால் நீங்கள் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். விலை உயர்ந்த பொருள்களை கவனமாகக் கையாள்வது நல்லது. உங்களுக்குப் பிடித்த ஒன்று, மற்றவர்களுக்குப் பிடிக்காமல் போகலாம்.

**மீனம்:** மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும் நாள். வரவாக வந்த பணம் ஒன்றை நண்பர் ஒருவருக்கு கடனாகத் தரலாம். பிரபலங்கள் சிலரின் சந்திப்பு நிகழும். பெரிய அளவில் பிரச்சினையாகி விடுமோ என பயந்த விடயம் ஒன்று பிசுபிசுத்துப் போகலாம். செலவுகள், கொண்டாட்டங்களிலேயே செல்லும். ஆறுதலான அனுபவங்களைச் சந்திக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாளை**

தை 12 வியாழக்கிழமை 26.01.2012
திதி: திருதியை பி.ப. 02.09 வரை
நட்சத்திரம்: சதயம் மாலை. 06.33 வரை
சுபநேரம்: 08.06 - 09.36 வரை,
ராகு காலம்: 02.06- 03 .36 வரை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 9 | | | 1 | | 2 |
| 1 | | | 2 | | | | | |
| | | 6 | 1 | 7 | | 4 | | 9 |
| | | 8 | | | 9 | | | |
| 3 | 7 | 9 | 4 | | 2 | 6 | 8 | 1 |
| | | | 3 | | | 2 | | |
| 5 | | 3 | | 2 | 7 | 9 | | |
| | | | | | 1 | | | 8 |
| 8 | | 7 | | | 3 | 5 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் ‘தனி எண்’ என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான ‘நிகோலி’ இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சீனாவில் இலங்கைக்கான மூன்றாவது தூதரகம்

சீனாவின் கொன்சு பகுதியில் புதிய இலங்கைத் தூதரக அலுவலகம் ஒன்றை அமைக்க சீனா இலங்கைக்கு அனுமதி அளித்துள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி சீனாவில் மூன்றாவது தூதரக அலுவலகத்தை திறக்கும் வாய்ப்பு இலங்கைக்குக் கிடைத்துள்ளது. இதனால் இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான நல்லுறவு, பொருளாதார உறவு மேலும் வலு வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொன்சு பகுதி தூதரகத்துக்கான தூதுவரை இலங்கை ஏற்கனவே தெரிவுசெய்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு சீனாவின் சாங்காயிலும் 2009 ஆம் ஆண்டு செங்டு பகுதியிலும் இலங்கைத் தூதரக அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் சீனாவின் பிரதான வர்த்தக தலைநகரான கொன்சு பகுதியில் மூன்றாவது இலங்கைத் தூதரக அலுவலகம் திறக்கப்படவுள்ளது.

அண்மைக்காலமாக சீனாவுடனான நட்புறவை இலங்கை பலப்படுத்தி வருகிறது. அதன் ஓர் அங்கமாகவே சீனாவின் தனது மூன்றாவது தூதரகத்தை இலங்கை அமைக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
22
Jan.2012 To June2012
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2012

# வல்லுறவுக்குட்படுத்தி குடும்பப் பெண் கொலை

வவுனியா பெரியகுளம் பிரதேசத்தில் சிவில் பாதுகாப்புப் படையணியைச் சேர்ந்த சிப்பாயொருவரின் மனைவி மீது பாலியல் வல்லுறவு புரிந்து அவரைப் கொலை செய்துள்ள சம்பவம் தொடர்பாக 15வயது இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண்மணி கடந்த 19ஆம் திகதி மாலை பெரிய உலுக்குளம் பகுதியிலுள்ள தனது வயலுக்கு நீர் பாய்ச்சுவதற்காகச் சென்றிருந்த வேளையில் சந்தேக நபர் அவர்மீது பாலியல் வல்லுறவை புரிந்து பின்னர் அவரை வயலில் உள்ள கிணற்றில்போட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வயலுக்குச் சென்ற குறித்தபெண் இரவாகியும் வீடு திரும்பாததால் அவரது கணவர் உள்ளிட்ட கிராமத்தவர்கள் அவரைத் தேடிச் சென்றபோது கடந்த 20 ஆம் திகதி வயலிலிருந்த கிணற்றில் இருந்து அவரது சடலத்தைக் கண்டெடுத்துள்ளனர்.

உலுக்குளம் நானூறு ஏக்கர் குடியிருப்பைச் சேர்ந்த விமலா ரஞ்ஜனி என்ற 29 வயதுப்பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் பொலிஸார் சம்பவம் நடந்த இடத்தைப் பரிசீலித்தவேளையில் அந்த இடத்தில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வேலிக்கதியாலொன்றை மோப்ப நாய் முகர்ந்துள்ளதோடு மோப்பம் பிடித்தவாறே அண்டையிலிருந்த வீடென்றை அடையாளம் காட்டியதாகப் பொலிஸார்தெரிவித்தனர்.

அது மேற்படி வீட்டுவேலியில் நடப்பட்டிருந்த கதியால்களுள் ஒன்றே என அறிவிக்கப்பட்டதையடுத்து அந்த வீட்டிலிருந்த 15 வயதான இளைஞரொருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து சம்பவம் தொடர்பான அனைத்துத் தகவல்களும் கிடைத்துள்ளன.

சந்தேக நபர் அப்பெண்ணின் மீது வல்லுறவு புரிந்த போது அவர் நினைவிழந்ததையடுத்து உயிரிழந்துள்ளதாகக் கருதி பெண்ணின் உடலை அருகிலிருந்த கிணற்றுள் போட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்மீது ஏற்கனவே கொள்ளைச் சமபவமொன்று தொடர்பான குற்றச்சாட்டொன்று பதியப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக செட்டிகுளம் பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ந- 22)

# சனசமூக நிலையத்துக்கு சுற்றுவேலி அமைக்க நிதியுதவி

அல்லைப்பிட்டி வாசகர் சனசமூக நிலையத்தின் சுற்றுவேலிகளை அமைப்பதற்கு தேவையான நிதியை அல்லையூர் இணையம் வழங்கியுள்ளது. அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள இந்தச் சனசமூக நிலையத்தின் நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணியை யு.என்.டி.பி நிறுவனம் மேற்கொண்டிருந்தது. எனினும் சனசமூக நிலையத்தின் சுற்றுவேலிகள் அடைக்கப்படாமல் வெளியாகக் காணப்பட்டது தற்போது அல்லையூர் இணையம் தூண்கள் பொருத்தி தகர வேலி அடைப்பதற்கான நிதியுதவியை வழங்கியதை அடுத்து அல்லைப்பிட்டி வாசகர் சனசமூகநிலையம் புதுப்பொலிவு பெறவுள்ளது. (ந-313)

After A/L (1 Year Part Time Program )
Pharmacy Assitants
தனியார் துறை வேலைவாய்ப்பிற்கும் ,வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கும் உகந்த மருத்துவ கல்வி நெறி.
மருத்துவக்கல்வியின் முன்னோடிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக...K.U-Education
■Lectures by Doctors
■Guidance from Qualified Pharmacists
■Internship Arrangements Free of Charge
ஆரம்பம் : 04/02/2012
Call for appointments only :0773164617
A/L(Any Stream : Arts/Bio/Maths/Commerce)
Knowledge Universe®
Malaysian College of Business and IT
Tel: 021-3208342 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info
இல 75,கோவில் வீதி.யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

உடனடி வேலைவாய்ப்பு
Gate way நிறுவனத்தின் நெல்லியடிக் கிளைக்கு பின்வரும் பணிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
* கணினி போதனாசிரியர் (Computer Lecturer )
* ஆங்கில போதனாசிரியர் (English Lectuter)
* அலுவலக உதவியாளர் (Office Assistant )
* கணக்கியல் உதவியாளர் (Accounts Assistant)
(நகர எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)
விண்ணப்பதாரர்கள் கல்விச் சான்றிதழ் பிரதிகளுடன் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர்
Gateway Center , Luxmi Theatre Lane,Nelliyady
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திருச்செல்வம் மேரிமாகிறேட் (செல்வம்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருச்செல் வம் மேரி மாகிறேட் (செல்வம்) நேற்று (24.01.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கபிரியேற்பிள்ளை-மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை திருச்செல்வத்தின் (காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன காசாளர்) பாசமிகு மனைவியும் G.டேவிற், S.மேரி இமேல்டா (கனடா), G. டோன் பொஸ்கோ (கனடா), காலஞ்சென்ற G. இராசசிங்கம் (மெக்கானிக்), P.மேரி பியாட்டீஸ் (புனிதம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், D.மேரி றீற்ரா செல்வராணி, S.அன்ரன் யோசவ் (கனடா), D. மலர் (கனடா), R.றஞ்சினி, காலஞ்சென்ற M. பற்றிக் இம்மனுவேல் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.01.2012) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித கதிரை மாதா தேவாலயத்துக்கு எடுத்து செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
புனித மேரி வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
திருமதி பி. மேரி பியாட்டிஸ்
(புனிதம்-சகோதரி)

(13452) (6,7,10)

## செல்வராசா இரத்தினலீலா (சந்திரா)



வீரபத்திரர் கோயிலடி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கலைமணி வீதி கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா இரத்தினலீலா (23.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்- ஞான பூங்கோதை தம்பதியினரின் அன்பு மகளும், செல்வராசாவின் அன்பு மனைவியும், குபேனியின் (யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், உயர்தர வணிகப் பிரிவு 2014) அன்புத் தாயும் நவரத்தினம் - இலிங்கேஸ்வரி (பிரான்ஸ்), கனகரத்தினம் - ரவீந்திரன், யேசுதாசன்- வசந்தலீலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

கலைமணி வீதி,
கட்டப்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்

(13449) (45-7-6)

# மரண அறிவித்தல்

## நடராசா காசிவேந்தன் (B.Com, M.A)

(முகாமைத்துவ பணிப்பாளர், சமுர்த்தி மகாசங்கம், உடுவில்)



வங்கியடி, இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா காசிவேந்தன் கடந்த (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நடராசா - பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பலோஜினியின் (முகாமையாளர், சமுர்த்தி வங்கிச் சங்கம், சுன்னாகம்), அன்புக் கணவரும், வேந்தினி, நாவேந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காசிக்குமரன் (லண்டன்), காயத்திரிதேவி (கனடா), காஞ்சனாதேவி (ஜேர்மனி), காசினிதேவி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), கௌசலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயபாரதி (லண்டன்), பத்மசிறீ (கனடா), ரவீந்திரன் (ஜேர்மனி), புஸ்பமாலினி (ஜேர்மனி), புஸ்பவதனி (ஹொலண்ட்), பாலசுப்பிரமணியம் (முகாமைத்துவ உதவியாளர், இலங்கை மின்சாரசபை), புஸ்பபாலினி (பிரதேச செயலகம், தெல்லிப்பழை), உமாசுதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சுவேதன், நமிர்தா (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும், கனோஜன், ஆருஜன் (கனடா), பிரவீகா, அபிசகா, அறிவகன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2012) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் பூவோடை இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்கியடி, இணுவில் கிழக்கு, இணுவில். (13450) (45-7-6)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும், கண்ணன் பெயின்ற் உரிமையாளருமாகிய

**கனகசபை விஜயரத்தினம்**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (C\8093) (6,7,10)

யாழ்ப்பாணம்
வணிகர் கழகம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 15.12.1936 உதிர்வு: 26.12.2011

கடந்த 26.12.2011 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வம்

**திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.12.2012) புதன்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரது இல்லத்திலும், தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்திலும் நடைபெறும். இந்த நிகழ்வில் அனைத்து அன்புள்ளங்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல.4, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். (13392)(2-7-9) - குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

மீசாலை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த வடிவேலு நீலவண்ணன் என்பவருடைய தே.அ.அ. (850982325V), சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை என்பன புத்தூர் சந்திக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 0779865711

## வாடகை

யாழ்ப்பாணம், இருபாலை டச்சு றோட்டில், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு சமீபமாக, புதிதாக புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நான்கு அறைகளையும், இணைந்த குளியலறையையும், வாகன தரிப்பிட வசதியையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 950 6880 / 077 740 5308

## தவறிவிட்டது

செலான் வங்கி கிளிநொச்சிக் கிளையில் சேவையாற்றும் இராஜசிங்கம் சதாகரன் என்பவரது தே.அ.அ. (781702560V) சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் சில முக்கிய ஆவணங்கள்அடங்கியபேர்ஸ்ஒன்று மானிப் பாயில் இருந்து சுன்னாகம் செல்லும் வழி யில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத் தவர்கள் அருகில் உள்ள செலான் வங்கிக் கிளையில் ஒப்படைத்துதவவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் பிரபலமான நிறுவனம் ஒன்றின் யாழ்ப்பாணக் கிளைக்கு மின் ஒட்டுநர் மற்றும் சுத்திகரிப்பாளர், சந்தைப் படுத்துநர் ஆகிய வேலைக்கான வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆள்கள் தேவை.

தொடர்பு: 0771941610 - காந்தன்
0774775607 - சபின்

## 1st IN Com G.A.Q யாழ்ப்பாணம் - பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

* A/L கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்றுபாடம்சித்தி அடைந்தவர்கள்விண்ணப்பிக்கத்தகுதி யுடையவர் ஆகும்.

**புதிய பிரிவுக்கான**

* விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன பதிவுகள் நடைபெறுகின்றன.

குறிப்பு: வெளி மாவட்ட மாணவர்கள் தங்கி நின்று கல்வி கற்கக் கூடிய தங்குமிட வசதி இலவசமாகச் செய்து தரப்படும்.

விவரங்களுக்கு : S. அருள் நங்கை (நிர்வாகி)
(13451) (45-9-7) புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தாய்மடியில் 15 - 12 - 1949



இறைவனடியில் 16 - 12 - 2011

அமரர் **த.நா.போஜன்**

(உதவி பிரதம சாரண ஆணையாளர்- இலங்கை முதலுதவிச் சங்க ஆணையாளர், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்- மாவட்ட ஆணையாளர்)

எமது குடும்பத்தலைவரின் அமரத்துவமடைந்த செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மற்றும் தந்தி மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (25.01.2012) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் அன்னாரின் அழைப்புக் கிடைக்கப் பெற்றவர்களும், அழைப்புக் கிடைக்காதவர்கள் தனிப்பட்ட அழைப்பாகக் கருதியும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 17, முதலியார் கனகசபை வீதி,
மானிப்பாய். (13400) (6,7,10)

உல்லாசனன் (மகன்)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கனகசபை விஜயரத்தினம்

(உரிமையாளர், கண்ணன் பெயின்ற், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)



வண்ணார்பண்ணை, ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை விஜயரத்தினம் நேற்று(24.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணகசபை - சிவக்கொழுந்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் மருமகனும் ரஞ்சினியின் (பாமா) அன்புக் கணவரும் யசோதரன் (லண்டன்), பிரபவன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும் சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம், லீலாவதி மற்றும் பஞ்சரத்தினம், அருமைநாயகம்( கொழும்பு), செல்வரத்தினம் (பிரான்ஸ்), குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகராஜா (இந்தியா), பஞ்சலிங்கம் (லண்டன்), கோணேஸ்வரி (கனடா), நித்தியானந்தன் (ஜேர்மனி), சச்சிதானந்தன் (சவுதி), சாந்தி (லண்டன்), சிவானந்தம், பரமானந்தம், லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விஜய் மகால்
பழைய தபார்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (சி-8099)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### கனகசபை விஜயரத்தினம்

(உரிமையாளர், கண்ணன் பெயின்ற் ஸ்தாபனம்)

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, கண்ணன் பெயின்ட் ஸ்தாபன உரிமையாளரான கனகசபை விஜயரத்தினம் காலமான செய்திகேட்டு மிகுந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்
சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்,
சிவகுமரன் என்டர் பிறைஸ்,
யாழ்ப்பாணம். (சி-8098)

முகாமைத்துவப் பணிப்பாளர்கள்
AKZO NOBEL PAINTS
Lanka (pvt) Ltd
199, Kew Road.
Colombo - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜேம்ஸ், காந்திஜி அணியினருக்கு கிண்ணம்

யாழ்ப்பாணம்,ஜன.25

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பெண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும் ஆண்கள் பிரிவில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.

இதில் பெண்களுக்கான இறுதி யாட்டதில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எழுவைதீவு பத்திமா விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி 9:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. (த-23)

# வென்றது சென்.ஜோன்ஸ் வி.க.



யாழ்ப்பாணம்,ஜன.25

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான குழுநிலைப் போட்டியில் ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சிக்கிரியாம் பள்ளம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் யூத் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இரு அணியினரதும் ஆட்டம் அபாரமாக இருந்தது.

சென்.ஜோன்ஸ் அணி வீரன் லக்மிலன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார்.

பதிலுக்கு சென்.அன்ரனிஸ் யூத் அணியினர் கோல் அடிப்பதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவை பயனளிக்கவில்லை. ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தமது ஆட்டத்தை வேகப்படுத்தினர். இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

இதன்போது சென்.ஜோன்ஸ் அணி வீரன் அன்ரனி பெர்ணான்டோ தனது அணிக்காக இரண்டு கோல்களை அடுத்தடுத்து அடித்தார்.

ஆட்டநேர முடிவில் சென். ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் 3:0 என்றகோல் கணக்கில் வெற்றியீட்டிச் சம்பியனானது. (த-23)

# காலிறுதி ஆட்டங்கள் நாளை வட்டுக்கோட்டையில்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 17, 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் கால் இறுதியாட்டங்கள் நாளை வியாழக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது. இறுதியாட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**17 வயதுப் பிரிவு**

* வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் இணுவில் மத்தியகல்லூரி.
* வட்டு மத்திய கல்லூரி எதிர் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம்
* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மகாஜனக் கல்லூரி
* இளவாலை புனித ஹென்றி யரசர் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

* இளவாலை புனித ஹென்றி யரசர் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
* ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி வித்தியாலயம்
* வட்டு இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி
* சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் மகாஜனக் கல்லூரி. (த-23-86)

# மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்ற வீரர்கள்

யாழ்ப்பாணம்,ஜன.25

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களில் ஆண், பெண் இரு பாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

* மன்னாகண்டல் வளர்மதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தேவதாசன் (முதலாமிடம்)
* றொட்பானா பாரதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சிவநேசன் (இரண்டாமிடம்)
* இரணப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சுரேஷன் (மூன்றாமிடம்)

**பெண்கள் பிரிவு**

* கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கேமா (முதலாமிடம்)
* தேவிபுரம் வின்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மிதுனா (இரண்டாமிடம்)
* கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜானகி (மூன்றாமிடம்). (த-23)

# பூப் பந்தாட்டம்



புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட் பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட் டுக்கழகங்களின் ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)


## மரண அறிவித்தல்

### செல்லையாபிள்ளை சண்முகராசா



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் இல.9, 6 ஆம் ஒழுங்கை, வைரவப்புளியங்குளம், வவுனியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையாபிள்ளை சண்முகராசா (23.01.2012) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாபிள்ளை தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், நாகராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தசாமி - பத்தினியம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், மகேஸ்வரி மற்றும் நடேசன், வரதராசா, கிருஷ்ணவேணி, காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் சகோதரனும், மோகனரூபன், மோகனசந்திரன், விஜயலக்சுமி ஆகியோரின் தந்தையும், குகதாஸ், உதயாந்தி, தாரணி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற கனகசபாபதி, சிவப்பிரகாசம், சிவபாதம், இரத்தினேஸ்வரி, இந்திராதேவி, மேனகா, சிவரோகிணிச்செல்வம், சண்முகநாதன், பத்மராணி, சிவயோகம் ஆகியோரின் மைத்துனரும், இராமச்சந்திரன் (இராமச்சந்திராஸ் உரிமையாளர், வவுனியா), பாலவிக்கினேஸ்வரன் ஆகியோரின் சகலனும், இந்துசன், விதுசன், தர்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2012) வியாழக் கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.09, 06 ஆம் ஒழுங்கை,
வைர்வர் கோயில் வீதி,
வைரவப்புளியங்குளம்,வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/[illegible])(2-6-7)

## வேலை ஆள்கள் உடன் தேவை

கிங்ஸ் எலெக்றோனிக்ஸ் ஸ்தாபனத்துக்கு
(I) கணினி(கொம்பியூட்டர்) பில் கிளார்க்
மற்றும்
(II) விற்பனையாளர் (Sales Rep)
உடன் தேவை.
தொடர்புகளுக்கு:
0212223857,
0776722055

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். கச்சேரி அருகில் சோமசுந்தரம் வீதியில் 55 ஆம் நம்பர் மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்புகளுக்கு: 0776393742, 021 222 6438

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளரும் சுன்னாகம் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் திருமதி புஷ்பலோஜினி காசிவேந்தனின் அன்புக் கணவர்

### நடராசா காசிவேந்தன்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

சமுர்த்தி முகாமையாளர்கள்,
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.

(சி/2925)(2-6-7)

## மரண அறிவித்தல்

### தம்பையா இராசரத்தினம்



(ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர், யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இராசரத்தினம் நேற்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், திலகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிருசாந்தினி மற்றும் ஜீவகுமார், பிறேமகுமார், பிரசாந்தினி (மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகஜனின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், பாக்கியவதி, திருப்பதி, கனகம்மா, செல்லம்மா மற்றும் ரோஸ்மலர், தங்கவேல், நல்லபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி, ஜெயராசா, காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரி, சத்திஜேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி, சிவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்

(13453) (45-7-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டுத் தாக்குகிறது ஆஸி.



''தம்பி கிளார்க்! இதைவிட்டா இளக்காரமான வேற ரீம் கிடைக்காது. அடிக்கிற சதத்தையெல்லாம் அடிச்சு முடிப்பம்''

**சதமடித்த ஆஸி. அணியின் பொண்டிங், கிளார்க்.**



## சாதனை

அடிலெய்ட்டில் நடக்கும் 4 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அணியின் ரிக்கி பொண்டிங் 13 ஆயிரம் ஓட்டங்களை கடந்து சாதனை படைத்துள்ளார்.

அடிலெய்ட் டெஸ்ட் ஆட்டத்தில் நேற்று 81 ஓட்டங்களை கடந்த போது 13 ஆயிரம் ஓட்டங்கள் எடுத்து சாதனை படைத்த 3 ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றார்.

இதற்கு முன்னர் இந்தியாவின் சச்சின் 15,432 ஓட்டங்களும், டிராவிட் 13,262 ஓட்டங்களும் எடுத்து முதல் இரண்டு இடங்களில் உள்ளனர். (ங-15)

இந்திய, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்திலும் ஆஸ்திரேலியாவின் துடுப்பாட்டத்தில் ரிக்கி பொண்டிங், மைக்கல் கிளார்க் அசத்த இந்தியாவின் பந்து வீச்சாளர்கள் திணறினர். நேற்றைய ஆட்ட நேர இறுதியில் ஆஸ்திரேலிய அணி 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 335 ஓட்டங்களைப் பெற்றது.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து இந்திய அணி விளையாடி வருகின்றது. நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 3 - 0 என்ற கணக்கில் ஏற்கனவே இழந்துள்ளது. நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் அடிலெய்ட்டில் நேற்று செவ்வாய்க் கிழமை ஆரம்பமானது. ஆஸ்திரேலிய அணியில் ஸ்ராக் நீக்கப்பட்டு சுழற் பந்து வீச்சாளர் நதன் லயன் சேர்க்கப்பட்டார். இந்திய அணியில் தடை காரணமாக டோனி நிறுத்தப்பட்டு ரிதிமன் சகாவும், வினய் குமார் நீக்கப்பட்டு அஸ்வினும் இணைக்கப்பட்டனர். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக எட் கோவன், வோர்னர் ஜோடி இறங்கியது. வழமைக்கு மாறாக வோர்னர் நிதானமாக துடுப்பெடுத்தாடினார். முதலாவது இலக்குக்காக இந்த ஜோடி சுமாரான ஆரம்பத்தையே வழங்கியது. அணி 26 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகீர் கானின் பந்து வீச்சில் வோர்னர் 8 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அடுத்து நுழைந்த மார்ஷ் 3 ஓட்டங்களுடன் அஸ்வினின் பந்தில் போல்டானார்.

அனுபவ வீரர் பொண்டிங், மார்ஷைத் தொடர்ந்து களமிறங்கினார்.



''உன் (டோனியின்) குற்றமா? என் குற்றமா? யாரை நானும் குற்றம் சொல்ல...?''

**ஷேவாக் பந்து வீசியும் பயனில்லை.**


கோவனுடன் இணைந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். இந்த ஜோடி மூன்றாவது இலக்குக்காக மிகச் சிறப்பாக ஓட்டங்களைக் குவித்தது. 53 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் மதிய போசன இடைவேளைக்கு முன்பாக கோவன் 30 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் சிக்கினார்.

இதன் பின்னர் மீண்டும் இணைந்தன ஆஸ்திரேலியாவின் பெருந் தலைகள். இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியாவுக்கு அலுப்புக் கொடுத்த பொண்டிங், அணித்தலைவர் மைக்கல் கிளார்க் இருவரும் இணைந்து இந்தியாவை மிரட்டினர்.

சீனாவின் பெருஞ் சுவரை தகர்த்தாலும் இவர்களின் இணைப்பாட்டத்தை பிரிக்க முடியாமல் இந்தியாவின் பந்து வீச்சாளர்கள் திணறினர். பொண்டிங் நிதானமாக ஆட கிளார்க் தனது வேகத்தைக் காட்டினார். புதிதாக அணித்தலைமை ஏற்ற சேவாக் இணைப்பை பிரிப்பதற்கு திண்டாடினார்.

அரைச்சதம் கடந்து இருவரும் சதம் நோக்கி பயணமாகினர். முதலில் பொண்டிங் 164 பந்துகளில் தனது 41 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். பின்னர் 133 பந்துகளில் கிளார்க் தனது 19 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். நேற்றைய ஆட்ட நேர நிறைவு வரையில் நான்காவது இலக்குக்காக பிரிக்கப்பட முடியாத இணைப்பாட்டமாக 261 ஓட்டங்களை இவர்கள் பகிர்ந்துள்ளனர். நேற்றைய நாள் முடிவில் 90 பந்து பரிமாற்றங்களை எதிர் கொண்ட ஆஸ்திரேலிய அணி 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 335 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் பொண்டிங் 137, கிளார்க் 140 ஓட்டங்களினைப் பெற்று ஆட்டமிழக்காது உள்ளனர். (ங-15)

# பெடரர் 1000



சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், (வயது -30). உலகின் மூன்றாம் நிலை வீரரான இவர், இதுவரை 16 கிராண்ட்ஸ்லாம் கிண்ணத்தை வென்றுள்ளார். நேற்று நடந்த காலிறுதியில் பெடரர், ஆர்ஜென்டினாவின் டெல் போட்ரோவை சந்தித்தார். இது சர்வதேச அளவில் பெடரர் பங்கேற்ற 1000 ஆவது போட்டி. (ங-15)

# 'கிரஹ(ம்)' மாற்றம்



இலங்கைக் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக கிரஹம் போர்ட் நியமிக்கப்படவுள்ளார். கடந்த செப்டெம்பர் மாதம் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜெவ் மார்ஷ் நீக்கப்பட்டு, புதிய பயிற்றுநராக கிரஹம் போர்ட் நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கிரஹம் போர்ட் இலங்கையை வந்தடைந்தார். 52 வயதான கிரஹம் போர்ட் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்றுநர் என்பது குறிப்பிடத்தக்கது.

1999 ஆம் ஆண்டு பொப் வுல்மருக்குப் பின்னர் தென்னாபிரிக்க அணியின் பயிற்றுநராக பதவியேற்ற அவர், 2001 ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியை வகித்தார். பின்னர் இங்கிலாந்தின் கென்ட் பிராந்திய கிரிக்கெட் இயக்குநராக 2004- முதல் 2006 ஆம் ஆண்டுவரை அந்தப் பதவியை வகித்தார்.

2007 ஆம் ஆண்டு இந்திய அணியின் பயிற்றுநராக பதவியேற்குமாறு கிரஹம் போர்ட் கோரப்பட்டபோதிலும் அதை அவர் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியின் பயிற்றுநர் பதவிக்கான வேட்பாளர்களின் பட்டியலில் இருந்து அவர் விலகினார்.

அதன்பின் தென்னாபிரிக்காவின் டேர்பனைத் தளமாகக் கொண்ட பிராந்திய அணியான [illegible] கழகத்தின் பயிற்றுநராக பதவி வகித்த அவர் கடந்த வாரம் அந்தப் பதவியிலிருந்து விலகினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ங-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்வரன் வி.க அரையிறுதிக்குத் தகுதி பெற்றது



யாழ்ப்பாணம்,ஜன.25

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர்களான சாந்தன், யூட்டன் ஞாபகார்த்த வெற்றிக் கிணத்துக்காக நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக விளையாட்டு மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்று வருகின்றது.

அதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.காலிறுதியாட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஈஸ்வரன் விளை யாட்டுக்கழக அணியினர் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றனர். (த-23)

# வெற்றிபெற்ற அணிகள்

வலி.வடக்கு ஜன 25

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம் பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:

இணுவில் மத்திய கல்லூரிக் கும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் மகாஜனாக் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இளவாலை புனி ஹென்றியரசர் கல்லூரிக்கும் அராலி இந்துக் கல்லூரிக்கும் இடையே இடம் பெற்ற போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்துக்கும் அராலி இந்துக் கல்லூரிக்கும் இடையே இடம் பெற்ற போட்டியில் ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 3:0 என்ற கொல் கணக்கில் வெற்றிபெற்றது.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்துக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் மகாஜனாக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் மாதகல் சென்யோசேப் மகா வித்தியாலயத்துக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் கோல்கள் எதனையும் இரு அணிகளும் பெறாத நிலையில் போட்டி சம நிலையில் முடிவடைந்தது.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கும் மாதகல் சென் யோசேப் மகா வித்தியாலயத்துக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் வயாவிளான் மத்திய கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்ற நிலையில் ஆட்டம் சம நிலையில் நிறைவுபெற்றது.

வெற்றி தோல்வியைத் தீர் மானிப்பதற்ககாக வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதைகளைத் தொடார்ந்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 4:3 கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. இணுவில் மத்திய கல்லூரிக்கும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்துக்கும் இடையே இடம் பெற்ற போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்துக்கும் இடையே இடம் பெற்ற போட்டி யில் புனித ஹென்றியரசர் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் இடையே இடம் பெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-86)

## ஆவரங்கால் மத்தி சம்பியன்



யாழ்ப்பாணம்ஜன25

'தேசத்தின் மகுடம்' நிகழ்வையொட்டி மாவட்ட ரீதியாக ஆண்களுக்கிடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்தஞாயிற்றுக் கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது

5 செற்களைக்கொண்ட ஆட்டத்தில் முதல் இரண்டு செற்களை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25: 22, 27, 25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று முன்னனியில் இருந்தது.

எனினும் அதன் பின்னர் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப் படுத்திய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி அடுத்த 3 செற்களை 27:20, 25:15, 15:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு 3:2 என்ற செற்களில் கிண்ணத்தை தனதாக்கியது. (த-23)

## உதைபந்தாட்டம்



யாழ்ப்பாணம், ஜன.25

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கிடையிலான அமரர் ஜே.பி.சி பிலிப் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

## வேலணை மத்தி மூன்றாமிடம்

யாழ்ப்பாணம்,ஜன.25

தீவகக் கல்வி வலய மட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

கடந்தவாரம் இடம்பெற்ற மூன்றாமிடத்துக் கான ஆட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து காரைநகர் கலாநிதி தியாகராஜா மகாவித்தியாலய அணி மோதிக்கொண்டது.

அதில் வேலணை மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தைத் தனதாக்கிக்கொண்டது. (த-23)


## கண்ணீர் அஞ்சலி

காங்கேசன்துறை, நடேஸ்வராக் கல்லூரியின் புகழ் பூத்த பௌதிகவியல் ஆசிரியரும் கல்லூரியின் கலங்கரை விளக்கமென, பூரண சேவைக் காலத்தையும் அர்ப்பணித்து அளப்பரிய சேவையாற்றி மாணவர் மனங்களில் தெய்வமென அமர்ந்தவருமான எங்கள் அன்புக்குரிய



மணியம் மாஸ்டரின்

ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்.

நடேஸ்வராவின் பழைய மாணவர்களும் ஏனைய அலுவலர்களும்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா ஐயம்பிள்ளை



காரைநகர் சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பழைய கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா ஐயம்பிள்ளை 24.01.2012 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா பொன்னம்பலம் தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை (26.01.2012) காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய கண்டி,
காரைநகர்.

தகவல்
குடும்பத்தினர்


## சிங்கப்பூர் லயன்ஸுக்கு தொடர் வெற்றிகள்



மலேசியன் சூப்பர் லீக் போட்டியில் பங்கேற்றுள்ள சிங்கப்பூர் லயன்ஸ் அணி தொடர் வெற்றியைப் பெற்று வருகிறது.

மலேசியன் சூப்பர் லீக் போட்டியில் சிங்கப்பூரை சேர்ந்த லயன்ஸ் அணி முதல் முறையாக இந்த வருடம் பங்கேற்றுள்ளது. முதல் போட்டியில் கேலன்டான் அணியிடம் தோல்வி கண்ட சிங்கப்பூர் லயன்ஸ், தற்போது படிப்படியாக வெற்றிகளை குவிக்கத் தொடங்கியுள்ளது.கடந்த 17ஆம் திகதி நடந்த ஆட்டத்தில் கோலாலம்பூர் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி முதல் வெற்றியை பெற்ற சிங்கப்பூர் லயன்ஸ் அணி கடந்த 21ஆம் திகதி சபா அணியை எதிர்கொண்டது.

மலேசியாவில் உள்ள கோட கின்னப் பலு என்ற இடத்தில் லீகாஸ் ஸ்டேடியத்தில் 12 ஆயிரம் ரசிகர்கள் முன்னிலையில் இந்தப் போட்டி நடந்தது.ஆட்டம் தொடங்கிய 20வது நிமிடத்தில் சிங்கப்பூர் லயன்ஸ் கோல் அடித்தது.சுலைமான் அடித்த ப்ரீ கிக்கை தலையால் முட்டி கோலாக மாற்றினார் ஹாரீஸ் ஹாரூன்.இந்த ஆட்டத்தில் விழுந்த ஒரே கோல் இதுதான்.இதன் மூலம் சிங்கப்பூர் லயன்ஸ் வெற்றி பெற்றது. ஆட்டத்தின் 34வது நிமிடத்தில் சிங்கப்பூர் வீரர் இர்வான் ஷா, சாபா அணி வீரர் பெலாங்க் ஆகியோர் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர்.இதையடுத்து இரண்டு வீரர்களும் சிவப்பு அட்டைக் காட்டப்பட்டு களத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

மலேசியன் சூப்பர் லீக்கில் 4 ஆட்டங்களில் விளையாடியுள்ள லயன்ஸ் 2 வெற்றி ஒரு சமநிலை மற்றும் ஒரு தோல்வியுடன் 7 [illegible] எதிர்வரும் 28ஆம் திகதி சிங்கப்பூர் லயன்ஸ் தெராங்குன்னு அணியை எதிர்கொள்கிறது.


## நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபையின் விசேட தாக சாந்தி நிலையம்



அம்பிகை அடியார்களே!

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோயில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29.01.2012 ஆம் திகதி இனிதே நடைபெற அம்பாளின் திருவருள் கைகூடி நிற்கின்றது. இத்திருநாள்களில் அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களின் நன்மை கருதி ஆலய அறங்காவலர் சபையின் வேண்டுதலின் பெயரில் நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபையினரான நாம் இன்று தொடக்கம் கும்பாபிஷேகம் வரை [25.01.2012- 29.01.2012] குடிதண்ணீர், குளிர்பானம், கோப்பி வழங்கத் தீர்மானித்துள்ளோம் என்பதை மகிழ்வுடன் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

முக்கிய குறிப்பு- ஆலய முகப்பில் இயங்கி வந்த எமது நிலையம் இட நெருக்கடி காரணமாக தற்காலிகமாக இந்த முறை ஆலய தெற்கு நுழைவாயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளதென்பதை அம்பிகையின் அடியாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்-
நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபை நிர்வாகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் கடமை புரியும் முத்துக்குமாரு கதிரவேலு [காந்தி] அவர்களின் அன்புச் சகோதரன்



### முத்துக்குமாரு சுப்பிரமணியம்

[ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி] அவர்கள் [24.01 .2012] செவ்வாய்க்கிழமை சிவபத மடைந்த செய்தி கேட்டு துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

நிர்வாகப் பணிப்பாளரும் பணியாளர்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13+ போலி எனத் தெரிந்தும் இந்தியா மௌனம் காக்கிறது

## நவசமசமாஜக்கட்சி குற்றச்சாட்டு

**மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டபின்னரே செனட்சபை அமைக்கப்படவேண்டும். அமெரிக்காவிலும் இந்த முறையே உள்ளது.**

கொழும்பு, ஜன.25

ஜனாதிபதி மஹிந்தவின் உறுதிமொழிகள் போலியானவை என்பது இந்தியாவிற்கு நன்கு தெரியும். இந்த உண்மையை உலகிற்கு அம்பலப்படுத்தினால் நுரைச்சோலை, சம்பூர் உள்ளிட்ட முக்கியமான சில திட்டங்களை இழந்துவிடுவோம் என்ற அச்சத்தால் பாரதம் மௌனியாகிவிட்டது - இவ்வாறு நவசமசமாஜக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டபின்னரே செனட்சபை அமைக்கப்படவேண்டும். அமெரிக்காவில் இந்த விதிமுறைகளுக்கமையத்தான் செனட்சபை அமைக்கப்பட்டுள்ளது என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஜாதிக ஹெல உறுமயவே ஆட்டிப்படைக்கின்றது என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

உத்தேச செனட்சபை உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் 'உதயனுக்குக்' கருத்துத் தெரிவிக்கும்போதே நவசமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளரும் கல்கிஸை - தெஹிவளை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தேசிய இனப்பிரச்சினைக்கு என்ன செய்கின்றோம், எப்படிச்செய்கின்றோம் என் எதுவும் புரியாமல் குடிகாரனைப்போல் தள்ளாடுகிறது அரசு.

13 + என்கின்றனர். இல்லை ....இல்லை... செனட்சபை என்கின்றனர். எதனை நாம் நம்புவது?

மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னரே செனட்சபை அமைக்கப்படவேண்டும். இந்த நடைமுறையையே அமெரிக்காவும் பின்பற்றியது.

இவ்வாறு இல்லாமல் ஆரம்பமே செனட்சபையாக இருந்தால் அதனால் ஒன்றையும் சாதித்துவிட முடியாது என்பதே யதார்த்த பூர்வமான உண்மையாகும்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்போம் என்ற உணர்வு அரசிடம் எள்ளளவேனும் இல்லை. அரசியல் பிழைப்பு நடத்துவதற்கே தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி காலத்தைப் போக்குகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜாதிகஹெல உறுமயவின் தாளத்திற்கு ஆடும் ஒரு கைப்பொம்மையாகவே செயற்படுகின்றார். ஜாதிக ஹெல உறுமய நாட்டின் தலைவரை ஆட்டிப் படைக்கின்றது எனக் கூறினாலும் மிகையாகாது.

ஜனாதிபதி மஹிந்த பொய் உறுதிமொழிகளை அள்ளி வீசுகின்றார். இது இந்தியாவிற்கும் நன்கு தெரியும். இந்த உண்மையை வெளியே கூறினால் இந்திய அரசின் கனவாகவிருக்கும் நுரைச்சோலை, சம்பூர் உட்பட முக்கியமான சில திட்டங்களை இழக்கநேரிடும் என்ற அச்சம் அந்த நாட்டை ஊமையாக்கி விட்டது - என்றார். (ங-சி)

# பதுங்கியிருந்த சிப்பாய் பிடிபட்டார் மக்களிடம்

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.நகர் வைமன் வீதியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்தார் இராணுவச் சிப்பாய் ஒருவர். அவரை மடக்கிப் பிடித்தனர் பொதுமக்கள். பின்னர் அவர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

தகவல் அறிந்து பொலிஸ் நிலையத்துக்கு விரைந்தனர் விசேட பாதுகாப்புப் படையினர். அவரைத் தாங்கள் விசாரிப்பதாகக் கூறி அழைத்துச் சென்றனர். கடந்த சில தினங்களுக்கு முன் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. மாலை 6 மணியளவில் சிவில் உடையில் குறித்த நபர் வைமன் வீதியிலுள்ள வீட்டு வளவினுள் புகுந்து பதுங்கிக் கொண்டார். பின்னர் அந்த வீட்டின் கதவினூடாக அடிக்கடி உள்ளே எட்டி எட்டிப் பார்த்தபடி இருந்துள்ளார். நேரம்செல்ல வீட்டின் கதவு மூடப்பட்டு விட்டது. இரவாகிவிட்டதனால் வீட்டார் உள்ளே இருக்கின்றனர். வெளியே வரவில்லை.

அந்த நபரின் நடவடிக்கைகளை அவதானித்த அயல் வீட்டுக்காரர் அவரை தொடர்ந்து நோட்டமிட்டார். அவர் திருட்டு முயற்சிக்காகக் காத்திருக்கிறார் என்பது தெரியவரவே அவரை மடக்க அண்மித்த போது அந்த நபர் தப்பி வீதிவழியே தலைதெறிக்க ஓடினார்.

இது குறித்து அப்பகுதி இளைஞர்களுக்கு ஏற்கனவே தகவல் வழங்கப்பட்டிருந்தது. அதை அடுத்து அனைவரும் வீதிகளைச் சுற்றிவளைத்தனர். சிக்கிக் கொண்டார் அந்த நபர். அப்பொழுது அந்த நபர் தான் இராணுவச் சிப்பாய் என்று கூறி மன்றாடிக் கொண்டார்.

இதுபற்றி யாழ். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சிவில் உடையில் நின்றிருந்த அந்த இராணுவச் சிப்பாயைக் கைது செய்து கூட்டிச்சென்றனர். இதுபற்றி அறிந்துகொண்ட விசேட பாதுகாப்புப் படையினர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அவரைத் தாம் விசாரிப்பதாகக் கூறினர். பொலிஸாரும் அவரை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். (ஒ-4)


## தசாக கிருஹயஜ்ஞ அழைப்பு

நிகழும் கர வருஷம் தை மாதம் 2ஆம் நாள் (16.01.2012) திங்கட்கிழமை அமரத்துவமெய்திய எங்கள் குடும்ப தீபம் அமரர் ஸ்ரீமதி நித்தியானந்த சர்மா சரோஜா அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தை 11ம் நாள் (25.01.2012) புதன் மு.ப 10.00 மணி - தசாகம்
தை 12ம் நாள் (26.01.2012) வியாழன் மு.ப 9.00 மணி - ஏகோதிஷ்டம், மாசிகம்.
தை 13ம் நாள் (27.01.2012) வெள்ளி மு.ப 10.00 மணி - சபிண்டீகரணம்
தை 14ம் நாள் (28.01.2012) சனி மதியம் 12.00 மணி - கிருஹயஜ்ஞம். (சமாராதனை)
(29.01.2012) ஞாயிறு மதியம் 12 மணி - ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும்.

இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் தந்தவர்களுக்கும் இன்னும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

சிவஞானப்பிள்ளையார்,
கோயிலடி, சங்குவேலி.
(1345) (6,7,10)
குடும்பத்தினர்
0776279395


# மோசடிக் குற்றச்சாட்டுக்களில் கைதான பெண் உட்பட ஐவர் சிறைக்கூண்டில்

## 106 இலட்சம் ரூபாவை ஏமாற்றியதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.25

வெவ்வேறு வழிகளில் 106 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண் ஒருவர் உட்பட ஐந்து பேரை யாழ். விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் ஒரே குழுவினர் அல்லர். வெவ்வேறானவர்கள்.

சந்தேக நபர்களை பொலிஸார் யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். நீதிமன்றில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தவர்களும் இவர்களில் அடங்குவர். யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறைக்குள் தள்ளப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வெவ்வேறு காலப்பகுதிகளில் இவர்கள் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். அதிக தொகையாக 70 லட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் இக்மன்ட்ராஜ் என்பவர் கைதுசெய்யப்பட்டார். இவர் யாழ். நகரிலுள்ள இரும்புப் பொருள்கள் வியாபார நிலையம் ஒன்றில்50லட்சம்ரூபாவுக்குப்பொருள்களைக் கொள்வனவு செய்து 50 லட்சம் ரூபா பெறுமதியான போலிக் காசோலைகளை வழங்கியுள்ளார்.பிறிதொரு இரும்புப் பொருள் விற்பனை நிலையம் ஒன்றில் இருந்தும் 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்துவிட்டு அதற்குரிய பணத்தைச் செலுத்தாது தலைமறைவாகி விட்டார். இவை தொடர்பாக யாழ். விசேட குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதை அடுத்து தேடப்படும் நபராக இவர் அடையாளப் படுத்தப்பட்டார். இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அதேபோன்று யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டவரான பெண் ஒருவர் காணி ஒன்றை விலைக்கு வாங்கிவிட்ட அதற்குரிய தொகையாக 19 லட்சத்த 97 ஆயிரம் ரூபாவைச் செலுத்தாமல் கம்பிநீட்டி விட்டார். இவர் பின்னர் கொழும்பில் வைத்து கைதுசெய்யப்பட்டார். சாவகச்சேரியைச் சேர்ந்த மற்றைய நபர் சாவகச்சேரியிலுள்ள நகைக் கடை ஒன்றில் 7 லட்சத்து 63 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்வனவு செய்துவிட்டு பணம் செலுத்தாது ஏமாற்றி விட்டார். அவரும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். கொழும்பு கொட்டாஞ்சேனை மற்றும் நிட்டம்புவ ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவர் பயணிகள் பஸ் ஒன்றின் பாதை அனுமதிப் பத்திரத்தை ஒருவரிடம் பெற்றுவிட்டு அதற்குரிய 9 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச் சாட்டில் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஐவரும் இவ்வாறான பணமோசடிகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் தற்போது கூண்டுக்குள்.

பாதிக்கப்பட்டவர்கள் இவை தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

(ஒ-4)


## மரண அறிவித்தல்கள்

### இராசையா தர்மலிங்கம்



பலாலி, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா தர்மலிங்கம் நேற்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குலத்துங்கம் மற்றும் பூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் சிவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் கௌரீஷன் (பிரான்ஸ்), கௌசலா, கௌசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா, புனிதவதி, யோகேஸ்வரன் ஆகியோரின் நேசமிகு சகோதரனும் நாகேஸ்வரி, நாகேந்திரன், வில்வராசா, வீரசிங்கம் (பிரான்ஸ்), ஈஸ்வரி, லோகிதராசா, லோகேஸ்வரி (சுவிஸ்), ஆனந்தராசா, அரசரத்தினம் (சுவிஸ்), பாகீஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.01.2012) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்திய சன சமூக நிலைய வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
தகவல்
குடும்பத்தினர்

### நாகர் கிருஸ்ணர்



சங்கானை நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் கிருஸ்ணர் நேற்று (24.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.01.2012) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிற்சாமம், சங்கானை.
தகவல்: குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

சோடா போத்தல்களை வாகனங்களில் ஏற்றி இறக்குவதற்கு வேலையாள்கள் தேவை

தொடர்புகளுக்கு:
021 2225595
077 2105286.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி இம்மானுவேல் அவர்களின் அன்பு தாயான

திருமதி கரோல்ட்ராணி றெஜினா

அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

கண்ணன் பெயின்ற் ஹவுஸ் உரிமையாளர்

க.விஜயரத்தினம்

(ஞானம்)



அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கந்தவேலன் றேடர்ஸ்
(வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
(MULTILAC PAINTS)

உரிமையாளர்களும்
பணியாளர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றம் பற்றி ஆராய ஜனாதிபதி செயலணி வருகிறது

1 »

கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:-

உள்ளூரில் இடம்பெயர்ந்து 20 வருடங்களுக்கு மேலாக நலன்புரி நிலையங்களில் பொதுமக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் அந்த மக்களுக்கு குறித்த நலன்புரி நிலையக் காணிகளை சுவீகரித்து வழங்க வேண்டும் என்று மீள்குடியேற்றத்துக்கான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதற்குச் சில பிரதேச செயலாளர்கள், நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள காணிகள் தனியாருக்குரியவை. எனவே அவர்கள் தமது காணிகளை கேட்கின்றனர் என்று தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த திவாரட்ண, மீள்குடியேற்றத்துக்கான ஜனாதிபதி செயலணி நிலைமைகளை நேரில் ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் என்று தெரிவித்தார்.

மேலும் மீள்குடியமர்ந்த மக்களுக்கான உதவிப் பொருள்கள் உரிய வகையில் சென்றடைய வேண்டும். இந்திய அரசின் உதவியில் வழங்கப்படும் சைக்கிள்களுக்கான பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் போது பிரதேச செயலர்கள் எந்தவித அழுத்தங்களுக்கும் பயப்படாமல் தெரிவுசெய்ய வேண்டும். அதேபோன்று இந்திய வீட்டுத்திட்டத்துக்குரிய பயனாளிகளும் சரியான முறையில் தெரிவு செய்யப்பட வேண்டும்.

அத்துடன் சகல மாவட்டங்களிலும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களின் புள்ளி விவரங்கள் சரியாகப் பேணப்பட வேண்டும். இடம்பெயர்ந்து செல்லும் போது ஒரு குடும்பமாக இருந்தவர்கள் தற்போது பல குடும்பங்களாகியிருப்பர். அவர்களைப் பதிவு செய்யும் போது முன்னர் ஒரு குடும்பம் இருந்தால் தற்போது எத்தனை குடும்பமாகியிருந்தாலும் ஒரு குடும்பமாகவே பதிவு செய்ய வேண்டும் - என்று மீளக்குடியேற்றத்துக்கான ஜனாதிபதி செயலணி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஆனால் அவ்வாறு கணக்கிட முடியாது. மனித பிரச்சினையாக கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இருப்பினும் உதவித் திட்டங்களில் அவர்களை முன்னுரிமைப்படுத்தாமல் விடலாம் என்றுதிவாரட்ண தெரிவித்தார்.

இந்த 2012 ஆம் ஆண்டு முடிவுக்குள் மீள்குடியமர்வு பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(த-15)

## விளக்க மறியல்

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பகுதியில் 50 மில்லிகிராம் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட நபரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் பே. சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவரை நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

இதேவேளை கடந்த சில மாதங்களாக கஞ்சா போன்ற போதைப்பொருள்களை வைத்திருந்த பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ங-10-6)

## சம்பந்தன் – கோத்தபாய கைதிகள் பற்றிப் பேச்சு

1 »

பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்து விரிவாக விளக்கினார்.

சம்பந்தனின் நியாயத்தை ஏற்ற பாதுகாப் புச் செயலர், உடனடியாகப் பொலிஸார் மற்றும் மேலதிக் துருப்புகளை சிறைச்சாலைக்கு அனுப்புவதாகத் தெரிவித்தார். அத்துடன், தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்புச் செயலர் இதன்போது உறுதிமொழி வழங்கியுள்ளார்.

இந்தத் தொலைபேசி உரையாடலின் அடிப்படையில் நேற்று பிற்பகலில் சுமார் 180இற்கும் மேற்பட்ட தமிழ்க் கைதிகள் சிறைச்சாலையின் பாதுகாப்பு மிகுந்த ஒரு தனிப்பிரிவுக்கு மாற்றப்பட்டதாக அறிய முடிந்தது. (ங-சி)

# போர்க்களமானது மகஸின்!

»

இருக்கின்றது என கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சிறைச்சாலை பொறுப்பதிகாரியின் நடவடிக்கைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிங்களக் கைதிகள், சிறைச்சாலைக்குள் உள்ள அலுவலகங்களை தீமூட்டிக் கொளுத்தியதுடன், அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு கடுந்தொனியில் மரண அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகளை நோக்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் கல், பொல்லுகளைச் சரமாரியாக வீசி அவர்களைத் தாக்க முற்பட்டதால் அங்கு நிலவிய பதற்றநிலைமை மேலும் மோசமடைந்தது.

பதற்றநிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக அங்கு இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். இராணுவத்தினருடன் இணைந்து பொலிஸார் அதிரடியான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. இதனால் நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வானத்தை நோக்கிப் படையினர்துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

அப்போதும்,நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வராததால் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் கைதிகள் சிலர் மயக்கமுற்றனர் எனவும், அதில் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் உள்ளடங்கியிருந்தனர் என்றும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சினிமா பாணியில் நேற்று அரங்கேறிய இந்தப் பயங்கரமான மோதல் சம்பவத்தால் மகஸின் சிறைச்சாலையை அண்டியுள்ள பிரதேசங்களில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது. அத்துடன், தூர இடங்களிலிருந்து கைதிகளைப் பார்வையிடுவதற்கு வந்த உறவினர்களும் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்க நேரிட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்த மறுகணமே அசுரவேகத்தில் செயற்பட ஆரம்பித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள், தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு-

நியூமகஸின் சிறைச்சாலைக்கு அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி எம்.எல்.ரஞ்சனை உடனடியாக இடம்மாற்றம் செய்யக்கோரி சுமார் ஆயிரத்து 800 சிங்களக் கைதிகள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிறைச்சாலை பொறுப்பதிகாரி கைதிகளுடன் கடும்போக்கில் நடந்துகொள்வதைக் கண்டிக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என கைதிகள் கூறியுள்ளனர்.

மகஸின் சிறைச்சாலையை மேற்பார்வை செய்யும் நோக்கில் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கொடிப்பிலி உள்ளிட்ட உயர்மட்ட குழுவினர் அங்கு சென்றுள்ளனர். இவர்களிடம் தங்களது பிரச்சினைகளைத் தெரிவிக்கும் முகமாகவே கைதிகள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் கூறப்பூடுகின்றது.

சிறைச்சாலை உயர்மட்டக் குழுவினர் கைதிகளின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்க தவறியதன் காரணமாக அதிகாரிகளைத் தாக்குவதற்கு அவர்கள் முயற்சித்துள்ளனர். இதனால் அங்கு பெரும் கலவரம் ஏற்பட்டது.

கலவரத்தில் ஈடுபட்ட கைதிகள் சிறைச்சாலைக்குள் உள்ள அலுவலகங்களை தீ மூட்டிக்கொளுத்தியதால் அங்கிருந்த முக்கியமான பல ஆவணங்கள் தீக்கிரையாகியுள்ளன. சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தங்களுக்கு ஆதரவு வழங்குமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகளுடன் சிங்களக் கைதிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், அவர்களுக்கு மரண அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர்.

'கொட்டியா, கொட்டியா' எனக் கூக்குரலிட்டு கடும்தொனியிலான சொற்பதங்களைப் பிரயோகித்துள்ளனர். இதனால் தங்களுக்கு மரண பயம் ஏற்பட்டுள்ளது என தமிழ் அரசியல் கைதிகள் தெரிவிக்கின்றனர்.

சிங்களக் கைதிகள் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வருவதைத் தடுப்பதற்காக, மகஸின் சிறைச்சாலையில் புதிதாக நியமிக்கப்பட்ட சிறைச்சாலை அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மகஸின் சிறையிலுள்ள சிங்களக் கைதிகள் சிறைச்சாலை அதிகாரிக்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாகவே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது எனக் கூறப்படுகிறது. (ங-சி)

# ஓயவில்லை பிரிவினைவாதிகள்

1 »

சூடானில் தற்போது காணக்கூடியதாக உள்ளது. இது போன்ற அவலநிலை நம் நாட்டிற்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் போர் இடம்பெற்ற காலத்தில் எம் மனதையும் ஆட்டிப்படைத்தது.

போர் நடந்தபோது வடக்கு மக்கள் கொழும்பையும், அதனை அண்டிய பகுதிகளிலும் குடியேறினார்கள். சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள்.

தற்போது தீவிரவாதம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்வதற்கு அதிக நாட்டம் கொண்டுள்ளனர். இந்நிலையில், சிங்கள மக்கள் கொழும்பில் மீள்குடியேறுவதற்கு அதிக அக்கறை செலுத்திவருகின்றனர்.

யுத்த காலத்தில் கேள்விக்குறியாக இருந்த நாட்டின் எதிர்காலம் தற்போது ஒளிமயமான பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது - என்றார் அவர்.

மேலும் ஒரு நாடு இயற்கை வளங்களால் நிறைவுபெற்று மனிதவளம் இல்லாவிட்டால், அதில் எதுவித பயனுமில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நைஜீரியாவில் எண்ணெய் மற்றும் எரிவாயு முதலான வளங்கள் நிறைந்திருக்கின்றன. ஆனால், அங்குள்ள மக்கள் ஒருவரை ஒருவர் தாக்கி அழித்து, கொலைவெறித்தனத்துடன் கொடூரமாகச் செயற்பட்டு வருகின்றமையால், மனித வளங்கள் அழிந்துவருகின்றன. இதனால் வளங்கள் இருந்தும் அந்த நாட்டுக்கு எந்தவித பயனும் இல்லை.

ஒரு நாட்டின் மனித வளத்தைப் பாதுகாக்கவேண்டுமானால், அவர்கள் சுதந்திரமாக வசிப்பதற்கான வாழ்விடத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும். சுதந்திரமான வாழ்விடம் இல்லை என்றால் பாடசாலை செல்லும் சிறுபிள்ளைகள் உளவியல் ரீதியான பாதிப்பிற்கு உள்ளாகின்றார்கள்.

இதனால், நாட்டின் எதிர்காலத் தலைவர்கள் முளையிலேயே கிள்ளி எறியப்படுவார்கள். இவற்றைக் கருத்திற்கொண்டே 10 இலட்சம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவ்வீடமைப்புத் திட்டத்திற்காக 700 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், நிர்மாணப் பணிகள் யாவும் இன்னும் ஒன்றரை வருடத்திற்குள் நிறைவுபெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சீனாவிடமிருந்து திபெத்தை பிரித்து தனியாட்சி புரிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், சீனா இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. சீனத் தலைநகர் பீஜிங்கிலிருந்து திபெத்திற்கு அதிவேக ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் சீனாவுக்கும், திபெத்துக்கும் இடையிலான உறவு வலுப்பெற்றது.

அதனால், நாட்டைப் பிளவுபடுத்தும் எண்ணத்தோடு எவராவது இருந்தால், வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு உதவியளித்து நாட்டைப் பிளவுபடுத்தாமல் அபிவிருத்தி செய்வதற்கு முன்வருமாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ கேட்டுக் கொண்டுள்ளார்.

(ங-சி)

# தமிழருக்கு நீதிவழங்க தவறியுள்ளது இலங்கை

1 »

பாதுகாத்து வருகிறது. மேலும், ஊடகங்கள் மற்றும் குடியியல் சமூகக்குழுக்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன.வடக்கு, கிழக்கில் காணிகள் அபகரிப்பு மற்றும் பாதுகாப்பின்மை பற்றி எழுப்பப்பட்ட பெருமளவு முறைப்பாடுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட - நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை டிசெம்பரில் வெளியிடப்பட்டபோதும், போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற இரத்தம் தோய்ந்த நடத்தைகள் பற்றிய குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கை இராணுவத்தை அது விடுவித்துள்ளது.

2011இல் பொறுப்புக்கூறுதல் மிகமுக்கிய பிரச்சினையாக இருந்ததுடன் ஊடகங்கள் மீதான தணிக்கை அதிகரித்தது, நீண்டகாலமாக இருந்து வந்த குறைகள் எவற்றுக்கும் தீவிரமாகப் பதிலளிக்கப்படவில்லை.

நீதியற்ற, பலவீனமாக [illegible] கரிப்பை, ஊடகத் தணிக்கையை இலங்கையர்கள், ஆட்சியாளர்களிடம் இருந்து எதிர்கொண்டனர்.

இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை போர் மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளில் இருந்து அரச படைகளை விடுவித்துள்ளதுடன், மேலதிக பொறுப்புக்கூறுதல் பற்றிய எந்த உறுதியான அடியையும் எடுத்து வைக்கவில்லை.

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையில் இலங்கை அரச படைகளின் மீறல்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து இந்த அறிக்கையில் எதையும் காணவில்லை. சுதந்திரமாக கருத்துகளை வெளியிடுவோர் மீதான தாக்குதல்கள் 2011 இலும் தொடர்ந்தன.

### உதயன் செய்தி ஆசிரியர் மீதான தாக்குதல் தீவிரவாதச்செயல்

உதயன் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்டது, நெதர்லாந்து வானொலி ஊடகவியலாளர்கள் இலங்கைப் பொலிஸாரால் துன்புறுத்தப்பட்ட பின்னர் வெள்ளை வானில் வந்தோரால் தாக்கப்பட்டது, அவர்களின் பொருள்கள் கொள்ளையிடப்பட்டது, மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவர் யாழ்ப்பாணத்தில் காணாமற் போனது என்பனவற்றை தீவிரவாத செயல்களாகவே மனித உரிமைகள் கண்காணிப்பகம் பட்டியலிடப்படுகிறது.இணையத்தளங்களை பதிவு செய்ய இலங்கை அரசு விடுத்த உத்தரவை கருத்து சுதந்திரத்தின் மீதான அடக்குமுறையாக இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்துக்கான அர்த்தமுள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக இலங்கை அரசு கூறினாலும், அதற்கான ஆதாரங்கள் சிறியளவிலேயே உள்ளன எனவும் நல்லிணக்க முயற்சிகள் முடிவடைந்த வரையில் தாமதப்படுத்தப்படுகின்றன எனவும் அது கூறியுள்ளது.

பூசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர உறுப்பினர்களான 1000 முன்னாள் போராளிகளின் நிலைமை என்னவென்று தெரியாத நிலை உள்ளது எனவும், தடுப்பிலுள்ளோர் சித்திரவதை செய்யப்படுவது மற்றும் தவறாக நடத்தப்படுவது பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்து எந்த விசாரணைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது. (உ-சி)

## தனி ஈழத்தைத் தாரைவார்க்கத் தயாராக வேண்டும் அரசு

1 »

தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பொலிஸ், காணி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படும் என அரசு இன்னும் உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை.

இனவாதக் கோரிக்கைகளான பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதற்கு அரசு இணங்குமானால், தமிழர்களுக்குத் தனி ஈழத்தை வழங்குவதற்குத் தயாராகவேண்டும். மேற்கூறப்பட்ட அதிகாரங்களை வழங்கினால் அது தனிஈழத்தைத் தாரைவார்ப்பது போலாகிவிடும் - என்றார்.

(ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**G.A.Q. & B.A.**
(யாழ்ப்பாணம், பேராதனை)

**தமிழ்**
சிவலிங்கராஜா
(இளைப்பாறிய தமிழ்த்துறைப் பேராசிரியர்)
T. ஜீவானந்தன் (B.A. Hons)

**பொருளியல்**
வரதராஜன்
(முன்னாள் விரிவுரையாளர்)

**மெய்யியல்**
S.S. மனோகரன்

**வரலாறு**
S.K. கமலநாதன் (MA Hist)
விக்கி (BA Hist Hons)

**அரசியல்**
சுகாஸ் (L.L.B)

**இந்துநாகரீகம்**
கே.எஸ். ரமணன் (B.A. Hons)

**அடிப்படைப் புள்ளிவிவரவியல்**
த. தவசேகர் (B.sc)

**புவியியல்**
S. குமரன் (B.A.)

காலை 8.00 ஆரம்பம் ஜனவரி 28

**BEACON**
(பட்டப்படிப்புகள் பிரிவு)
(வெலிங்டன் சந்தி)

# இலங்கை - இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க தலா 3 நாள்கள்

1 »

களைச் சந்தித்து உரையாடினார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்ற இந்தச்சந்திப்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தேன். இதன்போது நாம் மூன்று பிரதான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினோம்.

மொழிப்பரிமாற்றம், 13+ மற்றும் இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை ஆகியனவே அந்த மூன்று விடயங்களுமாகும்.

மொழிப்பரிமாற்றம் மிகவும் அவசியமானதொரு விடயம் என்பதை இலங்கை ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினேன். சகல இன மக்களும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை அறிந்துகொள்வது அவசியமாகும். இது பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் என்று நான் நம்புகின்றேன். மும்மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுமாயின் அடுத்த 15 வருடங்களில் இலங்கையில் பெரும் மாற்றம் ஏற்படும்.

மும்மொழிக் கொள்கை தொடர்பான பாடத்திட்டமொன்றைப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடினேன்.

மீனவர் பிரச்சினைக்கு சமரசம் ஏற்படும் விதத்தில் இரண்டு யோசனைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளேன். இது புதியதோர் யோசனையாகும்.

வாரத்தில் 6 தினங்களை எடுத்துக்கொண்டு அதில் மூன்று நாள்களை இலங்கை மீனவர்கள் மீன்பிடிப்பதற்கும், மற்றைய 3 நாள்களில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கும் வழங்கும் பட்சத்தில் இரு தரப்பு மீனவர்களுக்குமிடையிலான மோதலைத் தவிர்த்துக்கொள்ள முடியும். மிகுதி ஒரு நாளை விடுமுறையாக வழங்குதல் என்பது எனது முதலாவது யோசனை.

ஆழ்கடல் மீன்பிடியின்போது பெறப்படும் மீன்களை அங்கிருந்தவாறே பொதிசெய்து அதற்கடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பது எனது இரண்டாவது யோசனையாகும் என்று அப்துல் கலாம் குறிப்பிட்டார்.

இந்திய வெளிநாட்டமைச்சர் கிருஷ்ணாவின் இலங்கை விஜயத்தின்போது விஞ்ஞான தொழில்நுட்ப கல்வி தொடர்பில் இருதரப்பு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் பல்வேறு புலமைப்பரிசில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் இருநாடுகளினதும் ஆசிரியர்களும், மாணவர்களும் சிறந்த பயன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அத்துடன், ஆசிரியர் மற்றும் மாணவர் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கான வழிவகைகளும் இதில் உள்ளடங்குவதாகவும் இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் சுட்டிக்காட்டினார்.

(ஒ-சி)

**ஆஸ்திரேலியா குடும்ப விசா**
குடும்பமாக ஆஸ்திரேலியா செல்ல 5 வருட விசாவிற்கு சட்ட ரீதியான ஆலோசனை.
**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்**
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 221 9016

**ஜேர்மன் விசா**
படிக்க, தொழில் புரிய, குடியமர
இலவச கட்ட
ஆலோசனைகளுக்கு
**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 221 9016

**கணினி மலிவு விற்பனை**
P iv கணினி மற்றும் LCD Monitor மற்றும் அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும் 23,750/= விலையில் விற்பனைக்குண்டு.- Free 4 GB Pen/Web cam.
**SKY COMPUTER**
162, பிரதான வீதி, யாழ். 0212221417 / 737, K.K.S Road, யாழ். 2224865, 0750698608
Skype, V/call, Internet பாவிக்கலாம்,
ஒரு வருட உத்தரவாதம் உண்டு
மொத்தமாக DDR I, DDR II, DDR III, POWER S/Y

**அரிய சந்தர்ப்பம்**
A/L பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
1) Telecommunication Systems Eng
2) Civil engineering / Quantity surveying
3) Electrical & Electronics Engineering
ஆகிய துறைகளில் தமிழ் மொழி விளக்கங்களுடன் கொழும்பில் உள்ள APPS நிறுவனத்துடன் இணைந்து City & Guilds exam (London) இற்கு பயிற்றுவிக்கப்படுகின்றது. பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு அந்தந்தத் துறைகளில் அதிகூடிய சம்பளத்துடன் வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்படும்.
அல்லது
London இல் மேற்படிப்பினைத் தொடர்வதற்கு Visa பெற்றுத் தரப்படும்.
வகுப்புக்கள் ஆரம்பம் 29.01.2012
விவரங்களுக்கு நேரில் வரவும்.
**JAFFNA TECHNICAL INSTITUTE**
கிளை: 92/1, இராமநாதன் வீதி, (கலட்டிச்சந்தி அருகில்) யாழ்ப்பாணம். T.P.: 0215670345
இல.45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் முன் வீதி) யாழ்ப்பாணம். T.P.: 0718561654, 0778249949

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
அனைத்துப்பிரிவுகளும் ஆரம்பமாகின்றன
Batch I: 27.01.2012 11.00 - 12.00
Batch II: 28.01.2012 03.00 - 5.00
Batch III : 29.01.2012 11.00 - 12.00

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
O/L மற்றும் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months


**Diploma In English** (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We guarantee minimum band 5.0 upwards

**A1 Exam - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
- 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliam Kulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

## வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
25-01-1942

மறைவு
28-12-2011

அமரர்
**செல்லர் குணபாலசிங்கம்**
(குணம்-உரும்பிராய் மேற்கு)

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசியிலும், அஞ்சலி செலுத்தி எம் துயரில் பங்குகொண்டவர்களுக்கும், அவர் நோயுற்றிருந்த போது சகல வழிகளிலும் துணை நின்ற சொந்தங்களிற்கும் நண்பர்களுக்கும், வைத்திய கலாநிதிகளுக்கும், எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (25.01.2012) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய மற்றும் அந்தியேட்டி நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(13393) (6,7,10)

தகவல்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.